www.padippakam.com



www.padippakam.com



# தொழிலாளர் சட்டம் விவசாயிகளின் உரிமையே



> “இந்தச் சட்டத்தில், தொழிலாளி என்ற சொல்லை, தொழிற்சாலைகளில் பணிபுரியும் உழைப்பாளிகளுக்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பொதுவான சொல்லாக - உரிமையாகவே பயன் படுத்தியுள்ளேன்.
>
> எனவே, பிற்காலத்தில் தொழிற்சாலைகளை மய்யப்படுத்தி இயற்றப்படும் சட்டங்களும் அதன் வழிப் பயனும் - நம் நாட்டின் விவசாயத் தொழிலாளர்களுக்கும் உரிமையானது என்பதை இங்கு தெளிவாக்குகிறேன்.”

நமது தொன்மையான பழக்கங்களினால், சில சொற்களின் பொருளை மிகவும் குறுகிய கண்ணோட்டத்துடனே புரிந்து கொண்டுள்ளோம். விவசாயக் கூலிகள், விவசாயிகள், விவசாயம் சார் உழைப்பாளிகள், மூட்டை சுமப்பவர்கள் பற்றி டாக்டர் தேஷ்முக் ஒரு கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

அய்ந்து லட்சம் ரூபாய் வரி செலுத்தக்கூடிய அளவிற்கு நிலம் வைத்திருக்கும் பெரு விவசாய நிலத்தின் உடைமையாளர்களைத் தவிர, பிற விவசாயம் சார் உழைப்பாளிகளை நான் விவசாயத் தொழிலாளர்கள் என்று குறிப்பிடுகிறேன்.

மேலும் நிலத்தை குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்பவர்கள், சொந்தமாக நிலம் வைத்து பயிர் செய்பவர்கள், தன்னிடம் உள்ள நிலத்தில் குறைந்தது இரண்டு ஏக்கர் நிலத்திலாவது பயிர் செய்பவர்கள் ஆகியோர் விவசாயத் தொழிலாளர்கள் என்ற வரையறைக்குள் அடங்குவர்.

இந்தத் தொழிலாளர்களுக்கு அரசு, விவசாயம் பற்றிய அடிப்படையான கல்வி அளிக்க முயற்சி மேற்கொள்கிறது. விவசாயக் கல்வி, விவசாயம் பற்றிய ஆய்வு, பயிர் பாதுகாப்பு, பயிர்களைப் பூச்சிகளிடம் இருந்து பாதுகாப்பது பற்றிய விவரங்களை - விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

நிலத்தின் மீது உரிமை அல்லது நிலச் சட்டங்கள், நிலம் என்ற சொத்தின் உரிமையாளர் மற்றும் அந்த நிலத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்களிடையே எழும் பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையிலான சட்டம் ஆகியவற்றை நான் பிரிவு 26A மற்றும் Bஇல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இதில் உள்ள சட்டங்கள், சாமான்ய மனிதனின் நிலத்தை உறுதி செய்வதையே முதன்மையானதாகக் கொண்டு வரையறை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களைத் தங்களது வழிச் சட்டங்களாகக் கொண்டு மாநில அரசுகள் செயல்பட வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தில், தொழிலாளி என்ற சொல்லை தொழிற்சாலைகளில் பணிபுரியும் உழைப்பாளிகளுக்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பொதுவான சொல்லாக - உரிமையாகவே பயன்படுத்தியுள்ளேன்.

எனவே, பிற்காலத்தில் தொழிற்சாலைகளை மய்யப்படுத்தி இயற்றப்படும் சட்டங்களும் அதன் வழிப் பயனும் நமது நாட்டின் விவசாயத் தொழிலாளர்களுக்கும் உரிமையானது என்பதை இங்கு தெளிவாக்குகிறேன். இந்த உரிமையை பிரிவு 26, விவசாயிகளுக்கு உறுதி செய்கிறது.

இதைத் தவிர, வேலை செய்யும் நிர்பந்தம், வேலையின் தன்மை, தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் வேலை தரும் முதலாளி, தொழிலாளிகளுக்குச் செய்ய வேண்டிய அடிப்படை வசதிகள், வேலைக்கேற்ற கூலி, உடல் நலத்தைக் காக்க ‘இன்ஸ்சூரன்ஸ்’ வசதி, குறைந்தபட்ச பென்ஷன் போன்றவைகளை விவசாயத்தில் உழைக்கும் உழைப்பாளிகளும் பெறும் வகையில், நான் சட்டத்தை வடிவமைத்துள்ளேன்.

இதுவரை தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டும் என்ற வகையில் உள்ள நடைமுறைப் பயன்கள், இனி விவசாயப் பணியில் ஈடுபட்டு அதன் மூலம் வாழ்க்கை நடத்தும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

இதன் மூலம் பிரிவு 21 மற்றும் 24 ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகள், ஆலைத் தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்கள் ஒரே நிலையில் வைத்து நீதி செய்யப்படுவர்.

பிரிவு 28, தொழிலாளர் அமைப்பு உருவாக்கி செயல்படும் உரிமையை விவரிக்கிறது. இத்தகைய அமைப்பு அல்லது சங்கங்களை தொழிற்சாலைப் பணியாளர்கள் போலவே, விவசாயத் தொழிலாளர்களும் அமைத்து நிர்வாகம் செய்யலாம். தங்களின் தேவைகளை சட்டத்தின் முன் வைத்து அதற்கான நீதியைப் பெறலாம்.

விவசாயிகளுக்கு தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து வித உரிமைகளையும் நான் சட்டத்தில் உறுதி செய்துள்ளேன். இதைத் தவிர்த்து, விவசாயிகளுக்குக் கூடுதலான உரிமைகளைப் பின்வரும் சட்டங்கள் மூலம் கிளைச் சட்டங்களை உருவாக்க, நான் போதுமான வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளேன்.

*‘பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு’ : 13 பக்கம் : 932*

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



அணு அணுவாய்ச் சிதறி
வலியில் துடித்து
முள்ளில் நீந்தி
உயிர் மீள சம்மதம்.
ஒவ்வொரு சுழற்சிக்கும்
கறையாகிப் போன
பைகளில் இருந்து
காசு இறங்குமென்றால்...



படிப்பகம்

www.padippakam.com




# பொருளடக்கம்




**7 நிகழ்வு**
சாதி ஒழிப்பே குறிக்கோள்

**8 விருது**
"என் தாய் தந்த விருது"
பாமா

**10 மீறல்**
சர்வாதிகார காவல் துறை
உண்மை அறியும் குழு

**12 வெறியாட்டம்**
உடைமைகளை அழித்தே நீதி?
யாக்கன்

**14 வன்முறை**
ரீட்டா மேரிக்கு நேர்ந்த கொடுமை
கோ. சுகுமாரன்

**16 தீர்வு**
எங்கிருந்து தொடங்குவது...
ந. கோபி

**19 மீண்டெழுவோம்**
இந்தியா ஒரு ஜனநாயக நாடு - நம்புங்கள்

**20 திறனாய்வு**
தலித்தாக உணர்வது பற்றி...
அழகிய பெரியவன்

**22 பேட்டி**
உண்மைக் கூறுகளை நோக்கி தலித் அரங்கியல்
அமைதி அரசு

**26 போராளி**
மால்கம் எக்ஸ்
ரவிக்குமார்

**30 நம்மைச்சுற்றி**
கேடு கெட்ட தேசங்களின் நியாயமற்ற போர்
மாயா

**33 அறிவாயுதம்**
சாதி இந்துக்களிடையே பிரச்சாரம் தேவை
சங்கமித்திரை

**34 ஜாதி**
சமூகச் சிக்கல்களின் மய்யம்
நீதியரசர் கே. ராமசாமி




■ அட்டை வடிவமைப்பு : யாக்கன்
■ இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ் பிரேமா



படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமையின் காவலர்கள்

தமிழக அரசியல் அரங்கு, தேர்தல் இல்லாத இந்த நேரங்களில்கூட பரபரப்பு மிகுந்து காணப்படுகிறது. சென்னை கடற்கரையில் உள்ள கண்ணகி சிலை அகற்றப்பட்டதுதான் இதற்குக் காரணம். ஆட்சியாளர்களின் மூட நம்பிக்கையால் இது அகற்றப்பட்டுள்ளது என்பதால், இச்சிலையை மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

அடுத்து, டில்லியில் உள்ள பாம்நொலி கிராமத்தில் நான்கு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட பெரியார் மய்யம், 3.12.2001 அன்று எந்தவிதக் காரணமுமின்றி - சட்டத்திற்குப் புறம்பாக, டில்லி உயர்நீதிமன்ற ஆணையைக்கூட பொருட்படுத்தாமல், அரசு எந்திரங்களாலேயே இடிக்கப்பட்டுள்ளது, வன்மையான கண்டனத்திற்குரியது. இக்குற்றத்தைச் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதுடன், அரசே பெரியார் மய்யத்தைக் கட்டித்தர வேண்டும்.

இவ்விரண்டையும் நாம் கண்டிக்கிற அதே நேரத்தில், இது தொடர்பாக சில கேள்விகளையும் முன்வைக்க விரும்புகிறோம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சங்கரலிங்கபுரத்தில் 150க்கும் மேற்பட்ட தலித் வீடுகள், காவல் துறையினரால் சூறையாடப்பட்டு - ஏறக்குறைய 50 லட்சம் பெருமானமுள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. இச்சேரியில் உள்ள மக்கள், காவல் துறையின் அட்டூழியத்துக்கு அஞ்சி, அகதிகளாய் அலைந்து கொண்டிருக் கிறார்கள். 68 பெண்கள் உட்பட 145 பேர்கள் மீது பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு 50 நாட்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சி நிலையிலிருந்து கொண்டு, கண்ணகி சிலையில் அரசியல் செய்பவர்கள் கூட, சேரிமக்களின் வாழ்வியல் உரிமைகளை மறுத்து காவல் துறை நடத்திக் கொண்டிருக்கும் அட்டகாசத்தைக் கண்டித்து ஒரு அறிக்கைகூட விடவில்லை. சேரி மக்கள் படும் துன்பங்கள், இவர்கள் பார்வையில் ஒரு பிரச்சினையாகக்கூடப் படவில்லை.

கற்சிலை அகற்றப்பட்டதையும் கட்டிடம் தகர்க்கப்பட்டதையும் கண்டு பதை பதைக்கும் தலைவர்கள், இயக்கங்கள், கட்சிகள் - சேரி மக்களின் மீது இவ்வளவு பெரிய வன்கொடுமை நடந்தும் - அவர்களின் எதிர்காலமே நாசமாய்ப் போனதைக் கண்டும் பதை பதைக்கவில்லையே ஏன்? கண்ணகி சிலைக்காக ஒன்றுகூடிய தமிழ்ச் சான்றோர்கள், கைக்குழந்தைகளுடன் சிறையில் வாடும் சேரிப் பெண்களுக்காக ஒரு வார்த்தை கூட பேசவில்லையே ஏன்? சங்கரலிங்கபுர தலித்துகள் தமிழர்கள் இல்லையா? கருணாநிதி கைது செய்யப்பட்டார் என்றதும் பதைபதைத்துப் போனவர்கள், ஒரு சேரியே தாக்கப் பட்டு, சூறையாடப்பட்டதற்காக ஊசிமுனை அளவுகூட எதிர்ப்புக் காட்டவில்லையே!

மேலும், அக்டோபரில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின்போது மதுரை - பாப் பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் மற்றும் விருதுநகர் - கொட்டச்சினேந்தல் ஆகிய தனித் தொகுதிகளுக்கான ஊராட்சித் தேர்தலை நடத்த விடாமல், சாதிவெறியர்கள் தடுத்து நிறுத்தி உள்ளனர். இத்தகு ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்க முன் வந்தது யார்? உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில், ஒரு பஞ்சாயத்துத் தேர்தலில் ஜாதியின் காரணமாக வேட்பு மனுகூட தாக்கல் செய்ய முடியவில்லை.

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டால், துடிதுடித்து எழும் ஊடகங்கள், உழைக்கும் எளிய மக்கள் மீது காவல் துறை நடத்தும் தாக்குதல்களைப் பற்றி வாய் திறப்பது இல்லையே ஏன்?

இலங்கையில் தமிழர்களுக்கு பாதிப்பு என்றவுடன், ஈழத் தமிழர் மாநாடு நடத்துபவர்கள், டெல்லியில் பெரியார் மய்யம் தகர்க்கப்பட்டதற்காக, மனிதச் சங்கிலி போராட்டம் நடத்துபவர்கள், ஒரு சிலை அகற்றப்பட்டதற்காக உயிரையேவிடத் தயாராகின்றவர்கள், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டவுடன் பதறிப் போகின்றவர்கள், மனித நேயம் பேசும் இலக்கியவாதிகள், சேரித் தமிழர்களின் வாழ்வியல் உரிமைகள் நசுக்கப்படுகின்றபோது, அவர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்படுகின்றபோது மட்டும் - கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்கள் என்றால், இவர்கள் சாதியத்தின் - தீண்டாமையின் காவலர்களேயன்றி வேறென்ன?

●

தலித் முரசு

Volume : 5 Issue : 7

சனவரி, 2002
ஆண்டு : 5 - இதழ் : 12

●

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரகேசன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

●

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

●

முகவரி
ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்



மனிதன் அறிவை மய்யமாகக் கொண்டு தான் வாழ வேண்டும். கலைகளும் இலக்கியங்களும் தமிழனை போதை வயப் படுத்துகின்றன. எனவே, அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிற பெரியாரின் குரலில் தெறிப்பது, கலைகளின் மீதுள்ள வெறுப்பு அல்ல; மனிதனின் மீதுள்ள அக்கறையும் அன்பும். ஆனாலும் மனிதர்களுக்கு சில சலுகைகள் தேவைப்படுகிறதே, அதற்கு கலைகளும் இலக்கியமும் விழாக்களும் வேண்டுமே என்ற இயல்பான தேவையையும் பெரியார் சிந்தித்தார்.

வழக்கறிஞர் அருள்மொழி, சென்னையில் நடைபெற்ற பெரியாரியல் கருத்தரங்கில்.



கல்வியைக் காவிமயமாக்க வேண்டாம் என்கிற கோரிக்கையினை முன்வைத்த போது, இன்று வாஸ்து சாஸ்திரத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த முன்வருகின்ற கட்சிகள், மத்திய அரசின் சோதிடக் கல்வியை எதிர்த்து என்ன போராட்டம் நடத்த முன்வந்தார்கள்? தமிழ்க் கலாச்சாரத்திற்காக இப்போது கொதித்தெழுகின்ற சிலருடைய தமிழ் உணர்வு, மத்திய அரசு என்றால் மட்டும் மங்கிப் போகிறதே ஏன் என்பதையும் தமிழ்ச் சான்றோர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

– பீட்டர் அல்போன்ஸ், பொதுச் செயலாளர், தமிழ் மாநில காங்கிரஸ், அறிக்கை ஒன்றில்




யாக்கன்



மனித நாகரீகம் தோன்றிய காலம் தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும் வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானுடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களில் இருந்தே வரலாறு படைக்கும் சக்தி பெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள்.

வே. பிரபாகரன், தமிழீழ தேசியத் தலைவர் மாவீரர் நாளன்று ஆற்றிய எழுச்சியுரையில்.



அரச பயங்கரவாதத்தை ஆளும்கும்பல் எப்போதும் ஆதரிக்கவே செய்யும். அதனை உடைத்தெறிவது உழைக்கும் மக்களின் கடமை. உண்மையான பயங்கரவாதி யார்? பின்லேடன் என்று அமெரிக்கா சொல்கிறது. ஒரு மாணவனை அல்ல; ஒரு சாமானியனைக் கேளுங்கள், அவன் இன்று போலிசை நோக்கி கை நீட்டுவான். எனவே, மனித உரிமை பற்றிய விழிப்புணர்ச்சியை போலிசுக்கு அடிப்படைக் கல்வியாய் அமைத்திட வேண்டும்.

– திருமாவளவன், அமைப்பாளர் விடுதலைச் சிறுத்தைகள், 'இந்தியா டுடே' இதழில்.



படிப்பகம்

www.padippakam.com




# சாதி ஒழிப்பே குறிக்கோள்

டிசம்பர் 25 - கீழ்வெண்மணி சாதி ஒழிப்பு வீரர்கள் நினைவு நாள். 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று மாலை சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் 'சாதி ஒழிப்பு வீரர்கள் மாதம் - நினைவுக் கருத்தரங்கம்' சுயமரியாதை இயக்கத்தினரால் கூட்டப்பட்டது.

கருத்தரங்கில் பேசிய அயன்புரம் ராசேந்திரன், சுயமரியாதை இயக்கம் மீண்டும் ஏன் உருவாக்கப்பட்டது என்பதற்கான காரணத்தை விளக்கினார். "இன்று சுயமரியாதை இயக்கத்தின் தேவை எழுந்துள்ளது. பெரியார் சாதி ஒழிப்பு வீரர். அவர் தனித் தமிழ் நாடு பற்றி கேட்டபோது கூட, தனித் தமிழ் நாட்டை 'அகண்ட தேசம்' என்ற நோக்கில் கேட்கவில்லை. தஞ்சாவூர் மாவட்ட அளவிற்கு தனித் தமிழ் நாடு அமைந்தால் கூட போதும். ஆனால், அது சுயமரியாதை நாடாக இருக்க வேண்டும் என பெரியார் கேட்டார். சாதி ஒழிப்பை முன்னிறுத்தி - சுயமரியாதை இயக்கம் தொடர்ந்து போராடும்" என்றார் ராசேந்திரன்.

வரவேற்புரை ஆற்றிய அமுதா, சங்கரலிங்கபுரத்தில் தலித் மக்கள் தாக்கப்பட்டதை, தமிழ் பெயரால் இயங்கும் எந்த இயக்கமும் ஏன் கண்டிக்கவில்லை என்ற கேள்வியை எழுப்பினார். கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசிய அ.மார்க்ஸ், "தாழ்த்தப்பட்டோருக்கான விடுதலை சுயமரியாதையினாலேயே உருவாகும். முக்கியமாக, தேசப்பற்றிலிருந்து தாழ்த்தப்பட்டவர்கள் விடுதலை பெற வேண்டும்" என்றார்.

கவிஞர் இன்குலாப் பேசும் போது, "எங்கு ஒடுக்குமுறை இருக்கிறதோ அங்கெல்லாம் எதிர்ப்பும் நிலவியே இருக்கும். ஆயிரமாண்டுகளாக சாதி ஒடுக்குமுறையுடன் சாதி எதிர்ப்பும் இணைந்தே இருந்தன. சித்தர் பாடல்கள், மணிமேகலை காப்பியம் போன்றவை வரலாற்றில் இருட்டடிப்பிற்கு ஆட்படுகின்றன. இந்த இருட்டடிப்பு, டெல்லியில் பெரியார் மய்ய இடிப்பு சம்பவம் வரை தொடர்கிறது" என்றார்.

சட்டக் கல்லூரி மாணவர் தய். கந்தசாமி, கீழ்வெண்மணிக்கு அடுத்த ஊர்க்காரர். அவர் பேசும் போது, "வெண்மணி தியாகிகள் நினைவு நாளை கம்யூனிஸ்டுகள் வர்க்க ஒற்றுமை நாளாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு தலித் இயக்கம் வளருவது பிடிக்கவில்லை. தலித் இயக்கத் தலைவர்களோ தேர்தல் சீட்டு அரசியல் நடத்துகிறார்கள்" என்றார்.

ஆதித்தமிழர் பேரவை அதியமான் தமது உரையில், "தலித் மக்களிடையே பள்ளர், பறையர் போன்றோரால் ஒடுக்கப்படும் இனமாய் சக்கிலியர்கள் இருக்கிறார்கள். தாராபுரத்திலுள்ள கிராமங்களில் மூன்று குவளை முறை கடைப்பிடிக்கப்படுகிறது. வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கருடன் பங்கேற்ற எல்.சி. குருசாமி போன்ற அருந்ததியினத் தலைவர்கள் இருட்டடிப்புச் செய்யப்படுகிறார்கள்" என்றார்.

ரெட்டமலை சீனிவாசன் பேரவை எஸ். நடராஜன், "மார்க்சியமும் திராவிடமும் நம்மை ஏமாற்றி விட்டது என்பதே மடமைத்தனம். நாம் தான் போராட வேண்டும். சாதி ஒழிப்பிற்கு திராவிட இயக்கங்களையும் ஒழிக்க வேண்டிய கட்டாயமுள்ளது" என்றார். த.மு.மு.க. தலைவர் ஜவாகிருல்லா, "சாதி ஒழிப்புப் போராட்டத்தில் தலித் மக்களுடன் முஸ்லிம்களும் இணைந்து போராடுவார்கள்" என்றார்.

தனியார் துறைகளில் இடஒதுக்கீடு, இரட்டை வாக்குரிமை, சங்கரலிங்கபுர மீறல்கள் குறித்த நடவடிக்கை, உலகமயமாக்கல் எதிர்ப்பு, பொடோ எதிர்ப்பு, போர் எதிர்ப்பு போன்ற தீர்மானங்களும் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டன. •

- நம் செய்தியாளர்

**"சாதி ஒழிப்புப் போரை முன்னெடுத்து அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை நவம்பர் 26 (1957) அன்று நடத்திக் காட்டினார் பெரியார். இதனால் ஆண்டுதோறும் 26 நவம்பர் முதல் டிசம்பர் 25 வரை சாதி ஒழிப்பு வீரர்களை நினைவு கூறுவதென்று சுயமரியாதை இயக்கம் முடிவு செய்திருக்கிறது."**



படிப்பகம்

www.padippakam.com



# "என் தாய் தந்த விருது"

## 'தலித் முரசு' கலை இலக்கிய விருது வழங்கும் விழாவில் எழுத்தாளர் பாமா

சாதியச்சக்கரத்தின் அடியில் சிக்கி நசுங்கிக் கொண்டிருக்கும் தலித் மக்களின் வாழ்நிலையை எழுதினால், தங்கள் பேனா முனை தீட்டுப்பட்டு விடும் எனப் புறக்கணித்த இலக்கியவாதிகள் மத்தியில் - சாதியால் தனக்கேற்பட்ட தழும்புகளை 'கருக்கு' 'சங்கதி' என்று இரு நாவல்களாகத் தந்தவர் பாமா.

தலித் மக்கள் பேசும் வழக்கு மொழியையே, தன் கதைக்கு தாய் மொழியாக்கியவர் பாமா. தலித் சமூகத்தில் பிறந்து விட்டோமே என்று கூனிக்குறுகி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இவரது படைப்புகள் ஒரு போர்வாள். இவருடைய கதாபாத்திரங்கள் எல்லாம் இன்றும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். இவரது படைப்பான, 'கருக்கு' நாவலின் ஆங்கிலப் பதிப்பாக்கத்திற்கு 'கிராஸ்வேட்' விருது கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தலித் இலக்கியத் தளத்திலும் சமூகத் தளத்திலும் தொடர்ந்து பங்காற்றி வரும் பாமாவிற்கு தோள் கொடுக்கும் முகமாக, கடந்த டிசம்பர் 6 அன்று, 'தலித் முரசு கலை இலக்கிய விருது' அவருக்கு வழங்கப்பட்டது. காஞ்சிபுரத்தில் நடந்த இவ்விழாவில் பாமாவுக்கு கவிஞர் இன்குலாப் தலித் கலை இலக்கிய விருதை வழங்கிச் சிறப்புரையாற்றினார். மேலும், தலித் முரசில் அய்ந்து ஆண்டுகளாக வெளிவந்த அம்பேத்கர் பேசுகிறார் - பெரியார் பேசுகிறார் பகுதிகளின் தொகுப்பான 'வடநாட்டுப் பெரியார் தென்னாட்டு அம்பேத்கர்' என்ற நூலை பாமா வெளியிட்டார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட ரெட்டமலை சீனிவாசன் பேரவை தலைவரான எஸ். நடராஜன் தமது கருத்துரையில், "பனைமரத்தில் காணப்படும் மிகவும் கூர்மையான பட்டைக்கு 'கருக்கு' என்று பெயர். அதையே தன் நூலிற்குத் தலைப்பாக வைத்ததற்குக் காரணம், அந்த நாவல் தலித் மக்கள் மீது ஏவப்படும் கொடுமைகளை வெட்டி வீழ்த்துவதற்கும், ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் உதவ வேண்டும் என்பதற்காகத்தான் அந்த பெயர் வைக்கப்பட்டிருக்குமோ என நான் நினைக்கிறேன்," என்றார்.



மாற்கு, ஏபி. வள்ளிநாயகம், பாமா, எஸ். நடராஜன், இன்குலாப்

அவரையடுத்துப் பேசிய எழுத்தாளர் ஏபி. வள்ளிநாயகம், "தலித் மக்கள் அடிமைப்பட்டிருப்பதை எதார்த்தமாகவும், அவர்களுக்குப் புரியும்படியும் சொல்வதுதான் நூலாசிரியரின் கடமை. அதை அற்புதமாக செய்து முடித்தவர் பாமா. அவரின் பின்னால் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் அணிதிரளத் தயாராக இருக்கிறார்கள்" என்றார்.

'கலைமாமணி' அமலதாஸ் தன்னுரையில், "உண்மையிலேயே இந்த நாவலைப் படிக்கும் பொழுது என்னுடைய இளம் வயதில் நான் அனுபவித்த அவலங்கள், கொடுமைகள் நினைவுக்கு வந்தன" என்றார்.

பாமாவின் ஊரைச் சேர்ந்தவரான ஓவியர் யாக்கன் பேசிய போது, "பாமா பிறந்த ஊரான புதுப்பட்டியிலிருந்து பல எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு நாள் வ. புதுப்பட்டி கண்மாயில் உள்ள கருவேல மரங்களின் அடியில் இன்றும் நடந்து கொண்டிருக்கும் விவாதத்தில் பங்கேற்றவர்கள்தான். அவர்ளுள் ஒருவர்தான் ராஜ் கவுதமன். அவர் இன்று சிறந்த எழுத்தாளராகத் திகழ்கிறார். ஆனால், எந்த விவாதத்திலும் கலந்து கொள்ளாமல் சாதாரண பெண்ணாக, கிறித்துவ துறவியாக வாழ்ந்த பாமா, ஒரு புயலென புறப்பட்டு இந்தக் காரியத்தை செய்திருக்கிறார்".

"பாமா எழுதியதை மிக உயர்ந்த எழுத்தாக, படைப்பாகத்தான் உங்களால் பார்க்க முடியும். ஆனால், நாங்கள் 'கருக்கு' நாவல் அல்ல; அது உயிரோட்டமான மனிதர்களுடைய தொகுப்பு என்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த நாவலில் முழுக்க வலம் வந்து கொண்டிருப்பவர்கள் இன்றும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அந்த மக்களின் உணர்வுகளை 'கருக்கு' அழுத்தமாக வெளிப்படுத்தியதால்தான் அதற்கு இவ்வளவு பெரிய வெற்றி'' என்றார்.

எழுத்தாளர் மாற்கு தனது உரையில், ''பாமா அவர்கள் ஒரு சாதாரண நிகழ்வைக்கூட துல்லியமாகப் பார்த்து சுவாரசியமாக எழுதக்கூடியவர்கள். கன்னியாஸ்திரி இல்லத்தில் நடக்கும் நிகழ்வுகளை எனக்கு எழுதிய பல கடிதங்கள் நிரூபித்திருக்கின்றன. அந்தக் கடிதங்களை சேர்த்து வைத்திருந்தால் கூட, 'கருக்கு' போல ஒரு நாவலை உருவாக்கியிருந்திருக்கலாம். அவருடைய எழுத்துத் திறமையைப் பார்த்த நாங்கள் அவர் ஊரில் நடந்த சாதி தீண்டாமையையும் - மக்களின் நிலைமையையும் அவர்களின் பேச்சு நடையிலேயே எழுதச் சொன்னோம். பிறகு அதை நாவலாக வடிவமைத்தோம். மக்களின் மத்தியில் 'கருக்கு' சிறந்த வரவேற்பைப் பெற்றது'' என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் அழகிய பெரியவன் தமது உரையில், ''விழாவில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகமாகக் கலந்து கொண்டு இருப்பதைப் பார்க்கும் போது, மண்ணைச் சார்ந்த படைப்பாளிக்கு கொடுக்கும் கவுரவமாக இதை எண்ணுகிறேன். 'கருக்கை'ப் படித்தவுடன் அது என்னை ஒரு உலுக்கு உலுக்கியது. உறுதியாகச் சொன்னால், தன்னையும் தன் இனத்தின் வரலாற்றையும் உலுக்கிய நாவல் கருக்காகத்தான் இருக்க முடியும். இதுநாள் வரை எழுதப்பட்டு வந்த எழுத்து மொழியை - இது நாள்வரை வழங்கப்பட்டு வந்த கருத்தை - ஒரு குறுக்கு வெட்டாக வெட்டிய நாவல் கருக்கு'' என்றார்.

'தலித் முரசு' பொறுப்பாசிரியர் புனித பாண்டியன் பேசுகையில், ''இந்த ஆண்டு முதல் 'தலித் முரசு' - கலை இலக்கிய விருது வழங்க தொடங்கியிருக்கிறது. இனி, ஆண்டுதோறும் தலித் படைப்பாளிகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படும். தோழர் பாமா இலக்கியத் தளத்தில் ஏற்படுத்திய கலகம், இந்தியத் துணைக் கண்டம் எங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இவருக்கு இவ்விருதினை வழங்கியதன் மூலம் இவ்விருதுக்குதான் பெருமை என நாங்கள் கருதுகிறோம்,'' என்றார்.

விருதுக்கு நன்றி தெரிவித்த, பாமா தனது ஏற்புரையில், ''தலித் முரசு எனக்கு விருப்பமான பத்திரிகை. அது வழங்கிய விருதை எனக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரமாக - என் தாய் தந்த விருதாக நினைக்கிறேன். பெரியார், அம்பேத்கர் புத்தகத்தை வெளியிடும் வாய்ப்பு, எனக்கு கிடைத்த பெருமையாகும். விருது கிடைத்ததன் மூலம் இன்னும் எனக்கு அதிகப் பொறுப்புகள் கிடைத்ததாகத்தான் கருதுகிறேன்,'' என்றார்.

விழாவின் இறுதியில் ராஜ் நன்றி கூறினார். தலித் கலை இலக்கியத் தளங்களில் செயலாற்றி வரும் தலித் படைப்பாளிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இவ்விழா அமைந்தது.

- ஆலிஸ்

## 'தலித் முரசு' கலை இலக்கிய விருது

தலித் மக்கள் விடுதலையை வென்றெடுக்க - சமூக, அரசியல், பண்பாட்டுத் தளத்தில் 'தலித் முரசு' தொடர்ந்து பங்களிப்புச் செய்து வருகிறது. கலை இலக்கியக் களத்தில் நின்று போராடி வரும் தலித் படைப்பாளிகளுக்கு, தோள் கொடுக்கவே இவ்விருது வழங்கப்படுகிறது.



அந்த வகையில், தனித்துவமிக்க ஓர் இலக்கிய உருவாக்கத்தை நிறுவி, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மறுவாசிப்பின் அவசியத்தை அழுத்தமாக உணர்த்தியவர் பாமா.

கலகத் தன்மை கொண்ட அவரது படைப்புகள், உளுத்துப்போன இலக்கிய மரபுகளை நேருக்கு நேர் சந்தித்து எதிர்ச் சொல்லாடல்கள் மூலம் அதன் எல்லா வரையறைகளையும் உடைத்துக் கொண்டு வெளிப்பட்டது.

1992இல் வெளியான 'கருக்கு' தமிழகச் சூழலில் ஏற்படுத்திய தாக்கம், தலித் இலக்கிய வரலாற்றிற்கு ஒரு ஆழமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. தலித் மக்களின் வாழ்வை, வரலாற்றை, பண்பாட்டை உயர்த்திப் பிடித்தது.

பீடங்களிலிருந்த விருதுகளை தன் காலடியில் வீழ்த்தியது 'கருக்கு'. தொடர்ந்து, 1994இல் 'சங்கதி' வெளியானது. கலகத் தன்மை கொண்ட தலித் பெண்களின் வாழ்வியலை அழுத்தமாகப் பதிவு செய்தது 'சங்கதி'.

'கிசும்புக்காரன்' சிறுகதை தொகுதியும், இன்னும் 20க்கும் மேற்பட்ட சிறு கதைகளையும் படைத்திருக்கிறார் பாமா. 'கருக்கு' மற்றும் சிறுகதைகள் ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாமல், சமூக, அரசியல், பண்பாட்டுத் தளத்திலும், விடாமுயற்சியுடன் இயங்கி வரும் பாமா அவர்களைப் பாராட்டியும், தலித் இலக்கியத்தின் முனையைக் கூராக்க, தொடர்ந்து தனது பங்களிப்பைச் செய்ய வாழ்த்தி - 'தலித் முரசு கலை இலக்கிய விருது' வழங்கப்படுகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

# சட்டக் கல்லூரி மாணவர்கள் மீதான தாக்குதல்

சட்டத்தைப் புறக்கணித்து, சர்வாதிகாரமாக நடந்து கொண்ட காவல் துறை

டிசம்பர் 7 அன்று இரவு சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி விடுதி மாணவர்கள் மீது தமிழக காவல் துறையினர் தாக்குதல் நடத்தினர். ஓட்டல் ஒன்றில் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் நடந்த சண்டை முற்றி, பொதுமக்கள் - மாணவர் கலவரமாக மாறியதென்றும், அக்கலவரத்தை முறியடிக்கவே காவலர்கள் சென்றனர் என்றும் காவல் துறை தரப்பில் சொல்லப்படுகிறது.

தமிழக அரசின் விலைவாசி உயர்வைக் கண்டித்து - சாலை மறியல், ஆர்ப்பாட்டம் என தாங்கள் ஈடுபட்டதால் ஏற்பட்ட விளைவே, சமயம் பார்த்துக் கொண்டிருந்த காவல் துறையினரின் தாக்குதல் என மாணவர்கள் காரணம் சொல்கிறார்கள்.

''1995இல் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு காவலர்கள் ஒரு பாடம் கற்பித்தனர். அதற்குப் பிறகு இப்போது தான் 2001இல் சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடம் கற்பித்திருக்கிறோம்'', என கீழ்ப்பாக்கம் தலைமைக் காவலர், உண்மையறியும் குழுவிடம் சொல்லியிருக்கிறார்.



காவலர்கள் கற்றுக் கொடுத்த பாடத்தினால், 32 மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். வேலூர் சிறையில் 35 மாணவர்கள் சிறைவாசம் அனுபவித்துத் திரும்பியிருக்கிறார்கள். பொது மக்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே தான் சண்டை என்று நிரூபிப்பதற்காக, சங்கம் தியேட்டர் ஊழியர் ஒருவரை காரணமே இல்லாமல் தனியாகப் பிடித்து இந்த வழக்கில் இணைத்து விட்டார்கள்.



'ஓட்டல் பிரச்சனை' நடந்ததாக சொல்லப்படும் நேரம் கடந்து, பிரச்சனைகள் முடிந்த பின் நள்ளிரவில் திருவல்லிக்கேணிப் பகுதியிலுள்ள இணை கண்காணிப்பாளர் நெல்சன் கிறிஸ்டோபர், திருமங்கலம் பகுதியிலிருந்த துணைக் கண்காணிப்பாளர் பாஸ்கரன், கீழ்ப்பாக்கம் ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கணக்கான காவலர்கள், எதிரி நாட்டை ஆக்கிரமிக்கும் ராணுவப் படை போல கல்லூரி விடுதியை சூழ்ந்து கொண்டு, தூங்கிக் கொண்டிருந்த, படித்துக் கொண்டிருந்த - அய்ம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களை கண்மண் தெரியாமல் அடித்திருக்கிறார்கள். பல மாணவர்களுக்கு மண்டை உடைந்து பலத்த காயமேற்பட்டுள்ளது.

சாலையில் சோடா பாட்டில்கள் உடைந்து கிடந்த நிலையில், காவலர்கள் மாணவர்களை அதன் மேலேயே நடக்க வைத்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். வேனில் ஏற்றும் பொழுதும் கீழே இறக்கும் பொழுதும் ஒவ்வொரு மாணவரையும் தனியே அடித்திருக்கிறார்கள். காவலர்கள் மாணவர்களைத் தாக்கி அழைத்து வரும் போது, ரவுடிகள் சிலரும் தாக்குதலுக்கு உதவியிருக்கிறார்கள். 12.8.01 அன்று நடந்த தி.மு.க. கண்டனப் பேரணியிலும் இதே வகையான தாக்குதல் உத்தி கையாளப்பட்டது நினைவிருக்கலாம்.

மாணவர்கள் மீது காவலர்கள் நடத்திய தாக்குதல்கள், இந்திய அரசியல் சாசனத்தின் விதிகள் 20,21,22 ஆகியவற்றை மீறியதாக அமைகிறது. இச்சம்பவத்திற்கு சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள், தாக்குதல் நடந்த பொழுது அங்கு வராத விடுதிப் பொறுப்பாளர்கள், மாணவர்களுக்கு சரியான சிகிச்சையளிக்காத அரசு மருத்துவமனை அதிகாரிகள், மாணவர்கள் தரப்பு நியாயத்தைக் கேட்காமலே அவர்களை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி, நீதித்துறை அலுவலர்கள் மற்றும் சட்டக் கல்லூரி முதல்வர், தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகத் துணை வேந்



படிப்பகம்

www.padippakam.com

தர் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அனைவரும் பொறுப்பாவார்கள்.

கீழ்ப்பாக்கம் ஜி-3 ஆய்வாளர் சுப்ரமணியன், மாணவர்களிடம், ''பறப்பசங்களுக்குப் பாடம் கற்பிக்கணும்'', என்று சாதிப் பெயரைச் சொல்லி இழிவான வார்த்தைகளால் திட்டி அடித்திருக்கிறார்.

தாக்குதலுக்கு காவல் துறையினர் சொன்ன காரணங்கள் அனைத்தும் பொய்யானதாய் - திரிக்கப்பட்டதாய் இருக்கிறது. மாணவர்களைத் தாக்கியதோடு அல்லாமல் அவர்கள் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டுள்ளன.

உண்மையறியும் குழுவினர் கண்டறிந்தவைகளின்படி, காவல் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளின் மத்தியில் தலித் என்ற பாகுபாடு இருந்ததைக் காண முடிந்தது. விடுதியில் மாணவர்களுக்கு குறிப்பாக, தலித் மாணவர்களுக்கான வசதிகள் மிக மோசமாக உள்ளதாகத் தெரிகிறது.

**எதிரி நாட்டை ஆக்கிரமிக்கும் ராணுவப் படை போல கல்லூரி விடுதியை சூழ்ந்து கொண்டு, தூங்கிக் கொண்டிருந்த, படித்துக் கொண்டிருந்த அய்ம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களை கண்மண் தெரியாமல் அடித்திருக்கிறார்கள்.**

வேப்பேரி காவல் நிலையத்தில் நள்ளிரவு முதல் அதிகாலை வரை மாணவர்களை வைத்திருந்ததற்கான எந்தவிதக் குறிப்புகளும் இல்லை. காவல் நிலையத்தில் மாணவர்களுக்கு சரியான உணவோ, தங்குமிடமோ அளிக்கப்படவில்லை. மருத்துவமனையில் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதிச்சீட்டு மற்றும் சான்றுகளை காவலர்களே பறித்துக் கொண்டு விட்டனர். அரசாங்கம் பிரச்சனையை ஆறப்போட்டு மறைத்து விடுவதற்காக 'கமிஷன்' ஒன்றை அமைத்துள்ளது.

அரசு எந்திரம் சங்கரலிங்கபுரம் சேரிக்குள் நுழைந்து தலித் மக்களைத் தாக்குவதோடு நின்றுவிடுவதில்லை. அதன் கைகள் அதிகார வெறியோடு மாணவர்களையும் சூறையாடத் தொடங்கியிருக்கிறது. பெருகி வரும் அத்துமீறல்கள், இந்த நாட்டின் ஜனநாயக பொய்திரையை அம்பலப்படுத்துகின்றன. ●

'காவல் நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்புப் பிரச்சாரம்' உண்மையறியும் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்குழுவில் பங்கேற்றோர் : எஸ். பாண்டியன், தியாகு, ஆசி பெர்னான்டஸ், புரசை கோ. தமிழேந்தி.

# உண்மையறியும் குழுவின் பரிந்துரைகள்

■ காவல் துறையினரின் அனைத்து நடவடிக்கைகளும் சட்ட விரோதமாகவும் இந்திய அரசியல் சாசனம், உச்சநீதி மன்றத் தீர்ப்புகள் மற்றும் சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும் உள்ளன. எனவே, மாணவர்கள் மீதான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.2,00,000 இழப்பீடாக வழங்க வேண்டும். கைது செய்ததும் காவலில் வைக்கப்பட்டதும் சட்ட விரோதம் என்பதால், இதற்குப் பொறுப்பான காவல் அதிகாரிகள் மற்றும் சட்ட விரோதக் காவலை அங்கீகரித்த நீதித்துறை அலுவலர் மீதும் வழக்கு தொடரப்பட வேண்டும்.



■ சாதிப் பெயரைச் சொல்லி மாணவர்களைத் தாக்கிய காவல் துறை ஆணையாளர் சுப்ரமணியம் மீது 'தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989' இன் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

■ மாணவர்களுக்கு சிகிச்சை அளிப்பது சம்பந்தமாக டாக்டர்கள் நடந்து கொண்ட விதத்தை மனித உரிமை மீறலாகக் கருதி அதனைக் கண்டிக்கிறோம். மருத்துவமனைக்கு வரும் எந்த நோயாளிக்கும் காயம்பட்டதற்கான சான்றிதழ் ஒரு உரிமையாகவே வழங்க வேண்டும். இதை செயல்படுத்த தவறும் மருத்துவர் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்.

■ காவல் துறையினர், அரசு ஊழியர்கள், நீதித்துறை அலுவலர்கள் ஆகியோர் மீது வழக்கு தொடரப்படுவதில் இருந்து பாதுகாப்பு வழங்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197 நீக்கப்பட வேண்டும்.

■ இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 19 வழங்கியுள்ள கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமையை முடக்கிப் போடும் முன்னெச்சரிக்கைக் கைதுக்கு வழி வகுக்கும் - குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 151, குற்றவியல் திருத்தச் சட்டத்தின் பிரிவு 7(1) (a) மற்றும் தமிழ் நாடு போலிஸ் சட்டத்தின் பிரிவு 41 ஆகியவை நீக்கப்பட வேண்டும்.

■ மனித உரிமைக் கோட்பாடுகளை செயலாக்கிட, தேசிய காவல் துறை ஆணைய அறிக்கையின் முக்கியமான சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 22 (3,4,5,6) ஆகியவை தடுப்புக் காவல் சட்டங்களை அங்கீகரிப்பதால், இதில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



ஒருவனின் உயிரைப் பறிப்பதைவிட, அவனது உடைமைகளை அழித்தொழிப்பது குரூரமான சிந்தனையின் - ஆழமான சதியின் வெளிப்பாடாகும்.

## சங்கரலிங்கபுரம் சேரி

# உடைமைகளை அழித்தே நீதி?

■ யாக்கன்

தலித் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் போதெல்லாம், அரசியல் சட்டங்களும், நீதி நெறிமுறைகளும், அரசு கேந்திரங்களும், அரசியல் சக்திகளும் ஆதிக்கச் சாதி வெறியர்களுக்குத் துணை நின்று, தலித் மக்கள் மீது பல்முனைத் தாக்குதல் நடத்துகின்றன. சங்கரலிங்கபுரம் சேரியில் நடந்ததும் அதுதான்.

தேர்தலில் போட்டியிட்டதற்காக தங்கள் மீது நள்ளிரவில் கொலை வெறித்தாக்குதல் நடத்திய நாய்க்கர்களைக் கைது செய்யக்கோரி, சாலை மறியலில் ஈடுபட்ட தலித் மக்கள் மீது, நாய்க்கர்சாதியைச் சேர்ந்த தலைமைக் காவலர் முருகன், கொலை வெறியுடன் தடியடி நடத்தினார். சீருடை அணியாதிருந்ததாலும், அவர் அப்பகுதியில் பணி செய்யாததினாலும், ஆத்திரம் கொண்ட சில தலித் இளைஞர்கள் முருகனை தடுத்து நிறுத்தினர். அப்போது நடந்த மோதலில் முருகன் இறந்து விட்டார்.

இந்தவொரு காரணத்திற்காக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதந் தாங்கிய போலிஸ், கும்பல் கும்பலாகச் சென்று சங்கரலிங்கபுரம் சேரியையே சுற்றி வளைத்தது. தெருவுக்குள் புகுந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் அடித்து நொறுக்கியது. எங்கும் கண்டிராத மனிதத் தன்மையற்றத் தாக்குதலை நடத்தியது போலிஸ் கும்பல்.

கட்டிய துணியோடு குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தைகள் வைத்திருந்த தாய்மார்கள், பள்ளி மாணவர்கள் என்று எல்லோரையும் கைது செய்தது. தப்பியோடி, பக்கத்துக் கிராமங்களில் தஞ்சமடைந்தவர்களையும், நள்ளிரவு நேரங்களில் கூச்சலிட்டபடி சுற்றி வளைத்துக் கைது செய்து சிறை வைத்தது.

சங்கரலிங்கபுரத்திற்குச் சென்ற அதிரடிப்படை போலிஸ்காரர் ஒவ்வொருவரும் இரக்கமற்ற மனிதநேயமற்றவர்கள் என்பதிருக்கட்டும், அகந்தையும் ஆணவமும் திமிரும் கொண்ட கேடிகள் என்பதிருக்கட்டும், கைக்குழந்தை படுத்துறங்கும் 'பேபி கட்டில்' மீது பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டுச் சிதைக்குமளவிற்கு மனநோயாளிகளாக மாறியிருந்தனர்.

காலமெல்லாம் தங்களைத் தின்று விழுங்கிய வறுமையை, அயராத முயற்சியாலும், கடின உழைப்பாலும் விரட்டியடித்தனர் சங்கரலிங்கபுரம் சேரிமக்கள். 150 தலித் குடும்பங்கள் வசிக்கும் இச்சேரியில், படித்த பட்டதாரிகள் ஏராளம். வீட்டிற்கு வீடு கலர் டி.வி., பீரோ, கிரைண்டர், கட்டில், மின்விசிறி, சேர், ஷோபா, இரண்டு சக்கர வாகனங்கள், டிராக்டர், பசுக்கள், விளை நிலங்கள் என்று அத்தனை வசதிகளோடும் இருந்துள்ளனர்.

ஆதிக்க சாதியினரை மிஞ்சி, தன்மானத்துடன் தரமான வாழ்க்கை நடத்தி வந்த தலித் மக்களை எப்படியேனும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற தங்களது நீண்டகாலத் திட்டத்தினை, அதிரடிப்படை போலிஸ் ரவுடிகளால் நிறைவேற்றிக் கொண்டனர், இவ்வூர் நாய்க்கர்கள்.

அதிரடிப்படை உள்ளே நுழைந்ததுமே ஆண்கள், பெண்கள் அத்தனை பேர்களும் பயந்து ஊரைவிட்டு வெளியேறினர். ஆனாலும், சேரியைச் சுற்றி வளைத்துக் கொண்டு, வெறிக் கூச்சலிட்டபடி நாகரீகமற்ற, காட்டுமிராண்டிகள், இன்னொரு காட்டுமிராண்டிகள் வாழும் பகுதியைச் சுற்றி வளைப்பதுபோல் வளைத்துக் கொண்டு, தாக்கத் துவங்கியது. அந்தத் தாக்குதலில் கைகால் உடைந்து, மண்டை உடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பெண்களிடம் நாம் பேசிய போது,

> "இந்த நாட்டின் சட்டமும் நீதியும் அரசும் அரசியலும் தலித் மக்களை ஒருபோதும் காப்பாற்றாது என்பது திட்டவட்டமான உண்மை."

''ஊரே நடுங்கும்படி கூச்சல் போட்டுக்கிட்டு, காது கூசுற அளவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

...ட்ட வார்த்தைகளைப் பேசிக்கிட்டு, ...ணில் கொலைவெறி மின்ன, துப் ...க்கியைக் குறிவச்சுக்கிட்டே தெரு ...க்குள்ள அங்கிட்டும் இங்கிட்டுமா ...டுனானுக. தெரியாத்தனமா அவனுக கண்ணுல நான் தட்டுப்பட்டுட்டேன். நாலஞ்சு பேரு சேர்ந்து கும்புட கும்புட அடிச்சு நொறுக்கிட்டானுக. வலது கையி கூழ்கூழாப் போச்சு'' என்று கதறுகிறார்கள்.

ஆளரவமில்லாத சேரித் தெருக் களில் பூட்டிக்கிடந்த வீட்டுக் கதவு களை, உடைத்துத் திறந்து, விலையு யர்ந்த கலர் டி.வி.களை உடைத்து நொறுக்கியுள்ளனர். இப்படி சுக்கல் சுக்கலாக உடைக்கப்பட்ட கலர் டி.வி.களின் எண்ணிக்கை மட்டும் 48. ''பறப்பயலுகளுக்கு டி.வி. வேறயா'' என்று சொல்லிக் கொண்டே உடைத்து நொறுக்கியுள்ளனர்.

கட்டில்களை, கடப்பாறை கம்பியி னால் குத்தித் துளையிட்டு சிதைத்துள் ளனர். தலைக்குமேல் தொங்கிக் கொண் டிருந்த மின் விசிறிகள், டேபிள் ஃபேன்கள், மிக்சிகள் எல்லாம் உருத் தெரியாமல் சிதைக்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவி பயன்படுத்தும் சைக் கிள் ஒன்று இரண்டாக ஒடிக்கப்பட்டுக் கிடக்கிறது. பண்ட பாத்திரங்கள், பித் தளைப் பானைகள் எல்லாம் கடப் பாறையினால் குத்திச் சிதைக்கப்பட் டுள்ளன. அத்தோடு விட்டுவிடவில்லை.

பீரோக்களையும் உடைத்துத் திறந்து, உள்ளேயிருந்த நகைகள், பணம், கடிகாரம், கேமரா போன்ற பொருட்களையும் கொள்ளையடித்தி ருக்கிறது போலிஸ். கொடியன்குளத்தி லும், குண்டுப்பட்டியிலும் கொள்ளை யடித்து ருசி கண்ட போலிஸ் கேடிகள், சங்கரலிங்கபுரத்திலும் தங்களது கைவரிசையைக் காட்டியுள்ளனர். தகிக்கும் வெயிலில் காய்ந்து, ரத்தத்தை வியர்வையாக்கி, உழைத்துச் சேமித்த சொத்துகளைக் கொள்ளையடிக்கும் போலிஸ்தான் மக்கள் காவலர்களா?

பத்திரப்படுத்தி வைத்திருந்த பள்ளி - கல்லூரிச் சான்றிதழ்களைக் கிழித்து வீசியுள்ளனர்; சில வீடுகளில் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். கருகிக் கிடக்கும் அந்த சான்றிதழ்கள், படித்த இளைஞர்களின் எதிர்காலமல்லவா? அந்த அப்பாவி இளைஞர்களின் எதிர் காலத்தை எரிப்பதற்கு, அதிரடிப்படை போலிசுக்கு என்ன நியாயம் இருக்க முடியும்? இது என்ன வகை நட வடிக்கை? இதன் நோக்கமென்ன?

தனியாக கேபிள் டி.வி. நடத்தி வந்த பால்ராஜ், இப்போது கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறை யிலிருக்கிறார். ஏழு லட்சம் மதிப்புள்ள அவரது கேபிள் டி.வி. ஒளிபரப்புச் சாத னங்கள், 'டிஷ் ஆண்டனா', 'வயர் ரோல்கள்' முற்றிலும் நாசம் செய்யப் பட்டுவிட்டது. ஆனால், மறியல் நடந்த போது அவர் மதுரையில் அவரது உறவி னர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார்.

மொத்தம் எண்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சிதைக்கப் பட்டு நாசப்படுத்தப்பட்டுள்ளன. அய்ந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள நகை யும், ரூபாய் மூன்று லட்சம் ரொக்க மும் போலிஸ் ரவுடிகளாலும், சங்கர லிங்கபுரம் நாய்க்கர் சாதி வெறியர்களா லும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

ராணுவம்போல் உடையணிந்து கனத்த பூட்ஸ்களுடன் வெறிக் கூச்ச லிட்டபடி தெருவுக்குள் நுழைந்த போலிஸ் கேடிகளால், தின்று செறிக் கப்பட்ட கோழிகளின் எண்ணிக்கை மட்டும் இருநூறுக்கும் மேல். ஆடு களையும் மாடுகளையும் அருகிலிருக் கும் கிராமங்களிலுள்ள ஆதிக்க சாதி செட்டியார்களுக்கும், நாய்க்கர்களுக் கும், போலிஸ் அதிகாரிகளே விற்று பணம் வாங்கிக் கொண்டார்கள் என்பது அதிர்ச்சி தரும் உண்மை.

சங்கரலிங்கபுரம் சேரியில் மொத் தமே 150 குடும்பங்கள்தான். ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்ற கணக் கில் 145 பேர்களை விரட்டி விரட்டிப் பிடித்து, கைது செய்து சிறையிலடைத் திருக்கிறது போலிஸ். இதில் 68 பேர் கள் பெண்கள், 22 பெண்கள் கைக் குழந்தையுடன் கட்டிய சேலையுடன் கடந்த 50 நாட்களாகச் சிறையிலிருந்து வருகிறார்கள். போலிஸ் தாக்குதலுக்குப் பயந்து ஊரைவிட்டு, உடைமைகளை விட்டுத் தப்பியோடிய மக்கள் இப் போது வரை ஊருக்குத் திரும்பவில்லை.

ஏழை எளிய மக்கள்மீது இரக்க மற்ற வெறியாட்டத்தை நடத்திய போலிசைக் கண்டிக்க நாதியில்லாமல் போய்விட்டது. ஓட்டுப்போட்டு வெற்றி பெற வைத்த மக்களின் மீது சிறிதும் அக்கறையில்லாமல், யாகம், புரோகிதம் என்று மூடநம்பிக்கையில் திளைத்துக் கொண்டிருக்கிறார் ஜெய லலிதா. தனது செல்லப் பிராணிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தை அவர் பாராட்டுவாரே தவிர, இதைத் தடுத்து நிறுத்தவா போகிறார்?

தான் ஆட்சியில் இருந்த போது தாமிரபரணிக் கரையில் இருபது பேரை அடித்துக் கொன்று, ஆற்றில் வீசிய இதே போலிஸ் ரவுடிகளைப் பாராட்டிய கருணாநிதியோ, அகற்றப்பட்ட கண்ணகி சிலைக்காக உயிர்விடுவேன் என்கிறாரே தவிர, சங்கரலிங்கபுரத்தில் நடந்த இந்த அட்டூழியத்தைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை.



இந்த நாட்டின் சட்டமும் நீதியும் போலிசும் அரசும் அரசியலும் தலித் மக்களை ஒருபோதும் காப்பாற்றாது என்பது திட்டவட்டமான உண்மை.

இனி, தலித் மக்களுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

தலித் மக்கள் தங்களையும் தங்கள் உயிர், உடைமைகளையும் சாதிவெறி யர்களிடமிருந்தும் போலிஸ் ரவுடிகளி டமிருந்தும் காத்துக் கொள்ள, சேரிக்கு சேரி மக்கள் படை உருவாக்கப்பட வேண்டும். •



படிப்பகம்

www.padippakam.com



# ரீட்டா மேரிக்கு நேர்ந்த கொடுமை

■ கோ. சுகுமாரன்

பத்தொன்பதே வயதான ரீட்டா மேரிக்கு ஏற்பட்ட கொடுமையைக் கண்டு யாராலும் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியாது. அவருக்கு இழைக்கப்பட்ட அடுத்தடுத்த கொடுமைகளால் மன நிலை மிகவும் பாதிக்கப்பட்டு சித்த பிரமை பிடித்த நிலையில், இழந்த தன் வாழ்விற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். உயர்நீதிமன்ற ஆணையைத் தொடர்ந்து தற்போது, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

சென்னை திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்தவர் ரீட்டா மேரி. ஈரோட்டிலுள்ள தனது அக்கா வீட்டிலிருந்து கோபித்துக் கொண்டு சென்னை செல்ல முற்பட்டபோது, விபச்சார புரோக்கர் ஆனந்தராஜால் ஏமாற்றிக் கடத்தப்பட்டார். பின்னர், ஆத்தூரில் விபச்சாரத் தொழில் செய்யும் ஈஸ்வரியிடம் ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டார். அங்கு விபச்சாரத் தொழிலில் ஈடுபட கட்டாயப்படுத்தப்பட்டு - கொடுமைப்படுத்தப்பட்டார். அங்கிருந்து முருகேசன் என்னும் 'போலிஸ் நண்பர்' அமைப்பைச் சேர்ந்தவரால் திண்டிவனத்தில் விபச்சார விடுதி நடத்தும் சாந்தி என்பவரிடம் 7,500 ரூபாய்க்கு விற்கப்பட்டார். அங்கு விபச்சாரத் தொழில் செய்ய வற்புறுத்தப்பட்டு கடும் துன்புறுத்தலுக்கு ஆளானார்.

அப்போது விபச்சார விடுதிக்குச் சென்ற சென்னை இளைஞர்கள் லட்சுமணன், ஆனந்தன், சாதிக் பாட்சா, மோகன் ஆகியோர் ரீட்டாவை காப்பாற்ற முயற்சித்தனர். இதன் விளைவாக, ரீட்டா உட்பட அனைவரும் திண்டிவனம் காவல் நிலையத்தில் சிக்கிக் கொண்டனர். இவர்களைக் காக்க வேண்டிய திண்டிவனம் போலிசார் நடந்து கொண்ட விதமோ மிகவும் மோசமானதாகும். ரீட்டாவை காப்பாற்ற முயன்ற இளைஞர்கள் மீது திண்டிவனத்தின் பல்வேறு பகுதிகளில் சாராயம் விற்றதாகப் பொய் வழக்கு போட்டுள்ளனர்.

பின்னர் சென்னை இளைஞர்கள் திண்டிவனம் கிளைச் சிறையிலும், ரீட்டா செஞ்சி கிளைச் சிறையிலும் அடைக்கப்பட்டனர். பாதுகாப்பான இடமெனக் கருதப்படும் சிறையில் ரீட்டாவிற்கு உச்சகட்ட கொடூரம் நடந்துள்ளது. செஞ்சி சிறைக் காவலர்களால் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார் ரீட்டா மேரி.

பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நாள்தோறும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இவை இப்படியான அரிதான சந்தர்ப்பத்தில் தான் வெளியே தெரிய வருகின்றன. மனிதாபிமானம் கொண்ட தனி நபர்களாலோ குழுவினராலோ தான் இதுபோன்ற சம்பவங்கள் வெளி உலகிற்குத் தெரிய வருகின்றன. இந்த வகையில், ரீட்டாவை விபச்சார விடுதியிலிருந்து மீட்க உதவிய இளைஞர்களின் முயற்சி பாராட்டிற்குரியது.

ரீட்டாவிற்கு நடந்த கொடுமைகள் பற்றி திண்டிவனம் வழக்கறிஞர் லூர்து சேவியர், ரீட்டாவின் தாயார் லீலாவதி ஆகியோர் தனித்தனியே புகார் கொடுத்துள்ளனர். இதன் அடிப்படையில் செஞ்சி காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது. ஆனால், இப்புகார் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனிடையே, ரீட்டாவிற்கு நீதி கிடைக்க வேண்டி திண்டிவனத்தில் பேராசிரியர் கல்யாணி தலைமையில் பல்வேறு அரசியல் கட்சிகள், சமுதாய இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் உள்ளடக்கிய போராட்டக் குழு உருவாக்கப்பட்டது.

இதன் சார்பில் வழக்கறிஞர் லூசி, திண்டிவனம் கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையின் தலைவர் மு. கந்தசாமி, உறுப்பினர் நசீர் அகமது ஆகியோர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை தொடுத்தனர். அதில், ரீட்டா மேரி சம்பவத்தில் சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிடவும், இடைக்கால



தளி காவல் நிலையத்தில் கல்பனா சுமதி, வையம்பட்டி காவல் நிலையத்தில் லட்சுமி, சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினி, முத்தாண்டிக் குப்பம் காவல் நிலையத்தில் வசந்தா, புதுச்சேரி காவலர்களால் அத்தியூர் விஜயா, சென்னை காவல் நிலையத்தில் சித்ரா... என காவல் நிலையங்களில் தொடரும் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளுக்கு முடிவுதான் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

...வாரணம் வழங்கவும் உத்தரவிடக் கோரி இருந்தனர். மேலும், வழக்கறிஞர் லூர்து சேவியர், மக்கள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த லெனின் ஆகியோரும் வழக்கு தொடுத்தனர்.

இந்த வழக்குகளை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி பி.டி. தினகரன், இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார். அதில் ரீட்டாவுக்கு நேர்ந்தது குறித்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய அனைத்து மகளிர் காவல் நிலைய அய்.ஜி. திலகவதிக்கு உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து உரிய காலத்தில், விரிவான விசாரணையை மேற்கொண்ட திலகவதி, தனது விசாரணை அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதில், ரீட்டாவை செஞ்சி சிறைக் காவலர்கள் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கியதை உறுதி செய்ததாகத் தெரிகிறது. மேலும், விபச்சாரத் தொழிலை ஒழிக்கவும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்கவும், சிறை சீர்திருத்தங்கள் பற்றியும் பல பரிந்துரைகளைக் குறிப்பிட்டதாகவும் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்ற நீதிபதி பி.டி. தினகரன் மீண்டும் ஒரு உத்தரவைப் பிறப்பித்தார்.

அதில், ரீட்டா வழக்கை சி.பி.சி. அய்.டி. விசாரணைக்கு மாற்றியும், திலகவதி தலைமையில் சி.பி.சி.அய்.டி. குழு புலனாய்வை மேற்கொள்ளும் எனவும் உத்தரவிட்டார். மேலும், மக்கள் கண்காணிப்பகத்தின் பொறுப்பில் மதுரையில் சிகிச்சை பெற்ற ரீட்டாவிற்கு அரசு செலவில் நிவாரணம் நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இதனை ஏற்று தமிழக அரசு ரீட்டாவிற்கு ரூபாய் அய்ந்து லட்சம் இடைக்கால நிவாரணமாகவும், சென்னையில் குடியிருக்க ஒரு வீடும் ஒதுக்கி உத்தரவிட்டது. மேலும், ரீட்டாவிற்கு சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, சி.பி.சி.அய்.டி. கண்காணிப்பாளர் சிறீதர் தலைமையில் புலனாய்வுக் குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது. இதில் பல அதிர்ச்சியான தகவல்கள் தெரிய வந்துள்ளன.

செஞ்சி சிறைக் காவலர்கள் அனைவரும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதில் சிறைக் காவலர்கள் ஜெயபால், லாசர், அன்பழகன், சேகர், ராமசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். திண்டிவனம் காவல் துணை கண்காணிப்பாளர் சின்னராஜ், ஆய்வாளர் ராஜேந்திரன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திண்டிவனம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராஜ்குமார், பெண் தலைமைக் காவலர் மோகனசுந்தரி ஆகியோரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக நீதிமன்றக் காவலில் ஒரு பெண் பாலியல் கொடுமைக்கு பலியாகி இருப்பது, நீதித்துறைச் செயல்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள களங்கமாகும்.**



இந்த நடவடிக்கைகள் உயர்நீதிமன்ற நீதிபதி தலையீட்டின் பேரிலேயே நடந்தது என்பதும் கவனிக்கத்தக்கது. பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டு வரும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பொ. ரத்தினம் ரீட்டாவிற்காக நீதிமன்றத்தில் வாதாடி வருகிறார். எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் பாடுபடும் அவருக்கு பாராட்டு தெரிவிப்பது அனைவரின் கடமையாகும். ரீட்டா வழக்கில் உயர்நீதிமன்ற இறுதித் தீர்ப்பு விரைவில் வரும் என்று தெரிகிறது.

சி.பி.சி.அய்.டி. விசாரணையில் மேலும் பல தகவல்கள் தெரிய வந்துள்ளன. ரீட்டாவை செஞ்சி சிறையிலிருந்து வெளியே கொண்டு சென்று சிறைக் காவலர்களும், சில வழக்கறிஞர்களும் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தி இருப்பது, தெரிய வந்துள்ளது.

செஞ்சி சிறையில், நீண்ட காலமாக பெண் சிறைவாசிகள் பாலியல் வன்முறைக்கு இரையாகியிருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. திலகவதி விசாரணை மேற்கொண்டபோது, செஞ்சி சிறையின் பதிவேடுகளைப் பார்த்ததில், கடந்த பத்தாண்டுகளில் இளம் பெண் சிறைவாசிகள் அனைவருமே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிசிக்சை அளிக்கப்பட்டுள்ளது அம்பலமாகியுள்ளது. இந்த வழக்கில் சில வழக்கறிஞர்களும் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிகிறது.

இதனிடையே, ரீட்டாவை காப்பாற்ற முயன்ற இளைஞர்கள் தங்கள் மீது பொய்வழக்கு போட்ட திண்டிவனம் போலிசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்துள்ளனர். இந்தப் புகார் மீது இதுவரையில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. மேலும், ரீட்டாவிற்கும் சென்னை இளைஞர்களுக்கும் திண்டிவனம் காவல் நிலையத்தில் போலிசாரால் நடந்த கொடுமைகள் பற்றி விழுப்புரம் டி.அய்.ஜி. சிதம்பரசாமி ''இது வெறும் நடைமுறை குறைபாடுகள்'' என கூறிவருவதை போராட்டக் குழுவினர் கண்டித்துள்ளனர்.

தமிழக அரசும், சென்னை உயர்நீதி மன்றமும் ரீட்டாவிற்கு ஓரளவு நீதி வழங்கியிருந்தாலும், இளம்வயதில் ரீட்டா மேரி மிகக் கொடூரமாக சிதைக்கப்பட்டிருப்பதை யாராலும் ஈடு செய்ய இயலாது. இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து விட்டால், பெண்களுக்கு சிறிதளவுகூட பாதுகாப்பு இல்லை என்பதையே ரீட்டா மேரி சம்பவம் உலகிற்கு உணர்த்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க தனியே ஒரு சட்டம் தேவைப்படுவதையும் இது வலியுறுத்துகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பெண்கள் குறித்த கருத்துகள் பெருமளவில் மாற்றமடைய வேண்டும். இல்லையேல், ரீட்டாமேரி போன்ற இந்த சமூகத்தால் சீரழிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே தான் இருக்கும். ●



படிப்பகம்

www.padippakam.com

# எங்கிருந்து தொடங்குவது...

■ ந. கோபி

இட்லர், எவ்வகையான காரணங்களுக்கெல்லாம் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்தானோ, அத்தகைய காரணங்களையும் பயங்கரவாதத்தையும் சுருக்கமாகக் கொண்டதுதான் 'பொடோ' - Prevention of Terrorism Ordinance இட்லரின் சுய அதிகார மிருகப் போக்கை சட்ட வடிவில் இந்தியா தான் முதன் முதலில் வெளியிட்டிருக்கிறது. அமெரிக்க கட்டிடங்கள் தகர்க்கப்பட்ட செப்டம்பர் 11க்குப் பிறகு 'பொடோ' தீவிரத்தன்மை கொண்டுள்ளது. ஆம். இந்தியாவின் நாடாளுமன்றம், அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு மாற்றப்பட்டதோ என்ற அச்சம் உருவாகிறது.

அமெரிக்காவில் தீப்பிடித்தால், இந்திய தீயணைப்பு வண்டிகளில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. இன்று, இந்தியாவும் அமெரிக்காவும் பொது எதிரிகளை அவர்களே உண்டாக்கிக் கொண்டனர். உற்பத்தியையும், அதிகாரத்தையும் தன் வசப்படுத்திக் கொள்ளத் துடிக்கும் ஒரு நிறுவனமோ, சமூகமோ, நாடோ, தனி நபரோ, தனக்கான எதிரியை உடனே உருவாக்கிக் கொள்ளவில்லை எனில், தன் உற்பத்தியை கடும் போட்டிக்கு இட்டுச் செல்ல முடியாது. அந்த எதிரியை தன் உற்பத்தியின் நுகர்வோருக்கும் சேர்த்து - பொது எதிரியாக்காவிடில், அது அதிகாரத்தை வசப்படுத்த முடியாது.



ஓவியம் : யாக்கன்

ஒரு உற்பத்தியாளர், வியாபாரி எல்லோரிடமும் சுமுகமான உறவு கொண்டால்தானே, தன் வருமானத்தைப் பல்கிப் பெருக்கிக் கொள்ள முடியும். ஆனால், இது வியாபாரத்தின் வழியாய் அதிகாரத்திற்கு வருபவர்களுக்குப் பொருந்தாது. ஏனெனில், நாம் சொல்லும் சமூகத்தை அவர்கள் அரசியல் வழியாக ஏற்படுத்தி விடுவார்கள். முதலில் பண்பாட்டுச் சீரழிவின் பேரில், பொதுவான நுகர்வுத் தன்மையை உருவாக்குவது. பிறகு, தன் பொருளின் தன்மையைப் போலவே நுகர்வோரின் குணத்தை ஒரே தன்மைக்கு மாற்றுவது, அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல எப்படியாவது ஒரு போரை உருவாக்குவது.


தன் வர்த்தக எதிரியை வர்த்தக தளத்தில் சந்திக்க முடியாமல் (தானே ஓர் எதிரியை உருவாக்கி, அவர்களை



படிப்பகம்

www.padippakam.com

கிருந்து எதிர்ப்பது, எப்போது ...திர்ப்பது என்ற முடிவை ஏற்கனவே திட்டமிட்டு விட்டு) மதம், பொது மொழி, பொது கலாச்சாரம் (குறிப்பாக பொதுவான உடைவகை, உணவு வகை) வழியாக வந்து அவர்கள் கட்டமைக்கப் போகும் தேசத்தை ஒவ்வொரு மனிதனின் மூளையிலும் மிக ரகசியமாக ஓதிவிட்டு அதன் அடுத்த கட்ட வெளிப்படையான கட்டமைவிற்கு ராணுவத் துணையோடு - ஆப்கானில் பீரங்கி வழியாகவும், இந்தியாவில் 'பொடோ'வின் வழியாகவும் - பேசுகிறார்கள்.



ஓவியம் : யாக்கன்

ஆப்கானில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டது போல் இந்தியாவில் பொடோவின் வழியாய் தனித் தனியாகக் கொல்லப்படுவர். எதிர்த்து செத்துப்போனது கொஞ்சம் என்றால், எதிர்க்காமல் பீதியிலேயே இறக்கப் போகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். பொடோ - எதிர்ப்பவர்களை அச்சுறுத்துவதைவிட, எதிர்க்காமல் ஏற்கனவே கோழையாய் இருப்பவர்களை அச்சுறுத்தவே உருவாக்கப்பட்டது என்பதே உண்மை.

இது நடந்துவிட்டால், நம்முடைய வாழ்க்கை எப்படியிருக்கும்? உழைப்பு என்பது, நம்முடைய சுய உழைப்பின் மூளையிலிருந்து வராமல் அவர்கள் தரும் சூத்திரத்தின்படி இருக்கும். நம்மிடம் எந்த உற்பத்தியும் இருக்காது. நாம் எல்லாவற்றையும் வாங்கும் கட்டாயத்திற்கு வந்து விடுவோம். காடு, மலை, மேடு எல்லாம் ஒத்தக் கருத்துடையவனுக்குச் சொந்தமாகிவிடும். (அரசு சொத்துகள் தனியார்மயமாவதில்லை - அரசே தனியார்மயமாகிவிடும்) விலை நிர்ணயம், கொள்ளை நிலைக்குப் போகும். வாழ்வின் நிலையை, அன்றாட அடிப்படைப் பொருளின் விலைக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடி வரும்.

ஆனால், வாங்கும் சக்தியின் தரம் மட்டும் நம்மிடம் குறைந்து கொண்டேயிருக்கும். இனி உன்னைக் கொல்ல எந்தச்சட்டமும் தேவையில்லை. உன்னை ஒடுக்குவதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றத் தேவையில்லை. மளிகைக்கடைக்காரன் அவன்

**இனி, உன்னை ஒடுக்குவதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றத் தேவையில்லை. மளிகைக் கடைக்காரன் அவன் ரசீதுகளிலேயே நிறைவேற்றி விடுவான்.**

ரசீதுகளிலேயே அதை நிறைவேற்றி விடுவான். அன்றைக்கு 'பொடோ' சட்டம் ரத்து செய்யப்பட்டு விடும்.

இந்தியாவின் ஜனநாயகத் தன்மையின் வெற்றியாய் நாளேடுகளில் கட்டுரைகள் வரும். நம் தோழர்களும் வெற்றிக் கூட்டம் நடத்துவர். எதிரி ஆலோசிப்பதற்காக, ஒரு மறைவிலிருந்து இன்னொரு மறைவிற்குச் சென்ற அறைக் கதவை இன்னும் நாம் தட்டவேயில்லை. ''என்ன அங்கு மறுபடியும் பேச்சு என்று கேட்கவேயில்லை.'' காரணம், முன் திட்டம் நம்மிடம் இல்லை.

ஆரியத்திலிருந்து 'இந்துத்துவா' வரை வளர்ந்த பார்ப்பனீயம், மீண்டும் தன் துவக்க (ஆரியத்திற்கு) நிலைக்குச் செல்ல அமெரிக்காவோடு இணைந்துள்ளது. அமெரிக்காவை கட்டமைக்க நிறவெறி; இந்தியாவைக் கட்டமைக்க சாதி வெறி. கட்டமைக்கப்பட்ட இரு நாடுகளும் (கட்டமைப்பில் இரண்டும் ஒரே பண்பு நிலையைக் கொண்டது) இன்னும் சில நாடுகளை இணைத்து, உலக தேசிய இன (ஆரியம்) ஒருங்கிணைவில் உலகைச் சூழப் போகிறது.

தாம் உருவாக்கிய கல்வியால் - கலையால் - அறிவியலால் - தத்துவத்தால் தம்மை பலப்படுத்தியவர்கள் அதே வளர்த்தெடுப்பு முறையால் நம்மை பல வீனப்படுத்தி விட்டார்கள். அறிவியலின் ஒரே பண்பு - இரு குணநிலை. அறியப்படாத மிகப் பெரிய பகுதி இது.

நமக்கு கல்வி மறுக்கப்பட்டது. கல்வி மறுக்கப்பட்டது என பொத்தாம் பொதுவாக பேசிச் சீரழிந்தோமே... அது எந்தக் கல்வி என்று அறிய ஆய்ந்தோமா...? இந்தக் கல்வி தான். மாறாக, நாம் காலனியாதிக்க வாதியின் மெக்காலே கல்வி முறையை போட்டிப் போட்டுப் படித்தோம். (தமிழ் வழிக் கல்வியும் இதன் மொழி பெயர்ப்பாகத்தான் இருக்கிறது)

ஒரே பண்பு - இரு குணநிலை.

அண்ணனுக்கும், தம்பிக்கும் அனைவரின் முன்பு வழங்கப்பட்ட ஒரே பண்பு மாத்திரை அது. ஒரே இரவில் இருவரும் எதிரியானார்கள். அதே மாத்திரையை அவர்களும் ரகசியமாகப் பரிமாறிக் கொண்டனர். மேற்கண்ட எதிரிகள், நம்மின் எதிரியினை அதே இரவின் விடியலின்போது நம் வீட்டு வாசலிலேயே ரகசியமாகவும் பேசிக் கொண்டனர். இதைக் கற்க மறுத்து அவர்கள் உண்ட விஷத்தை நாமும் உண்டு இறந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் விஷத்தை செரித்துக் கொள்கின்றனர். நாம் ஒருபடி மேலேபோய் ரத்தத்தில் கலக்க விட்டு விட்டோம்.

பிணங்களின் போராட்டமாய் இருக்கிறது நம்மின் போராட்டம் - 'பொடோ'வுக்கு முன்பும்.



படிப்பகம்

www.padippakam.com

● சுயமரியாதை - மொழி - இனம் - அதிகாரம் என்று பேசினாலும் சொத்தின் மதிப்பீட்டு மரியாதைதான் முதன்மையாக உணரப்பட்டது. சொத்தை உள்ளடக்கிய சுயமரியாதை, சொத்தைப் பெருக்கிக் கொள்ள வழியைத் தரும் எதிரியிடம் கோவணத்தையும் இழக்கும்.

● பகுத்தறிவாளர்களுக்கு கடவுள் தான் பிரச்சனை. மத நல்லிணக்கம் என்ற பெயரில் பார்ப்பனீயத்தை உள் மூளையாகக் கொண்ட அனைத்து மதங்களோடும் கை கோர்த்துக் கொண்டனர்.

**இன்னும் எத்தனை தடிப் புத்தகங்கள் வேண்டும் - நீங்கள் புரட்சி நடத்த...? இங்கே சீர்திருத்தம், புரட்சி போல் பேசப்படுகிறது. புரட்சி, சீர்திருத்தம் போல் செய்யப்படுகிறது.**



ஓவியம் : சீ. வெங்கடேசன்

● தமிழ்த் தேசியவாதிகளுக்கோ மொழி தான் பிரச்சனை. பார்ப்பனீயத்தின் நடை தந்திரமான சாதிக் கோட்டை மீது புதிய கோட்டை எழுப்பக் காத்திருக்கின்றனர்.

● கம்யூனிஸ்டுகளுக்கோ இந்த நொடிவரை வர்க்கப் புரட்சிதான் பிரச்சனை. முதலாளியத்தின் சுரண்டல் குணம், சாதிய வடிவில் மறைந்திருந்தாலும் - எல்லோருக்கும் சிவப்புத் துண்டு போட ஓடுகின்றனர்.

● இந்த இழுபாடுகளில் சிக்கிச் சிதைந்து போனது - **"ஒடுக்கப்பட்ட மக்களின் இரண்டு எதிரிகள் பார்ப்பனீயமும் முதலாளியமும்..."** என்ற வாக்கியம்.

அவ்வையின் பாடலில் இல்லாத அறிவியலா? திருக்குறளில் இல்லாத அரசியலா? சித்தர்களிடம் இல்லாத ரகசியமா? பவுத்தத்தில் இல்லாத தத்துவமா?

இதையெல்லாம் தாண்டிய நமக்கு மேற்சொன்ன வாக்கியத்தின் சொந்தக்காரர் அம்பேத்கரை தாண்டுவதற்கு எவ்வளவு நேரம் ஆகும்.

பார்ப்பனீயத்திற்குள் கடவுள் இல்லையா? முதலாளியத்திற்குள் உழைக்கும் வர்க்கம் இல்லையா? ஒடுக்கப்பட்ட மக்கள் எனும் வார்த்தைக்குள் தான் - தேசியம், இனம், மொழி இல்லையா? இன்னும் எத்தனை தடிப் புத்தகங்கள் வேண்டும் - நீங்கள் புரட்சி நடத்த...? இங்கே சீர்திருத்தம், புரட்சி போல் பேசப்படுகிறது. புரட்சி, சீர்திருத்தம் போல் செய்யப்படுகிறது. அரிப்புக்காரர்களால் எந்தப் புண்ணையும் ஆற்ற முடியாது.

தண்டவாளங்களில் குண்டு வைப்பதால் தீர்ந்துவிடுமா? நம் தண்டவாளங்களை வண்டவாளத்தில் மூளை குண்டுகளால் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் நம்மைக் கொல்லுவதற்கான காரணம், நம்மையெல்லாம் தெய்வமாக்குவதற்கு என்றால் - இங்கே தெய்வமாக நிறையப் பேர் காத்திருக்கின்றனர். இதை எதிர்த்தவர்கள், ஏன் கொலை செய்தாய் என்று கேட்கவில்லை. ஏன் தெய்வமாக்கவில்லை என்று தான் கேட்டனர்.

எத்தனைபேர் தெய்வமாக ஆகப் பட்டார்கள் என்ற புள்ளி விவரத்திற்கு தான் அப்படி சொன்னோம். ஆனால், அப்படியொன்றும் நிறையபேர் இல்லை என்கிறார்கள். உடனே எதிர்ப்பவனின் போராட்டம் வேறாக மாறுகிறது. கொன்றவர்களின் புள்ளி விவரத்தை சரிவர வெளியிடாமல் தெய்வமாக்கும் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் என உடனே அவர்களும் அதற்கு ஒரு நபர் விசாரணைக் கமிஷன் போட்டு - அதையும் ஒரு பார்ப்பனனையே வைத்து விசாரிக்கச் சொல்கிறார்கள்.

என்னைக் கொன்றவனையே விசாரணைக்குத் தலைமை தாங்கச் சொல்கிறாயே... முடியாது. எங்களில் யாரையாவது போடு என்று போராட்டம் மீண்டும் வேறு கட்டத்திற்கு மாறுகிறது. இப்போராட்டம் முதலிலிருந்து கடைசிவரை, பார்க்கவும் - படிக்கவும் பார்ப்பனீய எதிர்ப்பாகவுமே இருக்கும். ஆனால், இந்த சூதாட்டத்தில் முழுக்க முழுக்க நீ பார்ப்பனீய எதிர்ப்பு போதையில் இருக்க வேண்டுமென்பதே பார்ப்பனீயத்தின் வெற்றி.

"எதற்கடா தெய்வமாக்குவதாக
சொல்லி கொன்றாய்...
ஏனடா சூதாட்டம் ஆடுகிறாய்"

என்ற இரண்டு கேள்விகள்தான் போராட்டத்தின் கருவாக உள்ளது. முதல் கேள்விகூட காலம் கடந்து நிற்கிறது. ஏனெனில், நாம் பிற்காலத்தில் தான் உணரப்பட்டோம். ஆனால், "ஏனடா சூதாட்டம் ஆடுகிறாய்" என்ற கேள்வி நம் போராட்ட வரலாற்றில் நிரப்பப்படாமலே போயிருக்கிறது.

ஒரு தனி மனிதனின் கடும் உழைப்பில் அம்பேத்கரின் எழுத்தாய் நிரம்பி வழிகிறது. விடை, சுருக்கமாகவோ ஒரே நூல் வடிவிலோ கிடைக்காது. அது ஒரு வாழ்க்கையாய் - கடுஞ்சினமாய் - "ஏனடா... சூதாட்டம் ஆடுகிறாய்" எனும் கேள்விக்கு அடிப்படை மூளையாய், பரந்த களமாய் விரிகிறது.

இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சி, அம்பேத்கரிலிருந்து துவங்கப்பட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



## மீண்டு எழுவோம் உலகை ஆள்வோம்

### எரிகிறது சாதி தீ

திருவண்ணாமலை மாவட்டம் அனக்காவூர் பஞ்சாயத்துத் தலைவர் பதவி, உள்ளாட்சித் தேர்தலின் போது லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் சார்பில் பி. நாராயணன் என்பவர் தேர்தலின் போது மனு தாக்கல் செய்திருந்தார். அவரை சாதி இந்துக்கள், குறிப்பாக வன்னியர்கள் பல முறை சந்தித்து மனுவை திரும்பப் பெறும்படி மிரட்டியுள்ளனர். அவர் மனுவை திரும்பப் பெறாததால், அக்டோபர் 7அன்று இரவு 12 மணிக்கு அவரது குடிசை தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. சாதி வசவுகளையும் தீயையும் தாண்டி பி.நாராயணன் தனது குடும்பத்தாருடன் அன்றிரவு தப்பித்து வெளியேறினார்.

தீ வைக்கப்பட்ட சம்பவத்தைக் குறித்து அடுத்த நாள் காவல் துறையினரிடம் அவர் புகார் கொடுத்தும், அப்புகார் எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாராயணனை மிரட்டியவர்களின் பெயர்கள் தெளிவாக குற்றப்பதிவில் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. நாராயணன், தமிழக முதல்வர் முதல் இது தொடர்பான அனைத்து அதிகாரிகளுக்கும் மனு அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை. உள்ளாட்சித் தேர்தலில் நடந்த ஏலத்தினைப் பற்றியும் எந்த அரசு தரப்பு நடவடிக்கையும் இல்லை. ■

### மாணவனைக் கொலை செய்த சாதிவெறி

அரியலூர் மாவட்டம் செந்துரைக்கு அருகில் உள்ளது, உஞ்சினி கிராமம். வழக்கமாய் சாதி இந்துக்களான படையாச்சிகள் தேர்தலில் கோலோச்சும் இப்பகுதியில், 'விடுதலைச் சிறுத்தைகள்' சார்பாக சிவக்கொழுந்து என்னும் தலித் பெண், வார்டு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார்.

ஒரு ஓட்டுக்கு 200 ரூபாய் வீதம் கொடுப்பதாக அறிவித்தும் நேரடியான மிரட்டல்கள் விடுத்தும் சாதி இந்துக்களின் வெறி அடங்கவில்லை. அக்டோபர் 15 அன்று சிவக்கொழுந்துவின் மகன் பனிரெண்டாம் வகுப்பு மாணவன் ஜெயராஜை படையாச்சி சாதி கும்பல், வீட்டிலிருந்து கடத்திச் சென்று அருகிலிருந்த முந்திரிக் காட்டில் வைத்து அடித்துக் கொன்றது.

மாணவன் ஜெயராஜை அடித்து அவரது கையெழுத்தை வெற்றுத் தாளில் வாங்கி அதை தற்கொலைக் கடிதமாக எழுதியிருக்கிறார்கள். எலும்புகள் நொறுங்குமளவு உடலில் உள்ள காயங்களும், சம்பவம் நடந்த இடத்தருகே உள்ள ரத்தக் கறைகளும் காவல் துறையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை. 'இது தற்கொலை தான்' என பிரச்சனையை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள். ■

### இந்தியா ஒரு ஜனநாயக நாடு – நம்புங்கள்

விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது கொட்டச்சினேந்தல் கிராமம். 1996ஆம் ஆண்டு அரசு இதை தனித்தொகுதியாக அறிவித்தது. கிராமத்தின் மொத்த மக்கள் தொகையில் 50 சதவிகிதத்திற்கும் கூடுதலாக தலித் மக்கள் வசிக்கிறார்கள் என்றாலும், இவ்வூர் சாதி இந்துக்களின் ஆதிக்கத்தையும் கொலை மிரட்டல்களையும் மீறி தலித் மக்கள் யாரும் 1996ஆம் ஆண்டு மற்றும் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட முன்வரவில்லை. இதனால் இருமுறையும் பஞ்சாயத்துத் தலைவருக்கான தேர்தல் நடைபெறவில்லை.

துணைத் தலைவர்கள் மற்றும் பிற பதவிகளையும் சாதி இந்துக்களே கைப்பற்றிக் கொண்டனர். சாதி இந்துக்கள் 6 பேர் கொண்ட குழு ஒன்று ஆட்சி அதிகாரத்தை நடத்தி வருகிறது. இந்த சட்ட மீறலையும், இருமுறை தேர்தல் நடக்காத அவலத்தையும் குறித்து ஜனநாயகத்தைத் தூக்கி நிறுத்தும் தூண்களான அரசு அதிகாரிகள், காவல் துறையினர், பத்திரிகையாளர்கள் ஆகியோர் வழக்கம் போல் அமைதி காக்கின்றனர். ■

### நம்பலாமா?

**தலித் மக்கள் மீது வன்கொடுமைகள் நடைபெறாமல் தடுக்க, தமிழக அரசு, மாநில அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது. தமிழக முதல்வர் திரு. பன்னீர் செல்வம் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அமைச்சர்கள், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் என மொத்தம் 27பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**இக்குழு, ஓர் ஆண்டுக்கு குறைந்தது இரண்டு முறையாவது (சனவரி, சூலை) கூட வேண்டும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 மூலம் வழக்குகள் முறையாகப் பதிவு செய்யப்படுகின்றதா, நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும் - இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை உரிய முறையில் அளிக்கப்படுகிறதா என்பதையும் இக்குழு கண்காணிக்கும்.** ■



படிப்பகம்

www.padippakam.com



# தலித்தாக உணர்வது பற்றி...



நூல் : தலித் பற்றிய கொங்குச்சிறுகதைகள் தொகுப்பு : பெருமாள் முருகன் விலை : 45 பக்கங்கள் : 136, வெளியீடு : புதுமலர் பதிப்பகம் வெண்முகில் வளாகம் 20/33, திருவள்ளுவர் நகர் (கிழக்கு) கோவை 641 045

■ அழகிய பெரியவன்

தமிழ்ச் சூழலில் மிகவும் புதிய முயற்சியாக, பெருமாள் முருகன், கொங்குப் பகுதியில் இருக்கின்ற தலித் மக்களைப் பற்றி - தலித் அல்லாதாரும், தலித்துகளும் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்துள்ளார். இத்தொகுப்பில் பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்டிருக்கிற தலித்துகள் பற்றிய சுமார் 15 சிறுகதைகள் உள்ளன.

இக்கதைகளின் சிறப்பம்சமாகக் கருதவேண்டியது, இவை அருந்ததியர் பற்றிய கதைகள். பூமணியின் 'பிறகு', அறிவழகனின் 'கழிசடை' போன்ற படைப்புகளோடு இத்தொகுதி கதைகளும் சேர்ந்து கொண்டு - அருந்ததியர்களின் வாழ்க்கையை விரிவாக நம் முன் வைக்க முயல்கின்றன. சில பழங்குடிகளைப் பற்றிய கதைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. தமிழில் பழங்குடியினர்களைப் பற்றிய புனைவுகள் வெகு குறைவே.

நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, நாமக்கல், கரூர் ஆகிய ஏழு கொங்குப் பிரதேசங்களை கதை களமாகக் கொண்டுள்ள இக்கதைகள், இரண்டு பார்வைகளை நம்முன் வைக்கின்றன: 1. தலித்துகள் பற்றிய கொங்குப் படைப்பாளிகளின் பார்வை. 2. கொங்குப் பகுதி தலித்துகளின் நிலை. இதில் இரண்டாவது பார்வை முழுமையானதல்ல. கொங்குப் பகுதியில் வாழும் எல்லா தலித் சாதியினரைப் பற்றியும் இக்கதைகள் பேசவில்லை. ஆதிதிராவிடர்கள், அருந்ததியர்கள், பழங்குடிகள் (மலையாளிகள்) ஆகியவர்களைப் பற்றிய கதைகளே இத்தொகுப்பில் இருப்பவை.

கதைகளில் வரும் பாத்திரங்களை நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள இயலாதபடியான, அவர்களின் மன உலகை, உணர்வை முழுமையாகப் படம் பிடிக்காத, வெறும் குறிப்புகளாகவே தங்கிப் போகிற கதைகளாகவே இவை உள்ளன. ஒருசில விதி விலக்குகளும் இதில் உண்டு. கதைகளை காலக் குறிப்புகளுடன் தொகுக்காதது ஒரு குறையாகப் படுகிறது.

இத்தொகுப்பின் முக்கியமான பார்வை, தலித்துகளை பிறர் எப்படிப் பார்க்கிறார்கள் என்பது. இந்த நோக்கையே தொகுப்பின் தலைப்பும், பெருமாள் முருகனின் முன்னுரையும் கொண்டுள்ளன. இக்கதைகள் எல்லாமே தலித் மக்களை ஒரு பார்வையாளன் என்கிற மட்டத்திலிருந்தே பார்க்கின்றன. குலக்கல்வி திட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜியின் 'அன்னையும் பிதாவும்', தலித்துகளுக்கு எவ்வளவு தான் உயர்ந்த நிலை தரப்பட்டாலும் அவர்கள் ஏமாற்றுக்காரர்களாய் இருக்கின்றனர் என்கிறது.

**தலித் கதைகளை யார் எழுதுவது என்கிற கேள்வியும், பிறர் அதைக் கையாண்டால் எப்படியிருக்கும் என்பதற்கான விடையும் இந்நூலில் கிடைக்கின்றன.**

மார்க்சிய பார்வையுடன் கதை சொல்லும் கு. சின்னபாரதியின் 'கேள்வி பிறந்தது' - தலித்துகளின் தன்னியல்பான எழுச்சியை அழுத்தி, அவர்களுக்கு விடுதலை - சங்கத்தாலும் பொதுவுடைமை இயக்கங்களாலுமே என்கிறது. இக்கதை, தங்களை கடவுள்களாகவும் தலித் மக்களை கருணை வேண்டி யாசிப்பவர்களாகவும் கருதி அணுகும் முறையைக் கொண்டுள்ளது கவனிக்கத் தக்கது.

தேவி பாரதியின் 'பலி' என்கிற சிறுகதை விவாதிக்க வேண்டிய ஒன்று. தொடக்கத்தில் தனி அனுபவமாக நிற்கும் கதை, போகப் போக கதையில் வரும் மலம் அள்ளும் குடும்பத்தைச் சேர்ந்தவன், தன்னை பன்முகத் தன்மை கொண்ட தலித்துகளின் பிரதிநிதியாக அர்த்தப்படுத்திக் கொள்வதன் மூலம் பொதுத் தன்மையைப் பெறுகிறது.

'தனிகிளாஸ்' என்னும் சிறுகதை, புரையோடிப் போயிருக்கும் சாதியக் கருத்தியலை இனம்காண ஒரு நல்ல அடையாளம். இக்கதையில் வரும் ஒரு தலித், வழக்கு மன்றத்தில் தனிகிளாஸ் வழக்கிற்காக சாட்சி சொல்கையில்,

''அவரு வைக்கலீங்க. நாங்களே தான் வச்சுக்கிட்டோம். ஊருக்கே நல்லா தெரியும். நல்லவன், கெட்டவன், காய்ச்சல்காரன், இருமல்காரன், குடிகாரன், பொணந்தூக்கறவனிலிருந்து பூச செய்யறவன் வரைக்கும் வரவும் போகவுமா இருப்பாங்க. போன வருசத்துல ஒரு எயிட்ஸ் நோயாளி கூட வந்து டீ குடிச்சான். கடன்னா எல்லாரும் வருவாங்க. அங்க சுத்தம் சுகாதாரம் இருக்குதோ இல்லியோ, நாம எச்சரிக்கையா இருக்கணும்னுதான் எங்களுக்கு நாங்களே பாதுகாப்பா தனியா டம்ளர் வச்



படிப்பகம்

www.padippakam.com

...டு டீ வாங்கிக் குடிக்கிறோம்.''
(...ம் 134)

இந்தக் கதையை கிண்டல் தொனியாகவோ, இடித்துக் கூறும் உத்தியுடையதாகவோ, சூழ்ச்சிக் கதையாகவோ கொள்ள கதையில் எந்தக் குறிப்புமில்லை. தலித் மக்கள் அனுபவிக்கும் தீண்டாமையை - சுத்தம் x அசுத்தம் என்கிற தொடக்க கால - காலாவதியான கருத்துடன் பிணைக்கவும், தலித் அனுபவத்தை எல்லாருடையதையும் போன்ற ஒரு அனுபவமாகப் பார்க்கவும் முயல்கிற நவீன ஆதிக்கச் சாதி கருத்தோட்டத்தையே இக்கதை கொண்டுள்ளது.

இத்தொகுப்பில் உள்ள கதைகளை தனித்தனியே வைத்துப் பேச நிறைய இருக்கின்றது. இதன் வழியே தலித் கதைகளை யார் எழுதுவது என்கிற கேள்வியும் பிறர் அதைக் கையாண்டால் எப்படியிருக்கும் என்பதற்கான விடையும் நமக்குக் கிடைக்கின்றன. தலித்தோ, தலித் அல்லாதாரோ யார் எழுதினாலும் தலித் நோக்கை உள்வாங்கிக் கொண்டு, தன்னை ஒரு தலித்தாக உணர்ந்து, தலித் இந்த உலகைப் பார்க்கும் பார்வையின் விரிவை உள்வாங்கி எழுதப்படும்போதே, தலித்துகள் பற்றிய கதைகள் அவர்களைப் பற்றிய நிஜமான சித்திரங்களைக் கொண்டிருக்கும் என்பது தெளிவாகிறது.

சாதி மனோபாவத்தின் அடிப்படையான ஒதுக்குதலின் தீவிரத்தை வெகு நுட்பமாகப் பதிவு செய்யும் பெருமாள் முருகனின் 'மேடு', பிணம் அறுப்பவனின் உலகை அதிர்ச்சி தர முன்வைக்கும் ஆதவன் தீட்சண்யாவின் 'அன்னைய்யா', மலை சாதிகளின் அவலத்தைப் பேசும் 'முறி' போன்ற வெகுசில கதைகள் புதிய தளத்தில் நிற்கின்றன.

இத்தொகுப்பினைப் போன்றே மாவட்டவாரியாகவும், தமிழக அளவிலும் தலித் பற்றிய தொகுப்புகள் கொண்டுவரப்படவும் அதன் மூலம் தலித்துகள் எப்படி இலக்கியவாதிகளால் பார்க்கப்படுகின்றனர் என்பதனைத் தொகுத்துக் கொள்ளவும் - இத்தொகுப்பு நூல் ஒரு நல்ல தொடக்கப் புள்ளியாக அமைகிறது. •

# "மறதிக்கு எதிரான ஞாபகங்களின் போராட்டம்"

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகள், தலித் வரலாற்றில் முக்கியமானவை. தொண்ணூறுகளின் முற்பகுதியில் தலித் மக்களுக்கு எதிராகத் துவங்கிய சாதி வெறியாட்டம், தென் தமிழகத்திலிருந்து நகர்ந்து வடக்கே மய்யம் கொண்டது. எத்தனை தலைகள் உருண்டன; எத்தனை ஊர்கள் எரிந்தன என்கிற கணக்குக் கூட இப்போது நினைவில் இல்லை.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல - இந்திய அளவிலும் கூட தலித் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் கடந்த பத்தாண்டுகளாகக் கூடிக்கொண்டே வருகின்றன. பீகாரில் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டோம்; ராஜஸ்தானில் நிர்வாணமாக ஊர்வலம் விடப்பட்டோம்; கர்நாடகாவில் வீட்டோடு வைத்து எரிக்கப்பட்டோம்; உத்திரப் பிரதேச நீதிமன்றத்தில் நாம் அமர்ந்த நாற்காலி, கங்கை நீர் கொண்டு கழுவப்பட்டது.




நூல் : கொதிப்பு உயர்ந்து வரும்
ஆசிரியர் : ரவிக்குமார்
வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம், 669, கோபி சாலை நாகர்கோயில்
பக்கங்கள் : 208
விலை : 75

இந்த ஆண்டுகளில்தான் நமது இடஒதுக்கீட்டைப் பறிக்கும் அரசாணைகள் போடப்பட்டன; அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பை அழிக்க ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன; கொடியங்குளம் நொறுக்கப்பட்டது; சிதம்பரம் தொகுதி எரிக்கப்பட்டது; மேலவளவில் வெட்டப்பட்டோம்; தாமிரபரணியில் நமது உடல்கள் மிதந்தன.

போலிஸ் வேட்டைக்கு அஞ்சி வயல்வரப்புகளில் பதுங்கிக் கிடந்ததும்; குண்டர் சட்டத்தில், என்.எஸ்.ஏ. வில் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டதும்; விசாரணைக் கமிஷன்கள் நமக்கெதிராய் விஷம் கக்கியதும் இந்த ஆண்டுகளில்... இந்த ஆண்டுகளில்... இந்த ஆண்டுகளில்தான் நடந்தன.

காதலித்த குற்றத்துக்காக உயிரோடு எரிக்கப்பட்டோம்; பாலியல் வன்முறைக்கு ஆட்பட்டோம்; அடிக்கப்பட்டு உதைக்கப்பட்டு - கர்ப்பங்களில் நம் சிசுக்கள் சிதைந்தன. எல்லாமே இந்த ஆண்டுகளில்... இந்த ஆண்டுகளில்தான் நடந்தன.

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டமென்பது, மறதிக்கு எதிரான ஞாபகங்களின் போராட்டமாகும். காலம் தோறும் நமது கதறல், சுவடின்றி கரைந்து போனதுபோல் இப்போதும் ஆகிவிடக் கூடாது.

சட்டத்தின் பெயரால், சாதியின் பெயரால், நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்; அரசியல் கட்சிகள், அரசாங்கங்கள் நமக்கு செய்துவரும் துரோகங்கள்; இத்தனைத் தாக்குதல்களையும் எதிர்த்து நம்மிடையே ஏற்பட்டுவரும் எழுச்சிகள் - இவற்றைப் பதிவு செய்யவேண்டியது அவசியமில்லையா? அந்த முக்கியமான பணியைத்தான் இந்த நூலிலுள்ள கட்டுரைகள் செய்துள்ளன.

அரசியல் கலாச்சாரத்தையும், கலாச்சார அரசியலையும் விவாதிக்கின்றன, இந்தக் கட்டுரைகள்.

நாற்பத்தோரு கட்டுரைகள். 208 பக்கங்கள். பாதுகாத்து வைப்பதற்காக அல்ல; படித்து நம்மை நாமே உயிர்ப்பித்துக் கொள்வதற்காக வெளிவருகிறது இந்தத் தொகுப்பு - விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பாளர் திருமாவளவனின் முன்னுரையோடு.

- ஆய்வாளன்



படிப்பகம்

www.padippakam.com



## நவீன நாடகப் போக்கின்

# அமைதி அரசு



வெளியே மேகம் பொழிந்து கொண்டிருந்தது. கலையின் தேடலும், வாழ்க்கையின் தீவிரமும் இணைந்தவராய் எங்கள் முன் தன் கருத்துகளைப் பொழிந்து கொண்டிருந்தார் அமைதி அரசு.

நம்புவதற்கு சிரமமாகத்தான் இருக்கிறது. மதுரை - தமிழர் மாநாட்டிற்கு 'அவ்வை' நாடகத்தில் அதியமானாக நடித்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது கொடூர விபத்து. கால் இரண்டு துண்டாய் உடைந்து, சிறுநீரகம் முற்றிலுமாகச் செயலிழக்க - மருத்துவர்கள் நேரம் குறித்து விட்டனர். ஆனால், அமைதி எழுந்து விட்டார்.

தீவிரமான கருத்துள்ள 'பொன்னி', 'சாரதி' இரண்டு நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்திருக்கிறார். கலையின் மீது தீராத அவரின் பிடிப்பு, அவரை உயிர்த்தெழ வைத்து விட்டது. நாடகத் துறையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்ற அமைதி, இன்று நவீன நாடகத்தின் புதிய பரிமாணத்தைக் காட்டுபவராக, அதன் குறியீட்டுத் தளமாக இருக்கிறார்.

நவீன நாடகத்தில், மரபுக் கலைகளை மீண்டும் அதன் சொந்த மக்களிடமே கொண்டு செல்ல 'நாலந்தா கலை பண்பாட்டு இயக்கத்தை' தன் நண்பர்களுடன் இணைந்து தொடங்கியுள்ளார். நவீன நாடகத்தை வெகு மக்கள் கலையாகக் கொண்டுசெல்ல பயணிக்கும் அமைதி, மேல்சீசமங்கலம் (ஆரணி) கிராமத்தில் வசித்து வருகிறார். அவருடன் உரையாடியதிலிருந்து...

சந்திப்பு : **யாக்கன், பாண்டியன்**

**◇ நாடக ஆர்வம் எப்படி வந்தது?**

என்னோட தாத்தாவிடமிருந்துதான். அவர் ஒரு நாடக ஆசிரியர். அதுவுமில்லாமல் ஊரில் சில விஷயங்களை சொல்வதற்கு நாடகம் சிறந்த வழியாகத் தெரிந்தது. அத்துடன் என்னுடைய சென்னை பல்கலை நாடக சூழலும் இதற்கு ஒரு காரணம்.

**◇ தெருக்கூத்து தொடர்பான உங்களின் கருத்து என்ன?**

இது ஒரு அரங்க வடிவம். நிகழ்த்துக் கலை வடிவிலான அழகியல் அம்சங்களை உள்ளடக்கியது. தெருக்கூத்தில் குறைந்த எண்ணிக்கையில் இசைக்கருவிகளைக் கொண்டு உடல் மொழியுடன் (Body Language) கூடிய மனித ஓசை இங்கு முக்கிய பங்கு வகிக்கின்றது.

**◇ தெருக்கூத்தில் பிற சமூகத்தினரால் தலித் கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவது உண்டா?**

நிச்சயமாக. திரவுபதி அம்மன் தீ மிதி திருவிழாவின் போதும் இதனை நாம் பார்க்கலாம். ஆனால், இதனை சடங்கு என்று கூற முடியாது. பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏற்பாடு செய்யும் கூத்துகளில், தலித் கலைஞர்கள் பங்கேற்க அனுமதி கிடையாது.

**◇ நாடகம் அழிந்து வருகின்றதா..?**

இதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நாடகம் சிதைந்து வருகின்றது என்று சொல்லலாம். அதில் கூட, மாற்றங்களைத் தான் நாம் சிதைவு என்கின்றோம். இதனைப்போல் தெருக்கூத்து அழிந்து வருகின்றது என்று சொல்கிறார்கள். முதலில் இதை யார் சொல்கிறார்கள் என்பதில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்து யாரிடம் இருந்து அழிந்து வருகின்றது என்று பேசலாம். தெருக்கூத்து முற்றாக அழிந்து விட்டது என்று சொல்ல மாட்டேன். தெருக்கூத்து நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை வேண்டுமானால் குறைந்திருக்கலாம். ஆனால், அரிதத் தெருக்கூத்து என்ற வடிவம் இன்றும் இருக்கின்றது.



**◇ நாடகத்தின் தோற்றம் என்ன?**

நாடகம் என்பது புதிய வடிவம். பல்லவர், சோழர் காலத்திலும் பின்பு சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றக் கதையிலும் குறிப்புகள் இருக்கிறது. ஆனால், நாடகம் நிகழ்த்தப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. தொடர்ச்சியாக குறவஞ்சி, பள்ளு போன்றவற்றில் நாடகம் நடைபெற்றதற்கான சான்று இருந்திருக்கின்றது. அதற்குப் பின், பிரிட்டிஷ் காரர்களை மகிழ்விக்க, பார்சி குழுவும் தஞ்சையில் மராட்டியர் குழுவும் நாடகங்களை நடத்தினர். இவை ஜமீன்கள், சிற்றரசர்கள் பெரும்பணக்காரர்கள் ரசிக்கும் வகையில் அவர்களுக்கான கலை வடிவமாக இருந்தது. பின்பு இது மெல்ல மக்கள் மத்தியில் வந்தது.

ஏற்கனவே கூத்து, வில்லுப்பாட்டு, குறத்தி போன்ற அரங்க வடிவத்தில் இருந்தவர்கள் இதை உள்வாங்கிக் கொள்கின்றனர். இவர்களுக்கு இருக்கிற தொன்மம், வாய் வழி கதைகளை நாடகமாக்குறாங்க. இதை முழு வீச்சாகக் கையிலெடுத்தவங்க - சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார். இதில், முதலியார், நகரம் சார்ந்தவர்களுக்கும் சங்கரதாஸ் சுவாமிகள் கிராமம் சார்ந்தவர்களுக்கும் நாடகம் போட்டனர்.

**◇ இவர்களின் நாடகத்திற்கான கதை என்னவாக இருந்தது?**

பம்மல் சம்மந்த முதலியார், ஆங்கிலத் தாக்கமுள்ள கதைகளாய் போட்டதோடு நகரில் சபாக்கள் உருவாகக் காரணமானவர். சங்கரதாஸ் சுவாமிகள் புராணத்தில் உள்ள கிளைக்கதைகளை நாடகமாக்கினார். 'பவளக்கொடி', 'அல்லி அர்ச்சுனா' போன்றவை.

**◇ இதன் விளைவு என்ன?**

இதனால், தமிழ் அரங்க வடிவங்கள் இயல்பான பரிணாமத்தை அடைய வாய்ப்பில்லாமல் போய்விட்டதோ என்று தோன்றுகிறது.

**◇ இதில் நவீன நாடக வடிவம் எப்போது தோன்றியது?**

1970இல் தான் நவீன அரங்கியல் தொடங்கியது. பாதல் சர்க்கார், சென்னையில் நடத்திய பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து, நவீன நாடக அரங்கு தொடங்கியது. இது, வடிவத்திற்கான பயிற்சி மட்டுமே. ஆனால், தளங்களின் கருத்து வேறு, வேறு.

**◇ இதன் களம் எதை நோக்கியது?**

நவீன நாடகம் என்பது மக்களை சார்ந்ததாக இல்லை. நிறுவனம் சார்ந்து அல்லது கல்வியாளர்களைச் சார்ந்து இருக்கிறது.

> **"நவீன நாடகத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, நெருக்கடி, சமூக மாற்றத்திற்கான அரங்கை கட்டியம் கூறுகிறது. அந்த சமூக மாற்றத்திற்கான அரங்கு, தலித் அரங்காகத்தான் இருக்க முடியும்."**

**◇ ஏனிந்த நிலை?**

நவீன நாடகச் சூழ்நிலையைப் பார்க்கும்போது, அதன் பரிசோதனை முயற்சிகள் அறிவார்த்தமானவை. நடிகனை பரிசோதனைக்கு உட்படுத்துவது - நிகழ்த்துவது ஆகியன. அடுத்து பிரதி உருவாக்கம், அதன் அளிக்கை முறைக்கான வடிவம். இதன் மூலம் பார்வையாளனை எந்த இடத்திற்குக் கொண்டு செல்வது என்பது முக்கியமானது. இதில் பல கருத்துகள் உண்டு.

ஆனால், நவீன நாடகக்காரர்கள், மரபுக் கலைகளைக் கையிலெடுத்தாலும் சாமான்ய மக்களிடம் அவர்களால் பேச முடிவதில்லை. நவீன நாடகத்தில் 'தப்பை' பயன்படுத்தினால், தப்பு அடிக்கும் மக்களிடம் அதுபோய் சேர்வதில்லை. ஏனென்றால், அந்த மக்கள் கேட்கும் கேள்விக்கு இவர்களால் பதில் சொல்ல முடியாது. அதனால் தான் நவீன நாடகக்காரர்களுக்கே நாடகம் நிகழ்த்தப்படுகிறது.

**◇ வீதி நாடகங்கள் இதிலிருந்து வேறுபட்டது இல்லையா?**

ஆமாம். இதுவும் பாதல் சர்க்காரின் வரவினால்தான். வீதி நாடகங்கள் மக்களிடையே அவர்களது சொந்தப் பிரச்சினையை மய்யப்படுத்தி, முச்சந்தி, தெருமுனைகளை களமாய்க் கொண்டு நிகழ்த்தப்பட்டது.

**◇ இதில், பார்வையாளன் எப்படிப் பங்கேற்கிறான்?**

இதில் நடிகனுக்கும், பார்வையாளனுக்கும் உறவு இருக்கிறது. இதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல முடியும். "நாங்க தருமபுரியில் பெண் சிசுக் கொலை தொடர்பாக வீதி நாடகம் போட்டபோது, ஒரு பெண்மணி எழுந்து "நீங்க சொல்லிட்டுப் போயிடுவீங்க, பொண்ண பெத்து, வரதட்சணை கொடுக்க முடியாம நாங்க தானே கஷ்டப்படுகிறோம். எனக்கு நாலு பொண்ணு இருக்கு. 30, 28, 26, 24 வயசுல இருக்காங்க. இவங்கள எப்படி கரையேத்துறது" என்று பேசினாங்க. நாங்களும் அரிதாரத்தோடு அவருக்குப் புரிய வைத்தோம். இது வீதி நாடகத்தின் சிறப்பு.



படிப்பகம்

www.padippakam.com



◇ **சாமான்ய மக்களுக்கான பொருத்த மான கலை வடிவம் - நவீன நாடகமா, வீதி நாடகமா?**

பொருத்தமான அரங்கு என்பதைவிட, எது தேவை என்று புரிந்து கொள்ளலாம். நவீன நாடக வடிவத்தில் சொல்ல முடியா தென்பது இல்லை. இதற்கான முயற்சி நடக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். வலின்னா உடனே எதிர்வினையாற்று வதற்கு வீதி நாடகம் தேவைன்னு சொல்ல லாம். அவசியமானதுதான்.

Forum form இதில் வீச்சான உத்தி. Forum form என்பது நடிகனும் பார்வையா ளனும் இணைந்து பங்கேற்கும் ஒரு வடிவம். எடுத்துக்காட்டாக, ஒரு பிரச்சினையை இரண்டு நடிகர்கள் மக்கள் மத்தியில் விவாதம் செய்வார்கள். நாடகம் என்பது மக்களுக்குத் தெரியாது. அதனால் விவாதத்தில் கலந்து கொள்வார்கள். இதை Invisible Theatre என்போம். இதை பாதல் சர்க்கார் முயற்சித்தார், பிறகு நாங்கள் முயற்சித்தோம். இனியும் தொடர்வோம்.

◇ **உங்கள் நாடகம் சாமான்ய மக்களிடையே வெற்றி பெற்றுள்ளதா?**

ஆம். எடுத்துக்காட்டாக, எங்கள் கிராமத்தில் பொன்னியம்மன் தெய்வம் இருக்கிறது. பொன்னி என்கிற முதலியார் பெண், சந்திரன் என்கிற தலித்தை காதலித்து அதனால் திருமணம் நடக்க இருந்த நேரத்தில், தாழம் புதரில் அவள் சாமியாகி விட்டாள். இக்கதை மரபில் நாங்கள் எதை எடுத்தோமென்றால், தலித் ஒருவன் முதலியார் பெண்ணைக் காதலிப்பதை ஏற்காமல் அவர்களை கொலை செய்து விடுவதாக நாடகம் நடத்தினோம்.

பொன்னி சாமியல்ல, அவள் பெண் என்பதாக நடித்தோம். பொன்னி தலித் மக்களிடம், என்னை கைவிட்டுட்டீங்களே, என்னைக் கொலை பண்ணிட்டாங்களேன்னு புலம்பினாள். இக்காட்சியால் தலித் மக்களில் பலருக்கு சாமி வந்துவிட்டது. ஆவேசமாய் முதலியார்களைப் பழிவாங்கத் துடித்தார்கள். மரபை மீட்டுருவாக்கம் செய்ததின் வெற்றி இது. மறுநாள், கழனியில் மக்களிடையே இதே பேச்சு. பொன்னி, சாமியா? பெண்ணா? என்பதே அங்கு பெரும் பேச்சாக இருந்தது. இந்த மாதிரிதான் மரபுகளை உடைக்க வேண்டியிருக்கிறது.

◇ **இதில் எந்த அரசியலைத் தேர்வு செய்கிறீர்கள்?**

ஏற்கனவே இருக்கிற கருத்தாக்கங்களும் - வடிவங்களும் வெகுமக்களுக்கு சாதகமாக இல்லை. இப்போது உண்மைக் கூறுகளைத் தேடிச் சொல்லும் அரசியல் தான் மீட்டுருவாக்கம் செய்வது. கதையாடல்களை எப்படிக் கட்டமைத்தார்கள் மற்றும் மொழி, கதைகள் ஆகியவற்றை ஆய்விற்குட்படுத்துவது.

◇ **தலித் மக்களிடையே உள்ள கலை பற்றி உங்கள் கருத்து என்ன?**

தலித்தின் கலையென்பது அவனது வாழ்க்கையோடு சேர்ந்த அதிகாரம் - ஆற்றல் - படைப்பாற்றலை உள்ளடக்கியதுதான். எடுத்துக்காட்டாக, தப்பாட்டம். அவனது கோபம்தான் தப்பாட்டம். அவனது ரிதம், அசைவு அதில் வெளிப்படுகிறது. இப்படித்தான் அவர்களது அனைத்து வடிவங்களும்.

> **“ தலித்தின் கலை என்பது அவனது வாழ்க்கையோடு சேர்ந்த அதிகாரம் - ஆற்றல் - படைப்பாற்றலை உள்ளடக்கியதுதான். அவனது கோபம்தான் தப்பாட்டம். அவனது ரிதம், அசைவு அதில் வெளிப்படுகிறது. ”**

◇ **நீங்கள் பங்கேற்ற 'பல்கலை அரங்கம்', 'மவுனக் குரல்' நாடக இயக்கங்கள் பற்றி..?**

டாக்டர் பழனிக் கூத்தன், செல்வம் ஸ்டான்லி, வெங்கடேசன், நான். நாங்கள் இல்லையென்றால் இவை இல்லை. இரு நாடக இயக்கமும் நாடகத் துறையில் பல புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியதென்றால், அது எங்களால்தான். இதை யாரும் மறுக்க முடியாது.

◇ **படைப்பிற்கும் - படைப்பாளனுக்குமான இடைவெளி?**

முக்கியமான விஷயம் இது. கலைக்கான படைப்பானது வாழ்க்கை அனுபவமாக இருக்கிறது. வாழ்க்கை நேர்மையாக இருக்குமானால், நாடகத்தைப் பொருத்தவரையில் இடைவெளி இருக்காது; கலை அம்சம் இருக்கும். இல்லை என்றால் வெறும் நடிப்புதான் மிஞ்சும்.

◇ **நாடகத்தில் நிகழ்த்துனரின் உடல் மொழியில் இயக்குனரின் பங்கு என்ன?**

நாடகத்தைப் பொருத்தவரையில், உடல் மொழியின் பயன்பாட்டை இயக்குனர்தான் தீர்மானிக்கிறார். நடிகனாக எனக்குள் உருவான என் பாரம்பரிய உடல் மொழியை, அசைவைக் கூட இயக்குனரே கட்டுப்படுத்துகிறார். நிகழ்த்துனர் ஒத்திகையின் போது எத்தனை விதமான உடலசைவுகளைக் காட்டினாலும், ஏற்கெனவே இயக்குனருக்குப் பிடித்த ஒன்றைத்தான் அவர் தேர்வு செய்கிறார். இதன் பொருள், பார்வையாளனின் விருப்பத்தைக் கூட, அவரே தீர்மானிக்கிறார் என்பதுதான். இதையும் மீறி, நிகழ்த்துனரின் உடல் மொழி இயங்கத்தான் செய்கிறது. இதில் இயக்குனர் யார் என்பதுதான் கேள்வி.

இரண்டாவது, உடல் மொழியை நான் தனித் தனி கோர்வையாக உருவாக்குகிறேன். இதில் என் வாழ்க்கை உருவாக்கிய



படிப்பகம்

www.padippakam.com

உடல் மொழியும் சேர்ந்து முழு வீச்சாக என்னை அறியாமல் செயல்படுகிறது. பிறகு அது ஒரு பிரம்மாண்டத்தைப் பார்வையாளனிடம் ஏற்படுத்துகிறது. இதில் அழகியல், உடல் மொழியின் பொருள் எல்லாம் புதிய பரிமாணத்தைத் தருகிறது. இதை என் 'சாரதி'யில் காணலாம்.

◇ **உங்கள் 'சாரதி' நாடகம் பற்றி?**

பெண் ஒப்பனை ஏற்கும் ஆண் பற்றியது 'சாரதி'. பெண் ஒப்பனை ஏற்கும் ஆண், கொஞ்சம் கொஞ்சமாக பெண் ஒப்பனையை ரசிக்க ஆரம்பிக்கிறான். அதற்குள் அவன் எப்படிப் பயணிக்கிறான். இதில் அவன் உடல் மொழி எப்படி மாறுகிறது? ஆணின் உடல் மொழி, பெண் ஒப்பனையில் எப்படி மாறுகிறது என்பதை கவனித்தேன். கதைப்படி, ஒரு ஆண் பெண்ணாக நடிக்கிறான். அவனே தன் சொந்த குடும்பத்தில் ஆணாக இருக்கிறான். இந்த இரண்டுக்கும் இடையிலான முரண்பாடு தான் உடல் மொழியின் ரகசியம் சார்ந்ததாக 'சாரதி' இருக்கிறது.

◇ **நவீன நாடகத்தின் மொழி பற்றி?**

நவீன நாடகத்தில் மொழி முக்கிய பங்கு வகிக்கிறது. அதில் செய்யப்படும் பரிசோதனை குறித்து நவீன நாடகக்காரர்களுக்கு பெருமிதம் இருக்கிறது. என்னைப் பொருத்த வரையில், இந்த மொழி பரிசோதனைதான் அரங்கியல் மொழி இல்லை. நாடகத்தில் இதை செய்யும் போது, அது என் வாழ்க்கையாக மாறுகிறது. அதில் சொற்கட்டுகள் வேறாக இருக்கலாம். ஆனால், அர்த்தம் வாழ்க்கை சார்ந்தது. அதே நேரத்தில், இது அறிவு ஜீவி நாடகக்காரர்களையும் சார்ந்தது.

◇ **நவீன நாடகத்தில், கோமாளி அல்லது சிரிப்பு வரவழைக்கிற பாத்திரத்திற்கு சாதாரண மக்கள் மொழி குறிப்பாக, சென்னை குடிசை மக்களின் மொழியைப் பயன்படுத்துகிறாங்களே?**

மொழியின் இலக்கியத் தன்மையைத் தேடும் மேதைகள்தான் இதையும் செய்கிறார்கள். கலைக்கும் அவர்கள் பயன்படுத்தும் இதற்கும் தொடர்பே இல்லை. அவங்க மண்டையில் இருக்கும் மரபுதான் இதற்குக் காரணம். இது, நவீன நாடகத்தில் மட்டுமில்லை, சினிமா மற்றும் சின்னத் திரையிலும் கூட தொடர்கிறது.

◇ **நாடகத்தில் படைப்பாக்க மரபு குறித்து...**

நவீன நாடகத்தில் இயக்குனர்தான் படைப்பாளர் என்று சொல்றாங்க. பனுவல்



(Script) வரைக்கும் அவன் படைப்பாளனாக இருக்கலாம். ஆனால், நாடகம் நிகழ்த்தப்படும் போது அது கூட்டுப் படைப்புதான். நானும் ஒரு இயக்குனர் என்ற முறையில இதைச் சொல்கிறேன். இதை எல்லா நவீன நாடகக் காரர்களும் ஒத்துக் கொள்வதில்லை.

**"என்னுடைய விபத்து பல பேரை அடையாளம் காண உதவியது. முற்போக்கு பேசிய பலர் - நான் உயிருள்ள பிணமாக இருந்தபோது, தங்களது வேடத்தைக் கலைத்து விட்டார்கள். விபத்தை விட வேதனையானது அது. காலம் அவர்களை வெளிப்படுத்தும்."**

அடுத்து, தொடர்ச்சியான விவாதம் தான் படைப்பாக்கம். அதில் எங்களின் 'சாரதி'யும் கூட ஒட்டுமொத்த விவாதத்தின் வெளிப்பாடுதான். நாடகக் கட்டமைப்பில் அறுதியான வடிவம் இருக்கக் கூடாது. இதை சிலர் நிர்ணயம் செய்யுறாங்க. ஆனால், அப்படி கூடாது. இதை நோக்கிய தேடல் தான் என் பயணம்.

◇ **உங்களுக்கு நடந்த விபத்து பெரிய தடையாக இல்லையா?**

இல்லை. என்னுடைய விபத்து பல பேரை அடையாளம் காண உதவியது. முற்போக்கு பேசிய பலர் - நான் உயிருள்ள பிணமாக இருந்தபோது, தங்களது வேடத்தைக் கலைத்து விட்டார்கள். விபத்தை விட வேதனையானது அது. காலம் அவர்களை வெளிப்படுத்தும்.

◇ **உங்களின் பிற ஆய்வுகள் பற்றி...**

பெண் நாடகக் கலைஞர்களைப் பற்றி 6 ஆண்டுகள் ஆய்வு செய்திருக்கிறேன். அவர்களது நாடக வாழ்விற்கும், குடும்ப வாழ்விற்குமான முரண்பாடு பற்றியது என் ஆய்வு. அந்தப் பெண் கலைஞர்கள், அரங்கை பலமாகவும், குடும்பத்தைப் பாதுகாப்பாகவும் பார்க்கிறார்கள். இதில் தலித் பெண்களும் அடக்கம். பல நேரம் அவர்களது குடும்பம் இதனை சந்திக்கிறது. இந்த ஆய்வு இன்னும் முடியவில்லை. இது தவிர, தமிழ் அரங்க வரலாறு, தெருக்கூத்து, மேடை நாடகம் - சமூகவியல் ஒப்பாய்வு' குறித்து ஆய்வு செய்து வருகிறேன்.

◇ **தற்போதைய நவீன நாடக அரங்கத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**

தலித்துகளின் வாழ்வியல், கலைகளைக் கொண்டும், அவர்களது உடல் மொழிகளைக் கொண்டும் நவீன நாடகங்கள் வெகுதூரத்திற்கு வந்து விட்டன. நாடக இயக்கவியல் படியே நவீன நாடகம் மரபுகளை விசாரணை செய்யும் கட்டத்திற்கு வந்து விட்டது. ஆனால், இந்த விசாரணைக்கு நவீன நாடக அரங்கு தயாராக இல்லை. இதனால் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, நெருக்கடி, சமூக மாற்றத்திற்கான அரங்கை கட்டியம் கூறுகிறது. அந்த சமூக மாற்றத்திற்கான அரங்கு, தலித் அரங்காகத் தான் இருக்க முடியும். ●

புகைப்படங்கள் : மணலி ஜெயசீலன்




படிப்பகம்

www.padippakam.com

# மால்கமை ஈர்த்த இஸ்லாம்

மால்கம் எக்ஸ் : ஒரு போராளியின் வரலாறு - 7



■ ரவிக்குமார்

கறுப்பினக் கைதி - வெள்ளையின சமூகத்தினுடைய குறியீடு. வெள்ளையின சமூகமே கறுப்பர்களை ஒடுக்கி வைத்துள்ளது. அவர்களை மூடர்களாக்கி வைத்துள்ளது. அவர்களுக்கு நல்ல வேலை எதுவும் கிடைக்க முடியாதபடி ஆக்கி வைத்துள்ளது. அதனால் தான் கறுப்பின மக்கள் சிறுகுற்றங்களைச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, உண்மையான குற்றவாளி வெள்ளையின சமூகம் தானே தவிர, கறுப்பினத்தவர்கள் அல்ல'' என எலிஜா முகம்மது தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். கடிதத்துடன் அய்ந்து டாலர் பணமும் மால்கமுக்கு வந்திருந்தது. சிறைவாசிகள் தனக்குக் கடிதம் எழுதினால், அவர்களுக்கு இப்படி சிறு தொகையொன்றை அனுப்புவது எலிஜா முகம்மதுவின் வழக்கம்.

'நேஷன் ஆஃப் இஸ்லாம்' இயக்கம், 1930இல் டெட்ராய்ட் நகரில் துவக்கப்பட்டது. மெக்காவில் பிறந்ததாகக் கூறப்பட்ட ஒரு மனிதர் கறுப்பினத்தவரிடையே இஸ்லாம் பற்றி பிரச்சாரம் செய்தார். வாலஸ் ஃபார்ட் முகம்மது என தன்னைக் கூறிக்கொண்ட அவர், சவுதி அரேபியாவில் வாழ்பவர்களுக்கும் டெட்ராய்டில் வாழ்பவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றித்தான் முதலில் பிரச்சாரம் செய்தார்.

பின்னர் வெள்ளையர்களுக்கும் கறுப்பினத்தவருக்கும் இடையிலான உறவுகள் பற்றியதாக அவரது பிரச்சாரம் மாறியது. பைபிளிலிருந்து மேற்கோள் காட்டி அவர் பேசினாலும்கூட, குர்ஆன் தான் சரியான புனித நூல் என அவர் கூறி வந்தார். டெட்ராய்டில் ஒரு வழிபாட்டுக் கூடத்தையும் அவர் நிறுவினார். அவருக்குப் பிறகு வந்தவர் தான் எலிஜா பூலே.



படிப்பகம்

www.padippakam.com

அவர் தனது பெயரை பின்னர் எலிஜா முகம்மது என மாற்றிக் கொண்டார்.

'நேஷன் ஆஃப் இஸ்லாம்' பல விதங்களில் பிற மத அமைப்புகளிலிருந்து வேறுபட்டிருந்தது. அது, மதத்தைப் பற்றி பேசியதைக் காட்டிலும் அதிகமாக இனப் பிரச்சனையைக் குறித்துப் பேசியது. கறுப்பின மக்கள் தமது வரலாறு இன்னதென்று அறியாதிருப்பதால், வெள்ளையர்களின் மோசடிகளுக்கு பலியாகின்றனர். எனவே, அவர்களை அறிவுத்திறன் கொண்டவர்களாக்குவது முக்கியம் எனக்கூறி அதற்கான தயாரிப்புகளில் அந்த இயக்கம் ஈடுபட்டது.

பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் வெள்ளை இனத்தவரைச் சார்ந்திருப்பதால் - கறுப்பின மக்களின் துயரம் கூடவே செய்யும் என்பதை உணர்ந்த அந்த இயக்கம், பொருளாதார சுயசார்பு கொண்டவர்களாக கறுப்பின மக்கள் மாறவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

'நேஷன் ஆப் இஸ்லாம்' பற்றி தமது சகோதரர்கள் எழுதிய கடிதங்கள் மூலமாகவும், அந்த இயக்கம் குறித்து வெளியிடப்பட்டிருந்த நூல்கள் வாயிலாகவும் மால்கம் தொடர்ந்து அறிந்து வந்தார். தான் அறிந்தவற்றைத் தனது சக சிறைவாசிகளோடும், முன்பு தனக்கிருந்த நண்பர்களுக்கு கடிதமெழுதியும் மால்கம் பகிர்ந்து கொண்டார்.

தொழுகைக்காக மண்டியிடுவதுதான் தனக்கு மிகப்பெரும் சவாலாக இருந்தது என மால்கம் குறிப்பிடுகிறார். ''எலிஜா முகம்மதுவின் போதனைகளை ஏற்றுக் கொள்வதில் எனக்குப் பிரச்சனை இருக்கவில்லை. அது, எனது மனதின் ஒப்புதலை மட்டுமே கோரியது. ஆனால், தொழுவதற்காக மண்டியிடுவது அப்படியானதல்ல. அதற்கு எனக்கு ஒரு வாரம் பிடித்தது. மண்டியிடும் போதெல்லாம் அவமான உணர்வு என்னை எழுந்து நிற்கச் செய்துவிடும்'' என்கிறார் அவர்.

சிறையில் பெரும்பாலான நேரத்தைப் படிப்பதிலேயே செலவிட்டார் மால்கம். அது அவரது அறிவை விசாலப்படுத்தியது. ''ஒவ்வொரு நூலும் வெள்ளையர்கள் பிற இனத்தவரை எப்படியெல்லாம் ஒடுக்கினார்கள் என்பதையே எடுத்துக் கூறின''. பதினாறாம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆசிய, ஆப்ரிக்க சாம்ராஜ்யங்களைக் கைப்பற்ற வெள்ளையர்கள் என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை நான் படித்தேன். வெள்ளையர்கள் ஒரு போதும் கிறித்துவத்தின் எளிமையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதை நான் கண்டு கொண்டேன். பிரிட்டிஷ் வெள்ளையர்கள், இந்தியாவில் நுழைந்து அந்த மக்களை அடக்கி ஒடுக்கி அடிமை கொண்டதையும் அவர்களை எதிர்த்து 1857இல் நடந்த கலகத்தைப் பற்றியும் நான் படித்துத் தெரிந்து கொண்டேன்'' என்கிறார் மால்கம்.



இஸ்லாமுக்கு மாறியதால் மால்கம் தாடி வளர்க்க ஆரம்பித்தார். அவரை சிறையில் பார்ப்பதற்காக வந்த அவரது தம்பி ரெஜினால்டு அவரது தோற்றத்தைக் கண்டு நடுங்கி விட்டார். நாற்காலியில் சரியாக உட்காரக்கூட முடியாதபடி ஏதோவொன்று அவரை நடுங்கச் செய்தது. மால்கமிடம் அவர் கூறினார்: ''மால்கம் உனது தாடியில் இருக்கும் ஒவ்வொரு முடியும் ஒரு பாம்பு போலத் தோற்றம் தருகிறது. எங்கு பார்த்தாலும் எனக்கு பாம்புகளே தெரிகின்றன''.

1952 ஆகஸ்டு மாதத்தில் மால்கம் விடுதலை செய்யப்பட்டான். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது கொஞ்சம் பணமும், ஒரு மட்ட ரகமான உடுப்பும், அறிவுரைகளும் தரப்பட்டன. கதவைத் தாண்டி வெளியே வந்த மால்கம் திரும்பிப் பார்க்கவில்லை. தங்களுக்குப் பின்னால் சிறையை விட்டு விட்டு வரும் லட்சக்கணக்கான கைதிகளைப் போலவே மால்கமும் நடந்து கொண்டான். சிறை, அவன் உடம்பு முழுவதும் ஒரு துர்நாற்றமாக ஒட்டிக் கொண்டிருந்தது. ஒரு குளியலறைக்குச் சென்று அந்த நாற்றம் போகும்படியாகக் குளித்தான். தன்னிடமிருந்த பணத்தில் ஒரு கடிகாரம், ஒரு சூட்கேஸ், கண்ணாடி ஆகியவற்றை வாங்கினான்.

விடுதலையானபோது மால்கமின் வயது இருபத்தேழு. வாழ்வின் கால்பகுதியை சிறை தின்றுவிட்டது. ஆறரை ஆண்டுகள். அதில் உலகம் எவ்வளவோ மாறியிருந்தது. அவன் அறிந்திராத பொருட்களின் விளம்பர போர்டுகள், கார்கள் மாறியிருந்தன. பாஸ்டனிலிருந்து டெட்ராய்ட் செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தான். அந்த இருபத்து நான்கு மணி நேரப் பயணத்தில் அவனது மனம் சிறைக்கும் தெருக்களுக்குமாய் அலைந்தது. பல முறை கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். ஒவ்வொரு நிமிடமும் இப்போது முக்கியமாகப் பட்டது. இழப்பதற்கு இனிமேல் நேரம் இல்லை. புதிய உலகத்தில், தான் எப்படி பொருந்தப் போகிறோமென்ற கவலையும் அவனை ஆட்கொண்டது.

டெட்ராய்டில் இருந்த மால்கமின் சகோதரன் வில்ஃப்ரெட்டின் வீட்டுக்குத்தான் மால்கம் சென்று கொண்டிருந்தான். வில்ஃப்ரெட், மரச் சாமான்கள் விற்கும் ஒரு கடையில் வேலை செய்து கொண்டிருந்தான். அந்தக் கடையில் தான் மால்கமும் வேலை செய்வதாக ஏற்பாடாகியிருந்தது. சிறையில் இருந்து ஒருவரை விடுதலை செய்வதற்கு முன்பாக அவரை வேலைக்கு வைத்துக் கொள்வதாக ஏதேனும் ஒரு நிறுவனம் உத்தரவாதம் தரவேண்டுமென்பது, அமெரிக்காவில் சட்டமாக இருந்தது. வில்ஃப்ரெட்டின் ஏற்பாட்டில் அவனது கடை முதலாளி மால்கமுக்கு அந்த உத்தரவாதத்தைத் தந்திருந்தார்.

மரச்சாமான்கள் விற்கும் அந்தக் கடை, ஏழை மக்களை சுரண்டிக் கொண்டிருந்தது. மட்டரகமான சாமான்களை அதிக விலைக்கு விற்று வந்தது. கடனுக்குத் தருவதாகச் சொல்லி ஏராளமான வட்டியும் வசூலிக்கப்பட்டது. அந்தக் கடையின் முதலாளிகள் வெள்ளைக்காரர்கள். மால்கம் விடுதலையாகி வந்த பிறகு எதிர்கொண்ட வெள்ளையர்கள் அவர்கள்தாம். அவர்களை மிகவும் சந்தேகத்தோடுதான் அவன் அணுகி வந்தான்.

மால்கம், வில்ஃப்ரெட்டின் வீட்டிலேயே தங்கி இருந்தான். அவன் மால்

**விடுதலையானபோது மால்கமின் வயது இருபத்தேழு. வாழ்வின் கால்பகுதியை சிறை தின்றுவிட்டது. இப்போது ஒவ்வொரு நிமிடமும் முக்கியமாகப் பட்டது. இழப்பதற்கு இனிமேல் நேரம் இல்லை.**



படிப்பகம்

www.padippakam.com

கமைவிட முதிர்ச்சி அடைந்தவனாக - இஸ்லாத்துக்கு மாறியதிலும் அதன் மதக்கோட்பாடுகளிலும் பற்று கொண்டவனாக இருந்தான். தான் செய்வது குறித்த தெளிவு அவனுக்கிருந்தது. ஒரு முஸ்லிமின் மத வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அங்குதான் மால்கம் கற்றுக் கொண்டான். தினந்தோறும் காலையில் எழுந்ததும் செய்ய வேண்டிய மதக் கடமைகளைச் செய்து தொழுகையை முடிப்பார்கள். ஆண்கள் செய்து முடித்ததும் வில்ஃப்ரெடின் மனைவி தொழுவாள். அதன் பிறகு குழந்தைகள் தொழுவார்கள். சிறையின் கரடுமுரடான வாழ்க்கையை மறப்பதற்கு இந்த ஒழுங்குகள் உதவி செய்தன.



எலிஜா முகம்மது

டெட்ராய்டிலிருந்த மசூதியில் மால்கம் சேர்ந்தான். அங்கு வருபவர்கள் திருத்தமாக உடையணிந்து ஒருவர் மீது ஒருவர் மதிப்போடு நடந்துகொண்ட விதமும், அவர்கள் தாம் செய்யும் காரியங்களில் காட்டிய தீவிரமும் மால்கமைக் கவர்ந்தன. லாமுவேல் அசன் என்பவர் அந்த மசூதியின் அமைச்சராயிருந்தார். இஸ்லாமின் கோட்பாடுகள், எலிஜா முகம்மதுவின் போதனைகள், நேஷன் ஆப் இஸ்லாமின் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிகள் முதலியவற்றை அவர் போதித்தார்.

மால்கம் அவற்றை ஆர்வத்தோடு பயின்றான். தனது வாழ்வுக்கு ஒரு மதிப்பு வந்துவிட்டதாக உணர்ந்தான். சிறையில் பறிபோன நாட்களை மீட்டுவிடும் வேகத்தோடு எல்லாவற்றையும் விரைவில் கற்றுக் கொண்டுவிட வேண்டும் என்று மால்கம் துடித்தான்.

அந்த மசூதி, கறுப்பர்கள் வாழும் பகுதியின் நடுவில் இருந்தது. அதற்கு வெளியே தெருவில் கறுப்பின இளைஞர்கள் போதையின் வெறியில் திரிந்து கொண்டிருந்தனர். அந்தப் பக்கமாகச் செல்லும் இளம் பெண்களிடம் ஆபாசமான சைகைகளைக் காட்டி அருவருப்பாக நடந்து கொண்டார்கள். போதை பொருட்களைக் கடத்தி விற்பவர்கள் ஆங்காங்கே தென்பட்டார்கள்.

அவர்கள் செய்வது என்னவென்று மால்கமுக்குத் தெரியும். அவன் வாழ்ந்த வாழ்க்கைதான் அது. அவர்களெல்லாம் நேஷன் ஆஃப் இஸ்லாமின் அறை கூவலுக்கு செவி சாய்க்காதது ஏனென்று மால்கமுக்கு முதலில் விளங்கவில்லை. மசூதியின் கதவுகளைத் திறந்து வைத்து விட்டால் எல்லோரும் அங்கே வந்துவிடுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. அந்த சிறிய மசூதியில் பல இருக்கைகள் காலியாகக் கிடந்ததை மால்கம் பார்த்தான்.

கறுப்பின மக்களின் பெருமைகளைப் புரிந்த, கண்ணியமான, உறுதி கொண்ட மனிதர்கள் மசூதிக்குள், வெளியே தெருவின் அத்தனை அவலங்களும் நிரம்பிய இளைஞர்கள். இதை மாற்ற ஏதேனும் செய்தாக வேண்டுமென மால்கம் எண்ணினான். அது பற்றி வில்ஃப்ரெட்டிடம் பேசியபோது, நேஷன் ஆஃப் இஸ்லாமின் கொள்கைகளை சரியாகப் புரிந்து கொள்ளும் வரை அமைதியாயிருக்கும்படி அவன் அறிவுரை சொன்னான். எலிஜா முகம்மதுவை நேரில் சந்திக்க வேண்டும் என்ற தவிப்பு மால்கமை பாடாய்ப்படுத்தியது. அப்போது எலிஜா முகம்மது சிகாகோவில் இருந்த இரண்டாம் எண் மசூதியில் போதனைகளை செய்து வந்தார்.

டெட்ராய்டுக்கும் சிகாகோவுக்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. டெட்ராய்ட் பெரும் தொழிற்சாலைகளைக் கொண்ட நகரம். அங்கு கறுப்பர்கள் ஒதுக்குப்புறமான வறுமை அடர்ந்த சூழலில் வசித்து வந்தனர். டெட்ராய்டில் வாகன உற்பத்தித் தொழில் வீழ்ச்சியடைந்தபோது, அத்துடன்கூட கறுப்பர்களின் வேலைவாய்ப்பும் பெரிதாக சரிந்து போனது. சிகாகோவின் நிலைமை அப்படியில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் சிகாகோ உருவாக்கப்பட்டபோது, பான்ட் து சாப்லே என்ற கறுப்பர் திட்டம் வகுப்பதில் உதவியிருந்தார். சிகாகோவில் அழகான வீடுகளில் கறுப்பர்கள் வசித்து வந்தனர். பரபரப்பான அந்த நகரில் அனைத்துத் தளங்களிலும் கறுப்பின மக்கள் பங்களிப்பு செய்து வந்தனர்.

1952இல் ஒரு ஞாயிற்றுக் கிழமை. டெட்ராய்டிலிருந்து பத்து கார்கள் சிகாகோவுக்குப் புறப்பட்டன. சிகாகோவுக்குள் நுழைந்தபோது, மால்கமுக்கு ஆர்வத்தில் இதயமே நின்றுவிடும் போலிருந்தது. டெட்ராய்ட், சிகாகோ இரண்டு மசூதிகளையும் சேர்த்து இருநூறு பேர்களுக்குள்தான் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் அன்று சிகாகோவில் கூடியிருந்தார்கள். கூட்டத்தின் அளவு சிறியதாக இருந்தாலும் அது மால்கமுக்குள் ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியதாக இருந்தது.

மசூதியின் பின் பக்கத்திலிருந்து மேடையை நோக்கி எலிஜா முகம்மது வந்தார். சிறிய, பழுப்பு நிறமான கண்ணியமும் உணர்ச்சியும் நிரம்பிய எலிஜா முகம்மதுவின் முகம் - அதுவரை புகைப்படங்களில் மட்டுமே பார்த்திருந்த முகம். காவலர்கள் சூழ தன் எதிரில் மேடைக்கு வந்தபோது, மால்கமுக்கு உடலின் ரத்தம் முழுவதும் தலைக்குள் பாய்ந்துவிட்டது போலிருந்தது.

அவர்கள் அடர்த்தியான நிறத்தில் சூட் அணிந்திருந்தனர். வெள்ளை நிற சட்டை, டை. எலிஜா முகம்மது தங்க நிறத்தால் அலங்கரிக்கப்பட்ட குல்லாய் ஒன்றை அணிந்திருந்தார். அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி அவர் பேசத் தொடங்கினார்: ''வெள்ளையின எதிரிகளோடு இறுதி யுத்தத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். இதைப் புரிந்து கொள்ளாத கறுப்பர்கள் ஆன்ம ரீதியாக செத்துப்போனவர்கள்'' என்றார்.

தான் சிறையில் இருந்தபோது தனக்கு கடிதம் எழுதிய மனிதர் தனக்கு அறிவுரைகளைச் சொன்னவர், தனது வாழ்வின் திசையை மாற்றி அதற்கு அர்த்தத்தை ஏற்படுத்தியவர் - அந்த எலிஜா முகம்மது தன் முன் பேசிக் கொண்டிருக்கிறார். சிறையில் தான் கண்ட காட்சி மால்கமுக்கு நினைவுக்கு வந்தது.



படிப்பகம்

ஒரு நாள் இரவு சிறையில் மால்கம் உறங்கிக் கொண்டிருந்தான். திடீரென வழக்கத்துக்கு மாறாக ஏதோ நடப்பது போல ஓர் உணர்வு. விழித்துப் பார்த்த போது எதிரில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவர் கறுப்புமல்ல, வெள்ளை நிறமுமல்ல, பழுப்பு நிறம். அவர் முகம் இப்படித்தானென விவரிக்க முடியாதிருந்தது. அவர் மால்கமையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அவனை ஊடுருவுகிறது அந்தப் பார்வை. பிறகு அவரைக் காணவில்லை. அது கனவா அல்லது நிஜமாக நடந்ததா என மால்கமால் தீர்மானிக்க முடியவில்லை. அந்த சம்பவம் இப்போது மால்கமுக்கு ஞாபகத்துக்கு வந்தது. திடீரென்று எதுவோ தன்னைத் தாக்கியதுபோல் அதிர்ந்தான் மால்கம். எலிஜா முகம்மது தனது பெயரைச் சொல்லி அழைத்தது, அவனால் நம்பமுடியாததாயிருந்தது.

"என்னை நேராகப் பார்க்கவில்லை. என்னை எழுந்து நிற்கும்படி அவர் அழைத்தார். நான் சமீபத்தில்தான் சிறையிலிருந்து வெளியே வந்தேன் என்பதையும், நான் சிறையிலிருந்தபோது எவ்வளவு உறுதியோடு இருந்தேன் என்பதையும் கூட்டத்தினருக்குக் கூறினார். பல ஆண்டுகள் சகோதரர் மால்கம் சிறையிலிருந்து எனக்கு கடிதம் எழுதி வந்தார். நானும் அவருக்கு இயன்றபோதெல்லாம் பதிலெழுதினேன் - எலிஜாவின் பேச்சு தொடர்ந்தது. நான் எழுந்து நின்று கொண்டிருந்தேன், அங்கிருந்த இருநூறு பேர்களின் கண்களும் என்மீதே நிலைகுத்தி நின்றன."

"ஒரு நாள் தனது விசுவாசி ஒருவனின் விசுவாசத்தைப் பரீட்சிக்க கடவுள் விரும்பினார். அவனைச் சுற்றிலும் நமது பாதுகாப்பு இருக்கிறது. அதனால் தான் அவன் விசுவாசியாக இருக்கிறான். அதை நீக்கி விட்டால் உங்கள் முகத்துக்கு நேராகவே அவன் உங்களைப் பழித்துப் பேசுவான் என பிசாசு கடவுளிடம் சவால் விட்டது. இப்போது சகோதரர் மால்கமுக்கு இருந்த அரண் நீக்கப்பட்டுவிட்டது. அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை இப்போது நாம் பார்க்கலாம். நிச்சயம் அவர் நம் விசுவாசியாகவே இருப்பாரென நான் நம்புகிறேன்" - எலிஜா முகம்மது பேசிய ஒவ்வொரு வார்த்தையும் தனக்கு மறக்கவே இல்லை என தனது சுயசரிதையில் நினைவு கூர்கிறார் மால்கம். ●

- தொடரும்

# குடிநீரில் விஷம் கலந்த சாதி இந்துக்கள்

சேலம் மாவட்டத்தில் உள்ளது கொண்டப்ப நாயக்கன்பட்டி. பார்ப்பன - இந்து மதம், தலித் மக்களை ஒடுக்குவதோடு நின்று விடுவதில்லை; ஒடுக்கப்படுபவர்கள் உரிமைக் குரல் எழுப்பினால், அவர்களைக் கொன்று விடவும் அது தயங்குவதில்லை.

செத்த பிணத்திற்கு சுடுகாடு கேட்டதில் தொடங்கியது பிரச்சனை. மூன்று மாதத்திற்கு முன் அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த வயதான மூதாட்டி இறந்து விட்டார். அவரது உடலை சுடுகாட்டில் புதைக்கக் கூடாதென சாதி இந்துக்கள் கட்டுப்பாடு விதித்தனர். இதனை எதிர்த்து அருந்ததியின மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதன் விளைவாக, கொண்டப்ப நாயக்கன்பட்டியில் உள்ள சுடுகாட்டில் ஓரிடம் ஒதுக்கப்பட்டது. இப்படி மாண்டு போனவர்களைப் புதைப்பதற்குப் போராடி மயானம் பெற்ற அருந்ததியர்கள் மீது, "சமூகக் கட்டுப்பாடு" விதிக்கப்பட்டது. அப்பகுதி ஆதிக்க சாதியினர் காட்டில் வேலை செய்யத் தடை, குடிநீர் பிடிக்கத் தடை என கூறி தங்களின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சட்ட விரோதமாக நடந்து கொண்டுள்ளனர். அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த ஆண்கள், சேலம் நகரில் கட்டிட வேலை செய்து வந்தனர்.

17.12.2001 அன்றோ அல்லது அதற்கு முன்போ தலித் மக்கள் குடிநீருக்காக பயன்படுத்தும் 'போர்வெல்' உள்ளே "டெமக்ரான்" என்ற கொடிய விஷத்தை கலந்து உள்ளதாகத் தெரிகின்றது. அப்பகுதியில் உள்ள அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த சிறுமி தனது வீட்டிற்கு தண்ணீர் பிடிப்பதற்காக, போர்வெல்லை இயக்கியபோது, வெள்ளை நிறத்தில் நுரையுடன் நீர் வந்ததைக் கண்டு பயந்துபோய் தனது பெற்றோரிடத்தில் காட்டியதால், அப்பகுதி அருந்ததியர் மக்கள் உயிர் பிழைத்தனர்.



இக்கொடிய சம்பவத்தைப் பற்றி பத்திரிகை மூலம் செய்தியறிந்த அதிகாரவர்க்கமும், காக்கிச் சட்டைகளும் அப்பகுதியைப் பார்வையிட்டு நடந்த கொடூர சம்பவத்தை மறைக்க முடியுமா? என்ற நோக்கில் செயல்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்மிடம் தெரிவித்தனர். கன்னங்குறிச்சி காவல் நிலையத்தினரோ "இது வெறும் ஆயில்தான், பாலிடால் அல்ல" என ஆய்வறிக்கை சமர்ப்பித்து ஆதிக்க சாதியினரைக் காப்பாற்ற, தனது ஏவல் வேலையை கன கச்சிதமாக செய்ததோடு, பிடித்து வைத்த விஷம் கலந்த குடிநீரை கீழே தள்ளி சாட்சியம் இல்லாத வகையில் நடந்து கொண்டது.

20.12.2001 அன்று காலை வெளிவந்த செய்தித்தாளில் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் போர்வெல் நீரைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்ட போதிலும், காவல் துறையோ நீரை குடிக்கலாம் என வற்புறுத்துவது ஏன்? என்பது விளங்கவில்லை. மேலும், போர்வெல்லில் சீல் வைக்கப்பட்டுள்ளது என்பது நேரில் பார்த்தவர்களுக்கே தெரியும்.

இத்தனைக் கொடுமைகள் நடந்த போதும், மாவட்ட நிர்வாகம், விஷம் ஊற்றியவர்களைக் கண்டுபிடிப்பதற்கான அறிகுறியே தெரியாத நிலையில் வாழும் அருந்ததியர் சமூக மக்கள், இன்றைக்கு தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களுக்கு நியாயம் வேண்டி போராட முனைந்துள்ளனர். இப்போராட்டத்தை மழுங்கடிக்கும் முயற்சியோடு, அப்பகுதியின் மக்கள் பிரதிநிதிகள் என கூறும் ஊராட்சி மன்றத் தலைவரோ, ஊராட்சி மன்ற உறுப்பினரோ, மாவட்ட கவுன்சிலரோ தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரோ - எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல், ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாக நிற்பதுதான் வேதனைக்குரிய செய்தி. ●

**ஆர். சக்திவேல்**
மாநில அமைப்புச் செயலாளர்
இந்திய குடியரசுக் கட்சி



படிப்பகம்

www.padippakam.com

# கேடு கெட்ட தேசங்களின் நியாயமற்ற போர்

■ மாயா

ஏரியல் ஷெரான்



ஜார்ஜ் புஷ்





வாஜ்பேயி

சென்ற நூற்றாண்டில் மக்கள் ஒரு தேசமாக உருப்பெற்று மேம்பாடு காண்பதில் ஆர்வம் காட்டினர். ஆனால், இவ்வாறு உருவான தேசங்களில் - பழைய ஆதிக்க சக்திகளே மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்வதை காண நேரிடுகிறது. தேசியத்தின் மீதான நம்பிக்கை தளர்ந்து வருகிறது. குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் அதிகமாய் - ஒடுக்கும் எந்திரமாய் தேசியம் உருவாகியிருக்கிறது.

சமத்துவத்தையும் சோசலிசத்தையும் முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட இந்தியா இன்று, பார்ப்பன-பனியா ஆதிக்க சக்திகளினால் முதலாளித்துவ இந்து தேசியமாக உருமாறி விட்டது. இத்தகைய நச்சு தேசியங்கள் தங்கள் அதிகாரத்தை - உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலப்படுத்திக் கொள்வதற்காக தொடங்கியிருக்கும் யுத்தமே 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்'.

'ஒசாமா பின்லேடன் மற்றும் தலிபான்களுக்கு எதிராகப் போர் தொடுக்கிறோம்' என்ற பெயரில், ஆப்கானின் அப்பாவி மக்கள் மீது தான் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் - 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரை' தொடங்கினார். அவரது நடவடிக்கைகளை நகல் எடுத்தாற் போல தற்பொழுது, இஸ்ரேலும் இந்தியாவும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை பிரகடனம் செய்துள்ளன.

டிசம்பர் ஒன்று மற்றும் இரண்டாம் தேதிகளில் இஸ்ரேலில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 26 பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தத் தவறியதற்காக பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரான் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரை' தொடங்கியிருக்கிறார்.

இஸ்ரேலின் எப்.16 போர் விமானங்களும், ராணுவ எலிகாப்டர்களும் பாலஸ்தீன மக்கள் மீது குண்டு மழை பொழிந்து வருகின்றன. பாலஸ்தீன அதிபர் யாசர் அராபத்தின் காசா தலைமையகம் கூட இத்தாக்குதலிலிருந்து தப்பவில்லை.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரான், பாலஸ்தீன அரசு முஸ்லிம் தீவிரவாதிகளைக் கைது செய்து, இஸ்ரேலில் அமைதி நிலவினால் மட்டுமே - அமைதிக்கான பேச்சு வார்த்தை தொடங்குமென அறிவித்து விட்டார்.

காசாவில் 13 லட்சம் முஸ்லிம் மக்கள் வேலி சுற்றப்பட்ட காலனிகளில் யூதர்களால் குடிவைக்கப்பட்டிருக்கிறார்கள். பாலஸ்தீனம் முழுவதும் உள்ள மக்கள் மற்றும் அண்டை நாடுகளில் அகதிகளாய் தஞ்சம் புகுந்துள்ள முஸ்லிம் மக்கள், சொந்த நிலத்தை இழந்து யூத இஸ்ரேல் ராணுவ வன்முறைகளை சந்தித்து வருகிறார்கள்.

பெரும்பாலான பாலஸ்தீன இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். இச்சூழலில், முஸ்லிம் தீவிரவாதிகள் உருவாகுவதை யாசர் அராபத் மட்டுமல்ல; வேறு எவராலும் கட்டுப்படுத்த முடியாது. இதனை ஏரியல் ஷெரான் நன்கு அறிவார். எண்பதுகளில் லெபனானில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களைக் கொன்ற இஸ்ரேல் படைக்கு தளபதியாக இருந்தவர் தான் இந்த ஏரியல் ஷெரான். இன்று இவர், தீவிரவாதத்தினைக் காரணம் காட்டி மேலும் பல முஸ்லிம் மக்களைக் கொன்று வருகிறார். 'ஜியோனிசம்'



படிப்பகம்

என்ற பெயரால் கற்பிக்கப்பட்ட யூத தேசியத்தின் காரணமாய், இஸ்ரேல் மக்கள் ஏரியல் ஷெரானை ஆதரிக் கிறார்கள்.

36 லட்சம் ஆப்கான் மக்களை அகதிகளாக்கிய அமெரிக்க வல்லரசு தேசத்திற்கும், இஸ்ரேல் ஜியோனிச தேசியத்திற்கும் சற்றும் சளைத்ததல்ல 'இந்து தேசியம்'.

13 டிசம்பரன்று நடந்த நாடாளு மன்றத் தாக்குதலுக்குப் பிறகு, இந்திய பிரதமர் வாஜ்பாய், பயங்கரவாதத் திற்கு எதிரான போரை தொடங்கியுள் ளார். தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த தவறியதற்காக, பாகிஸ்தான் மீது போர் உரசல் தொடங்கி விட்டது. (இந்து தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த, யார் மீது போர் தொடுப்பது?)

நாடெங்கிலும் உள்ள முஸ்லிம் மக்களை இந்து தேசியம் அச்சுறுத்தி வருகிறது. தலித் மக்களை காலடியில் மிதித்து இருந்ததைப் போலவே, முஸ் லிம் மக்களையும் ஒடுக்க வேண்டும் என சங் பரிவார் மற்றும் அதன் கிளை அமைப்புகளான பா.ஜ.க. போன் றவை திட்டம் தீட்டுகின்றன.

முஸ்லிம் தீவிரவாதிகளைக் கார ணம் காட்டி, பயங்கரவாதத்திற்கு எதி ரான யுத்தம் தொடங்கப்பட்டிருக்கி றது. முஸ்லிம் தீவிரவாதிகளை ஒழித்து விட்டால், நாட்டில் அமைதி நிலவி விடுமா? சாதி வன்முறைகள் குறைந்து விடுமா? ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்குமா? மூன்று வேளை சாப்பாடு கிடைப்பதற்கான பொருளாதார மேம்பாடு நிலவுமா? எதுவும் இல்லை. பயங்கரவாதத்திற்கு எதிரான போரினால் ஆளும் வர்க்கம் தன் அதிகாரத்தை மேலும் இறுக்கிக் கொள்ளும்.



**அரச பயங்கரவாதம் இருக்கும் வரை அரசிற்கு எதிரான தீவிரவாதம் தணியாது.**

இந்து தேசியம் உருவாக, பார்ப் பன-பனியா சக்திகள் முழுமையாய் அதிகாரத்தைப் பெற, இன்றைய நாடா ளுமன்ற ஆளுங்கட்சி என்ற தகுதி மட்டுமே போதாது. அதற்கு மென் மேலும் அதிகார குவிப்பு தேவைப் படுகிறது. பயங்கரவாதத்தினைக் கார ணம் காட்டி - பொடோ வரும், போர் வரும், அணுகுண்டு வெடிக்கப்படும். இதற்குப் பின்னணியில் இருப்ப தென்னவோ அதிகார குவிப்பிற்கான வெறிதான்.

தீவிரவாதிகள் மற்றும் பயங்கர வாதிகளால் விளையும் தீமைகளை விட, அரச பயங்கரவாதத்தினால் விளையும் தீமைகள் பல மடங்கு கொடூரமானதாக இருக்கின்றன.

தீவிரவாதிகள் மற்றும் பயங்கர வாதிகள் விளைவிக்கும் சேதங்களைப் பற்றி இந்த அரசு உண்மையிலேயே கவலைப்பட்டால், அதற்கான மூலகா ரணத்தைக் கண்டுபிடித்து சரிசெய்ய வேண்டும். அரச பயங்கரவாதம் இருக் கும் வரை அரசிற்கு எதிரான தீவிரவா தம் தணியாது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தேவை, மனித நேயமுள்ள தளர்வான அதிகா ரத்தை உள்ளடக்கிய சோசலிச அமைப்பே. வணிகர்களின் நலனையும் ஆதிக்க சக் திகளின் அதிகாரத்தையும் ஆதரிக்கும் முதலாளித்துவ பாசிச தேசியங்கள், கற் பிதமாய் உருவாக்கும் 'தேசப்பற்றை' உதறுவதில் தான் ஒடுக்கப்பட்டவர்க ளின் விடுதலை தொடங்கும். ●

## போரும் மக்களும்

தேர்தல் சமயத்தில் கார்கில் போர் வந்தது. அடுத்து உத்திரப் பிரதேச தேர்தல் சமயத்தில் பாகிஸ்தானுடன் உரசல் தொடங்கியிருக்கிறது. பயங்கரவாதத் திற்கு எதிரான போரைப் பற்றி ஜார்ஜ் பெர்னான்டஸ் மற்றும் அத்வானி வெளி யிடும் தேசப் பற்றுள்ள அறிக்கைகளில் அவர்களைப் பற்றிய பழைய குற்றப்பத்திரி கைகள் நிறமிழந்து போயின. முஷாரப் தனது தேசப்பற்றை வெளிப்படுத்துவதற் கும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

எல்லைகளிலிருந்து மக்கள் அகதிக ளாய் குடிபெயரத் தொடங்கி விட்டனர். பயங்கரவாதிகளென கொல்லப்படுபவர் களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. யாரை வேண்டுமானாலும் ராணுவம் கொல்லலாம். அடிப்படை வசதி, மின் சாரம், தொலைபேசி எதுவும் இல்லாத எல் லையோர கிராமங்களில் ராணுவத் தளவா டங்கள் நிரம்பி வழிகின்றன. பள்ளிக்கூட மற்ற தெருக்களில் துப்பாக்கிகள் வலம் வருகின்றன. நகரங்களின் மேல் அணு குண்டுகள் தொங்கிக் கொண்டிருக் கின்றன.

மக்களுக்கு உணவு வேண்டும், உறை விடம் வேண்டும் என்பதைப் பற்றியெல் லாம் யாருக்கும் அக்கறையில்லை. வரிப் பணத்தில் அதிக பங்கு ராணுவத்திற்கு செல விடப்படுகிறது. அந்த அரிப்பினால் உண் டாகிறது போர் மேகம். மக்களுக்கு அடுத்த வேளை சோறு பற்றிய கவலையோடு உயிர் பற்றிய பயமும் சேர்ந்து கொண்டது தான் மிச்சம். ■



www.padippakam.com
படிப்பகம்

# வெளிவந்து விட்டது!

**இன்றைய நம் காலத்தின் சமூக அசைவுக்கான விமர்சன ஆய்விதழ்**

# அசை

- மறுபடியும் மார்க்சியம்
- உலக அரசாட்சியில் புனித ஆவிகளும் பயங்கரவாத ஜீன்களும் (இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த விசாரணைக் குறிப்புகள்)
- உலகமயமாக்கலும் மனித சுதந்திரமும்
- மார்க்சியம் - தேசியம் (உரையாடல்)
- ஸ்டாலினும் சினிமாவும்
- மனு- அதி மனிதன் - நீட்ஷே
- புரட்சிகர மாற்றின் தேவை
- பெண்ணியம் (உரையாடல்)
- இலங்கையின் பூர்வீகக் குடிகள்
- நீட்ஷேயின் மூலங்கள்
- மார்க்ஸ் எனும் மானிடன்
- ஆண் சமப்பால் உறவு இயக்கத்தின் வரலாறு
- ஆபாசக் கலையைத் தேடும் அகோரப்பசி

தமிழ் நாட்டில் சிற்றிதழ் விற்பனை முகவர்களிடமும் இலங்கையில் 'மூன்றாவது மனிதன் பதிப்பகம்' - கொழும்பு, பிரான்சில் 'பாரிஸ் அறிவாலயம்' ஆகிய இடங்களில் கிடைக்கும்.

தொடர்புகளுக்கு :

**ASSAIE**
**45 Rue Davy**
**75017 Paris**
**FRANCE**

மின்னஞ்சல் : **assaie@hotmail.com**

தொலைபேசி / தொலைநகல் : 00 33 1 42 63 31 76

(ஷ-ம்)

www.padippakam.com



# சாதி இந்துக்களிடையே பிரச்சாரம் தேவை

■ சங்கமித்திரை

டாக்டர் அம்பேத்கர் தமிழ் நூல் தொகுதி-10, 'தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது இந்த நாட்டின் சபிக்கப்பட்ட குழந்தைகள்' என்ற தலைப்பில் 14 கட்டுரைகளை உள்ளடக்கியதாகும். தீண்டாமையின் தோற்றம், தீண்டத்தகாதோரின் எண்ணிக்கை; அடிமைகளும், தீண்டத்தகாதவர்களும்; மனிதர்களிடமிருந்து விலக்கப்பட்டவர்கள் ஆகிய மிக முக்கிய கட்டுரைகளை இந்தத் தொதியில் காணலாம்.

தீண்டாமைக்கு எதிராக ஒரு அமைப்பு தோன்றினால், அது தன்னுடைய பணியை சேரி மக்களைத் திருத்துவது என்பதாக எடுத்துக் கொள்கிறது. ஏற்கனவே துன்பத்திலும், துயரிலும் உள்ள மக்கள் திருந்துவதற்கு என்ன இருக்கிறது என்ற அடிப்படை சிந்தனை கூட இல்லாமல் சாதி இந்துக்கள் வாழ்கின்றனர். தீண்டாமை ஒழிய, சாதி அமைப்பையே ஒழித்தாக வேண்டும் என்பதைக்கூட இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சாதி இந்துக்கள் தங்களைத் திருத்திக் கொள்ள இந்நூல் தொகுதி உதவும்.

> "தேவையானது மற்றும் தேவையற்றது என்பதற்கான வித்தியாசம் போல் அல்ல - தீண்டத்தகுந்தவர்களுக்கும், தீண்டத்தகாதவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம். தேவையற்றதை மக்கள் இழிவு செய்வதில்லை; தேடிச் சென்று அவமானப் படுத்துவதில்லை. மாறாக, தீண்டத்தகாதவர்களை வேண்டுமென்றே மக்கள் பழிக்கின்றனர். வலிய சென்று அவர்கள் மீது கொடுமையை ஏவுகின்றனர்."

தீண்டாமை நிலைத்து நிற்பதற்கு சாதி இந்துக்கள் தான் காரணம். இவர்கள்தான் இன்றுவரை தீண்டாமையை இறுகப் பற்றிக் கொண்டுள்ளனர். எனவே, மாற்றம் என்பது சாதி இந்துக்களிடம்தான் தேவையாக இருக்கிறது என்ற உண்மையை, தெளிவான ஆதாரங்களுடன் அம்பேத்கர் இந்தக் கட்டுரைத் தொகுப்புகளில் நிறுவியுள்ளார்.

தாழ்த்தப்பட்டவர்கள் யார்? அவர்களின் வரலாறு, வாழ்வியல் முறை ஆகியவை பின் பகுதி கட்டுரைகளில் விவாதிக்கப் பட்டுள்ளன. பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களிடையே எவ்வாறெல்லாம் பார்ப்பனர்கள் திட்டமிட்டுப் பிரச்சினைகளை உருவாக்கினர்; அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டனர் என்பதைத் தெளிவாக்கியுள்ளார் அம்பேத்கர்.



> "சாதி அமைப்பு முறை, பழங்கால வர்ணாசிரம முறையின் ஒரு பரிணாம வளர்ச்சியாகும். வர்ணாசிரம முறையை முழுமையாக ஆராய்ந்தாலும் விளங்கிக் கொள்ள முடியாத வகையில் - இன்றைய சாதி அமைப்பு முறை உள்ளது. எனவே, சாதி அமைப்பு என்பது தனித்து ஆராயப்பட வேண்டிய ஒரு பகுதியாகும்."

தாழ்த்தப்பட்ட மக்கள் சட்டை அணிவது, ஒரு மாபெரும் குற்றம் என சாதி இந்துக்கள் முன்பு தண்டனை வழங்கினர். தமிழகத்தில் உள்ள மேலூரில் பொது வழியில் தாழ்த்தப்பட்டவர்களின் பிணங்கள் செல்வதுகூட தடை செய்யப்பட்டிருந்தது. இத்தகு சாதிக் கொடுமைக்கு அன்றைய காங்கிரஸ் மிகுந்த பக்க பலமாய் இருந்தது. இந்த அவலத்திற்கு, தும்பம்பட்டியில் வசித்து வந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட விதி விலக்காக அமையவில்லை.

பி. கக்கன் எம்.பி. என்பவர், மக்கள் வழங்கும் பொது அங்காடிக்குக்கூட செல்ல முடியவில்லை என்பதையும் அவ்வாறு அவர் முயற்சி செய்ததன் விளைவாக, அவர் குடும்பம் மனிதத் தன்மையற்று எவ்வாறெல்லாம் தாக்கப்பட்டது என்பதையும் அம்பேத்கர் இந்தத் தொகுதியில் பதிவு செய்துள்ளார். இந்நூல் தொகுதி, புள்ளிவிவரங்களின் தொகுப்பாகவும், தமிழ்ப் பத்திரிகைகள் கூட பதிவு செய்யாத கொடுமைகளை அம்பேத்கர் பதிவு செய்துள்ளதால், இது ஒரு வரலாற்று ஆவணமாகக் கொள்ள வேண்டிய ஓர் அரிய தொகுப்பாகும். •



படிப்பகம்

# சாதியம்

## சமூகச் சிக்கல்களின் மய்யம்

■ நீதியரசர் கே. ராமசாமி

இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் இந்திய ஜனநாயகத்தின் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் கூர்மையான சிக்கல் சாதியமே. அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் அடித்தளமாக அமைந்த சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் இந்திய மக்களின் ஒற்றுமை ஆகியவற்றிற்கும், சாதியின் காரணமாகக் காட்டப்படும் வேறுபாட்டிற்கும் இடையிலான மோதல் தொடர்ந்து தீவிரமடைந்து வருகிறது.

இந்தியா விடுதலை பெற்று 54 ஆண்டுகளும், அரசமைப்புச் சட்டம் செயல்படத் துவங்கி 52 ஆண்டுகளும் கடந்த பின்னும் - இம்மோதல் இன்னும் தொடர்கிறது. சாதியமும், சாதி அடுக்குமுறையின் கொடிய மேலாண்மையும் மிக மோசமான முறையில் தலைதூக்கி வருகிறது. இத்தகைய சிக்கலை முகங்கொள்ள இயலாமல் தோற்ற சமூகம், ஒருங்கிணைவதற்கு மாறாக, துண்டு துண்டாக மென்மேலும் சிதறி வருகிறது. எனவே, சிக்கலின் மய்யம் என்பது இச்சாதியத்தைச் சமாளிப்பதுதான்.

இந்தியாவின் சமூகக் கட்டமைப்பு, தெளிவான அடுக்குமுறை சாதி அமைப்பை மய்யமாகக் கொண்டது. இது, மேலே செல்லச் செல்ல மதிப்பையும், கீழே இறங்க இறங்க மக்களிடையே பாகுபாட்டையும், அவமதிப்பையும் உண்டாக்குகிறது. தீண்டாமை நீடித்து நிற்க அதற்கு சமூக மற்றும் மத அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அகவுரவம், மனிதாபிமானமின்மை, அவமதிப்பு ஆகியன பல நூற்றாண்டுகளாக தலித்துகள் மீது திணிக்கப்பட்டு, அவர்கள் சாதிக்கு வெளியே தள்ளப்பட்டுள்ளனர்.

பன்னாட்டு மனித உரிமைப் பிரிவுகளும், இந்திய அரசமைப்புச் சட்டமும் குறிப்பாக 14,15 மற்றும் 16 பிரிவுகள், சாதியின் அடிப்படையில் வேறுபாடு காட்டுவதைத் தடை செய்கின்றன. 17 ஆவது பிரிவு, தீண்டாமையை ஒழித்திருக்கிறது. 21ஆவது பிரிவு, வாழ்வுரிமையைப் பாதுகாக்கிறது.




நீதியரசர் கே. ராமசாமி, பொ. ரத்தினம், சிவகாமி

தலித்துகளுக்கு கவுரவமும் மாண்பும் சட்டத்தில் சம அளவு வழங்கப்பட்டுள்ளது. கல்வி, அறிவு மேன்மைக்கான அடிப்படை மனித உரிமை, பண்பாட்டு முயற்சிகள், பொருளாதார மேலாண்மை, சமூகநீதி, சமத்துவம், மாண்பு மற்றும் சமவாய்ப்பு ஆகியன தீண்டாமை பின்பற்றப்படுவதால் - தலித்துகளுக்கு மறுக்கப்படுகின்றன.

விடுதலைக்குப் பிந்தைய காலகட்டத்தில், தலித்துகளிடையே பரவிய கல்வியின் காரணமாக, அவர்கள் தங்களது அடிப்படை சுதந்திரத்தையும், மனித உரிமைகளையும் நடைமுறைப்படுத்த முனைகின்றனர். குறிப்பாக, கவுரவமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதற்கான உரிமையை அவர்கள் நடைமுறைப்படுத்த விரும்புகின்றனர்.

சாதி அமைப்பு முறை இதுவரை முன்னேறிய சமூகப் பகுதியின் தனிச் சலுகையாக இருந்தது. இன்றைய தலித்துகளின் எழுச்சியால், ஆதிக்க சாதியினர், தங்களது மேலாண்மைக்கு ஆபத்து வந்துவிட்டதாக உணர்ந்தனர். இதன் விளைவாக, தங்களின் மேலான நிலையைப் பாதுகாத்துக் கொள்ளவும், மனித மாண்பினையும் சமத்துவத்தையும் அடைவதற்காக தலித்துகள் எடுக்கும் முயற்சிகளை அடக்கி ஒடுக்கவும், தலித்துகள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர்.

காலஞ் செல்லச் செல்ல, தலித்துகளின் மீது நடைபெறும் கொடுந்தாக்குதல்களின் அளவு தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பிரிவின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையை எந்த வடிவத்தில் பயன்படுத்தினாலும் அது குற்றம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தலித்துகள் மீதான வன்கொடுமைத் தாக்குதலை குற்றவியல் நீதி எந்திரமும் - தடுத்து நிறுத்துவதில் நடைமுறையில் தோல்வி கண்டுவிட்டது. அதன் விளைவாகவே, தலித்துகள்

www.padippakam.com

| ஆண்டு | குற்றங்களின் மொத்த எண்ணிக்கை | கொலை | கற்பழிப்பு | கொள்ளை | சிவில் உரிமைகள் பாதுகாப்பு மீறல் | பிரிவு 3 முதல் 6 வரை மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1995 | 32996 | 571 | 872 | 500 | 1528 | 3471 |
| 1996 | 31440 | 543 | 949 | 464 | 1417 | 3373 |
| 1997 | 27944 | 513 | 1037 | 389 | 1216 | 3155 |
| 1998 | 25638 | 516 | 923 | 346 | 724 | 2509 |
| 1999 | 21469 | 445 | 879 | 303 | 575 | 2202 |

தாழ்த்தப்பட்டோர் மீதான வன்முறை

இதுபற்றி அவநம்பிக்கையும், தாக்கு பவர்கள் இது பற்றி ஏளனமும் கொள்கின்றனர். அதுமட்டுமன்றி, கூண்டோடு தலித்துகள் கொல்லப்படுவதும் அடிக்கடி நிகழ்கிறது. (அட்டவணை காண்க)

மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், பீகார், கர்நாடகா, தமிழ் நாடு, கேரளா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஒவ்வொரு ஆண்டும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் மிக அதிக அளவில் நடைபெறுகின்றன.

அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது பிரிவு, தலித்துகளுக்கு அடிப்படை உரிமைகளுக்கு உறுதி அளித்திருந்தாலும் மனித மாண்பு மற்றும் சமத்துவத்திற்கான உரிமை வழங்கப்பட்டிருப்பினும், சட்டம் அவர்களது உரிமையைப் பாதுகாக்கத் தவறிவிட்டது.

முன்னர் குறிப்பிட்டது போல், அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை சுதந்திரமும், மனித உரிமைகளும் அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாகவே வழங்கப்பட்டுள்ளன. மற்றவர்களைக் காட்டிலும் கூடுதல் உரிமைகள் யாருக்கும் வழங்கப்படவில்லை. எனினும், சாதி, ஏழ்மை, கல்லாமை ஆகியவற்றின் காரணமாக தலித்துகள் ஒவ்வொரு நாளும் இழிவுபடுத்தப்படுகின்றனர்.

மனித சமூகத்திற்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையைச் சட்டம் வழங்கினாலும், சமூக மனக்கட்டமைப்பு மாற்றம் அடையவே இல்லை. ஒரு குறிப்பிட்ட சமூகத்திலோ, சாதியிலோ, மதத்திலோ, பகுதியிலோதான் பிறக்க வேண்டும் என யாரும் பேரம் பேசுவதில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் - ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிகழும் உயிரியல் செயலின் விளைவாக பிறப்பு நேரிடுகிறது.

பார்ப்பனன் தலையில் பிறந்தான்; சத்திரியன் தோளில் பிறந்தான்; வைசியன் வயிற்றில் பிறந்தான்; சூத்திரன் கால்களில் பிறந்தான் என்ற பாரம்பரிய நம்பிக்கை, கடும் சாதி வெறியர்களால் கூட இன்று ஏற்கப்படுவதில்லை. சட்டத்தால் ஆளப்படும் ஜனநாயகத்தில், ஒவ்வொருவருக்கும் அரசமைப்புச் சட்டம் சார்ந்த அரசியல் உரிமைகளைப் பயன்படுத்த உரிமையுண்டு. தேர்தலில் போட்டியிடவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படவுமான உரிமைகளும் இதில் அடக்கம்.

ஆனால், இப்பொழுது நால்வருண அடிப்படையில் சாதியத்தை நிலை நிறுத்தும் போக்கு மறைந்து, தலித்துகள் மீது தீண்டாமையைப் பயன்படுத்தும் போக்கு, பாரம்பரியமான பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகியோரைக் காட்டிலும், சமூகத்தில் புதிதாக உருவாகியுள்ள பிற்படுத்தப்பட்ட - நடுத்தர வர்க்கத்தினரிடையே அதிகம் காணப்படுகிறது.

முன்பே குறிப்பிட்டது போல், சாதி அமைப்பு பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்து வந்தாலும், ஜனநாயக அரசியலில் சாதியம் பொருத்தமுடையதாக இல்லை. சம உரிமை, சமபாதுகாப்பு, பேதத்திற்குள்ளாகாமலிருப்பது, மனித மாண்பிலும் வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

ஆகவே, இத்தகைய மனித உரிமைக் கருத்துகளைப் பரப்புரை செய்ய, அரசமைப்புச் சட்டத்தின் உத்தரவாதம், மனித உரிமைக் கல்வி, மனித உரிமைக் கலாச்சாரம், மனித உரிமையுணர்வு ஆகியன தேவைப்படுகின்றன. மனித உரிமைகள் பற்றி மாணவர்களுக்குக் கற்பிப்பது, வயது வந்தோர்க்கு உரிய கல்வி மூலம் கற்பிப்பது ஆகியன மிகவும் இன்றியமையாதவை. அதிலும் குறிப்பாக, காவல் துறைக்கு இக்கல்வி மிகவும் அவசியம். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டத்திற்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களேயன்றி, அவர்கள் சட்டத்திற்கு மேலானவர்களல்ல.

மக்கள் சட்டத்தைக் கடைப்பிடிக்கிறார்களா, பொது அமைப்புகள் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் மெய்யாகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்களா என்பதைக் காண்காணிக்கத்தான் காவல் துறை இருக்கிறது. சட்டத்தை அறியத் தருதல், ஊக்குவித்தல் மற்

| ஆண்டு | குற்றங்களின் மொத்த எண்ணிக்கை | கொலை | கற்பழிப்பு | கொள்ளை | சிவில் உரிமைகள் பாதுகாப்பு மீறல் | பிரிவு 3 முதல் 6 வரை மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1995 | 5489 | 75 | 369 | 40 | 71 | 555 |
| 1996 | 4973 | 94 | 314 | 51 | 72 | 531 |
| 1997 | 4644 | 95 | 315 | 29 | 88 | 527 |
| 1998 | 4276 | 66 | 331 | 38 | 50 | 485 |
| 1999 | 3841 | 71 | 336 | 43 | 35 | 485 |

பழங்குடியினர் மீதான வன்முறை


படிப்பகம்

www.padippakam.com

றும் மெய்யாக அதை நடைமுறைப் படுத்தல் ஆகியன அவர்களின் கடமை. மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைக் கலாச்சாரம் பற்றி அவ்வப் பொழுது புத்தறிவுப் பயிற்சி காவல் துறையினருக்குத் தந்தால், அது அவர்களிடையே விழிப்புணர்வை ஊட்டும். அவர்களது மனக்கட்டமைப்பைச் சீராக்கி, சட்டத்திற்குப் பொறுப்பு மிக்கவர்களாக ஆக்கும்.

மக்கள் சமூகத்தில் மனித உரிமைப் பண்பாட்டையும், அதன் சாரத்தையும் பரவச் செய்ய வேண்டியதும் அரசின் கடமையாகும். மக்கள் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல், சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினரிடையேயும் ஒற்றுமை, சகோதரத்துவம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்டு வரமுடியாது. எனவே, மனித உரிமைக் கல்வி, மனித உரிமைச் சாரத்தைப் பின்பற்றி வளர்த்தல், மனிதாபிமானத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சாதியத்தின் வலி வெளியேற்றப்பட வேண்டும்.

கல்வி கற்காதவர்களின் மனோபாவத்தை மாற்றவும், தலித்துகள் - பழங்குடியினர் - ஏழை எளிய மக்கள் போன்ற சமூகத்தின் பலவீனமான பிரிவினரின் மனித உரிமைகள் பற்றிக் கவலைப்படாமலோ, அது குறித்துப் பொறுப்பு இல்லாமலோ இருக்கும் படித்தவர்களின் கண்ணோட்டத்தை நீக்கவும், நாமனைவரும் ஒன்றிணைந்து இடையறாது பாடுபட வேண்டும்.

மனித உரிமைப் பிரச்சாரத்தை சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்துச் செல்லுதல், அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களின் ஆதரவான பங்களிப்பைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் தலித்துகள் மற்றும் ஏழை மக்கள் மீது ஏவப்படும் வன்கொடுமைகளைத் தடுக்க முடியும்; ஒற்றுமை உணர்வைப் பரவலாக்க முடியும்.

இதற்கோர் அருமையான எடுத்துக் காட்டாக, உயர்நீதிமன்ற வழக்குரைஞரான திரு. பொ.ரத்தினமும் அவரது நண்பர்களும் தங்கள் வழக்குரைஞர்



**“நான் கேட்டுக் கொள்வதெல்லாம் - ஒற்றுமையாக இருங்கள்; சாதியத்தை அழிக்கும் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள்; தலித்துகள் மீது ஏவப்படும் வன்கொடுமை மனப்பான்மையைப் போக்கப் பாடுபடுங்கள் என்பதுதான். இதன் மூலமே அமைதியும் சமூக சமநிலையும் நடைமுறைக்கு வரும்.”**

சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்ட விகிதம்

| ஆண்டு | குற்ற விகிதம் |
|---|---|
| 1991 | 26.2 |
| 1992 | 29.4 |
| 1993 | 33.0 |
| 1994 | 21.4 |
| 1995 | 35.5 |
| 1996 | 23.9 |
| 1997 | 27.2 |
| 1998 | 22.6 |

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் பதிவான வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்ட விகிதம்

| ஆண்டு | குற்ற விகிதம் |
|---|---|
| 1995 | 39.2 |
| 1996 | 38.1 |
| 1997 | 31.4 |
| 1998 | 32.2 |

(ஆதாரம் : இந்தியாவில் குற்றங்கள் பற்றிய புள்ளி விவரம்)

தொழிலுக்கேற்பட்ட பாதிப்பையும் பொருட்படுத்தாமல், தலித் ஊராட்சித் தலைவரான மாவீரன் மேலவளவு முருகேசனின் படுகொலைக்குக் காரணமானவர்களை எதிர்த்துப் போராடி, பிரச்சாரம் செய்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கி தந்துள்ளனர். நான் அவ்வழக்கு குறித்து மேலும் பேச விரும்பவில்லை. ஏனெனில், இது உயர்நீதி மன்ற மேல் முறையீட்டில் நிலுவையில் உள்ளது.

இப்படிப்பட்ட வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த, விழிப்புணர்வு மிக்கவர்களும் பொது நலம் நாடுபவர்களும், மனித உரிமைப் போராளிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டியது அவசியம் என்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். வருமுன் காப்பதே நல்லது.

மனித உரிமைக் கல்வி, மனித உரிமைப் பண்பாடு ஆகியன துவக்கத்திலேயே மக்களிடையே பரவ வேண்டும். இதன் மூலம் சமூகத்தில் ஒத்திசைவும் அமைதியும் நிலவும். எனவே, மனசாட்சியுடைய, பொதுநலம் சார்ந்த அனைத்து மக்களையும், மனித உரிமைப் போராளிகளையும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் - ஒற்றுமையாக இருங்கள்; சாதியத்தை அழிக்கும் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள்; தலித்துகள் மீது ஏவப்படும் வன்கொடுமை மனப்பான்மையைப் போக்கப் பாடுபடுங்கள் என்பதுதான். இதன் மூலமே அமைதியும் சமூக சமநிலையும் நடைமுறைக்கு வரும். ●

---

மேலவளவு வழக்கில் மிகுந்த ஆபத்திற்கிடையே அஞ்சாமல் தலித் ஊராட்சித் தலைவர் முருகேசனைக் கொலை செய்தவர்களுக்குத் தண்டனை வாங்கித் தந்த சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் ரத்தினம் அவர்களைப் பாராட்டுவதற்காகவும், பி.யு.சி.எல். வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்காகவும், அண்மையில் ஈரோட்டில் நடைபெற்ற விழாவில் உச்சநீதி மன்ற முன்னாள் நீதியரசர் கே. ராமசாமி அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

தமிழில் : கண. குறிஞ்சி



படிப்பகம்

www.padippakam.com

# தலித் முரசு

## இலக்கியச் சிறப்பிதழ் - 2002

உலகளாவிய இலக்கியச் செயல்பாட்டில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது, கறுப்பின மக்களின் உயிரோட்டமுள்ள இலக்கியம். இந்தியாவிலும் தலித் இலக்கியம் அதையே செய்தது. அண்ணல் அம்பேத்கரின் வாழ்வும் பணியும் கொடுத்த உந்து சக்தியால், மகாராட்டிரத்தில் தோன்றிய தலித் இலக்கிய இயக்கம், பிற்காலத்தில் 'தலித் சிறுத்தைகள்' எனும் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவிக்கும் விசையாக அமைந்தது.

புரட்சிகர அரசியல் இயக்கங்களின் செயல்பாடுகளோடு இணைந்த ஓர் அம்சமாக அங்கே தலித் இலக்கியம் இருந்தது. மிக உயரிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றுள்ள மகாராட்டிர தலித் இலக்கியத்தின் தாக்கம் - குஜராத், கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் வலுவானதாக இருந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட வரலாறு உடைய தமிழ் இலக்கியத்தில் தலித் மக்களைப் பற்றிய பதிவுகள் மிகக்குறைவு. இன்று அதை ஈடு செய்யும் வகையில், பல தலித் படைப்பாளிகள் தமது அசலான படைப்புகளை அளித்து வருகிறார்கள். வேதனை மிகுந்த தலித் மக்களின் அப்பட்டமான வாழ்க்கையை - கோபம், கலகம், எள்ளல் ஆகிய தன்மைகளுடன் அப்படைப்புகள் வைத்திருக்கின்றன. அவை, ஜாதிய இந்தியாவின் கோர முகத்தினைக் காட்டும் சமூக ஆவணங்கள்.

**உலகளாவிய இலக்கியச் செயல்பாட்டில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது, கறுப்பின மக்களின் உயிரோட்டமுள்ள இலக்கியம். இந்தியாவில் தலித் இலக்கியமும் அதையே செய்தது.**

இந்த அசலான தலித் தன்மைகளுடன் அமைந்த இலக்கியத் தொகுப்பு ஒன்றைக் கொண்டுவர வேண்டிய தேவை, இன்று உணரக் கூடியதாக இருக்கிறது. சமூக, அரசியல் பணியுடன் கலை இலக்கியங்களை இணைக்கும் நோக்கில் இது அமையும்.

தலித்துகளின் சமூக, அரசியல் தளத்தில் 'தலித் முரசு' தனது பங்களிப்பை அய்ந்து ஆண்டுகளாக செய்து வருகிறது. இவற்றோடு இணைந்த அம்சமாக, தலித் இலக்கியச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட தலித் முரசு விரும்புகிறது.

கவிதைகள், தலித் இலக்கிய, அரசியல் நூல் மதிப்புரைகள், தலித் சிந்தனையாளர்களின் நேர்காணல்கள் என்று ஏற்கனவே இருந்து வரும் அதன் பக்கங்களை விரிவுபடுத்தவும், தலித் இலக்கியம் தமிழில் தன் கலக அலைகளை உண்டாக்கிய பத்து ஆண்டுகளின் இறுதியில் ஒரு மதிப்பீட்டைச் செய்யவும், அடுத்த அதன் நகர்வை அனுமானிக்கவுமாக இவ்வெளியீடு அமையும்.



பிப்ரவரி 2002 'தலித் முரசு', அதிகப் பக்கங்களுடன் தலித் இலக்கியச் சிறப்பிதழாக மிளிரும். இதற்கு உங்களின் படைப்புகளையும், ஆதரவையும் வேண்டுகிறோம். உங்களின் படைப்புகள் 15.1.2002-க்குள் எங்களை வந்து சேர்ந்தால், இதழ் தயாரிப்புக்கு அது பேருதவியாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# அ றி மு க ம்



நூல்:
வடநாட்டுப் பெரியார்
தென்னாட்டு
அம்பேத்கர்

அய்ந்தாண்டுகளின்
தொகுப்பு

தலித் முரசில் கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்த 'அம்பேத்கர் பக்கமும்' - 'பெரியார் பக்கமும்' தொகுக்கப்பட்டு, 'வடநாட்டுப் பெரியார் தென்னாட்டு அம்பேத்கர்' நூல், விரிவான இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இந்நூலை அஞ்சலில் பெற விரும்புவோர், அஞ்சல் செலவுக்கென பத்து ரூபாய் சேர்த்து அனுப்பவும்.

- வெளியீடு : தலித் தகவல் ஒருங்கிணைப்பு, ஈ - 21, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை, கே.கே. நகர் சென்னை - 78 • விலை : 35 • பக்கங்கள் : 120

**தலித்தியமும் உலக முதலாளியமும்**

- ஆசிரியர் : எஸ்.வி. ராஜதுரை
- வெளியீடு : விடியல் பதிப்பகம்
  11, பெரியார் நகர், மசக்காளிப்பாளையம்
  (வடக்கு) கோவை - 641 015
- பக்கங்கள் : 96 • விலை : 30

தலித் முரசு இதழில் டிசம்பர் 99 முதல் டிசம்பர் 2000 வரை வெளிவந்த தொடர் கட்டுரையின் விரிவாக்கமே இச்சிறு நூல். இத்தொடர், சில திருத்தங்களுடன் வெளி வந்துள்ளது.

''பல்வேறு தலித் அமைப்புகளில் உள்ள சிந்தனை வளமிக்க தனி மனிதர்கள், உலக மய மாக்கலும் இந்துத்துவப் பாசிசமும் கை கோர்த்து, இந்தியாவில் மிகப் பயங்கரமான பிற்போக்கு எதிர்ப்புரட்சியை நடத்தி வரு வதை நன்குணர்ந்தவர்களாக இருப்பதால், இந்த எதிர்ப்புரட்சியை சந்திப்பதற்குப் பிற உழைக்கும் மக்களோடு சேர்ந்து போராட, தலித் உழைக்கும் மக்களுக்குச் சரியான வழி காட்டுதலை உருவாக்க முன்வருவார்கள் என்ற நம்பிக்கையே - இந்த நூலை வெளி யிடுவதற்கான ஒரேயொரு நியாயமாக அமைகிறது'' என்கிறார் நூலாசிரியர். •



தலித்தியமும் உலக முதலாளியமும்



உலகத் தமிழர்களுக் கான தமிழ் முகவரிக் களஞ்சியம்



நெருப்பல்ல சூரியன்

**உலகத் தமிழர்களுக்கான தமிழ் முகவரிக் களஞ்சியம்**

- ஆசிரியர் : அ. சரவணகுமார்
- வெளியீடு : ஓவியம் தமிழ் தகவல் மய்யம்
  4/283 - அ, சன் காம்ப்ளக்ஸ்
  தாசில்தார் நகர், மதுரை - 625 020
- பக்கங்கள் : 270 • விலை : 175

உலக நாடுகள் பற்றிய தகவல்கள், வெளி நாட்டுக் கல்வி, வேலைவாய்ப்பு, வேலை யில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக் கும் நிறுவனங்கள், கடனுதவி வழங்கும் நிறுவனங்கள், வெளிநாட்டிலிருந்து வரும் இலவச இதழ்கள், தமிழ்ச் சிற்றிதழ்கள், நுகர் வோருக்குப் பயன்படக்கூடிய முகவரிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த முகவரிகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. பயனுள்ள நூல்.

**நெருப்பல்ல சூரியன்**

- ஆசிரியர் : ரகசியன்
- வெளியீடு : ரா. ஜெஸ்டின் செல்வகுமார்
  சேத்துவண்டை, குடியேற்றம் - 635 803
  வேலூர் மாவட்டம்
- பக்கங்கள் : 72 • விலை : 35

தமிழில் புதிதாக எழுத வரும் இளைஞர்க ளுக்கு இதுவரைக்குமான இலக்கிய பிரதி களில் ஆழ்ந்த பிடிப்பும், தமிழ் இலக்கியம் சந்தித்தும், தாண்டியும் வந்திருக்கிற போக்கு கள் குறித்த விழிப்பும் இருக்கிறதா என்று ஒரு கேள்வியை முன் வைத்தால் - மவுனமும், முனகல்களும் விடையாக வருவதற்கான சாத் தியக் கூறுகள் இருக்கின்றன. இதில் விதி விலக்குகளும் உண்டு.

எளிய பதப்பிரயோகங்கள், மேலோட்ட மான பார்வை, சொல்விளையாட்டு என்று மேடைக்கவிதை பாணியில் சிலரும், சமூக அவலங்கள், காதல், பெண்ணியம் இவை களை முன்னிட்டு ஆக்ரோஷமான குரலில் சிலரும் எழுதி வருகிறார்கள்.

ரகசியனின் கவிதைகள் இவற்றில் பெரும்பாலும் கோபத்தை வெளியிடுவது, காதலை கசிவது என்கின்ற வகையைச் சார்ந் தவை. மொழியை கூர்மையாகவும், சிக்கன மாகவும், எளிமையாகவும் கையாள்வதில் இவருக்கு அக்கறை இருப்பது தெரிகிறது.

சின்னச் சின்ன வெளிப்பாடுகளில் இவரின் பலம் இருப்பதாகப் படுகிறது.

- ஞானப்பறை



படிப்பகம்

www.padippakam.com

# தலித் முரசு சமூக நீதிப் போட்டி - 2

- இந்தப் பகுதியின் விடைத்தாளில் கேள்வி எண்களும் அதற்கான விடைத் தொகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க - படம் : 2)
- விடையைத் தேர்ந்தெடுத்த பிறகு, வினாவிற்குத் தகுந்த விடையை ☒ குறியிட்டு நிரப்பவும்.
- ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடை எழுதியிருந்தால் அது பரிசீலிக்கப்பட மாட்டாது.
- கண்டிப்பாக 'தலித் முரசு' இதழில் வெளியாகும் படிவத்தில்தான் விடையளிக்க வேண்டும். (இப்பக்கத்தை கிழித்து அனுப்பவும்)
- ஒருவர் எத்தனைப் படிவங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- இப்படிவத்தை நகல் எடுத்து விடையளிப்பது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.
- சரியான விடையை எழுதியவருக்கு ரூ.1,000 பரிசுத் தொகை அளிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
- வெற்றி பெறும் வாசகரின் பெயர், அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும்.

போட்டியின்நிபந்தனைகளை நான்முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

கையொப்பம்.................................... கடைசி நாள் : 25.1.2002

முகவரி.......................................................................

...............................................................................

...............................................................................

**விடைத்தாள் - 2**

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |

படம் 2

1. இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற ஒரே பெண்மணி
   அ) அய்டா ஸ்கடர் ஆ) மேரி கியூரி
   இ) வெனிஸ் ஈ) கிளாரிசா

2. இந்தியாவில் முதன் முதலில் 'கிண்டர் கார்டன்' (எல்.கே.ஜி.) கல்வி முறையை அறிமுகப்படுத்தியது யார்?
   அ) சரோஜினி நாயுடு ஆ) முத்துலட்சுமி ரெட்டி
   இ) கிருபாளினி ஈ) இந்திரா காந்தி

3. ........................மதத்தினர் இந்தியாவில் கல்விக்கும் மருத்துவத்திற்கும் செய்த தொண்டினால்தான் - தாழ்த்தப்பட்டவர்கள், மிகச் சிறப்பான வாழ்வைப் பெற்றனர் என அம்பேத்கர் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.
   அ) கிறித்துவம் ஆ) இந்து மதம்
   இ) பவுத்தம் ஈ) இஸ்லாம்

4. இது, உலகின் முதல் பல்கலைக் கழகம்
   அ) தட்சசீலம் ஆ) நாலந்தா
   இ) ஆக்ஸ்போர்டு ஈ) கேம்பிரிட்ஜ்

5. சித்தார்த்தன்................நதிப் பிரச்சினையைத் தீர்க்கவே துறவரம் பூண்டார்.
   அ) சாக்கிய நதி ஆ) ரோகிணி நதி
   இ) கோலிய நதி ஈ) கங்கை நதி

6. புத்தரின் முதன்மைச் சீடர் யார்?
   அ) ராகுலன் ஆ) உபாலி
   இ) ஆனந்தா ஈ) வர்த்தமானர்

7. 'குடியரசு' பத்திரிகையின் முதல் ஆசிரியர் யார்?
   அ) பெரியார் ஆ) எம்.சி. ராஜா
   இ) அயோத்திதாசப் பண்டிதர் ஈ) பகவான் தாஸ்

8. 'திகம்பரர்' - இது,
   அ) சமண மதத்தின் ஒரு பிரிவு
   ஆ) தில்லை நடராஜனின் ஒரு வகை நாட்டியம்
   இ) பவுத்தத் துறவிகள்
   ஈ) சீக்கியர்களின் வேத நூல்

9. மிகவும் குறைந்த அலைநீளம் கொண்ட நிறக்கதிர் எது?
   அ) சிவப்பு அ) பச்சை இ) நீலம் ஈ) கறுப்பு

10. காந்தியடிகள் எந்த சமூகத்தைச் சார்ந்தவர்?
    அ) பார்ப்பனர் என்ற வேதியர் வகுப்பு
    ஆ) பனியா என்ற சேட் வகுப்பு
    இ) சர்மா என்ற சத்திரியர் வகுப்பு
    ஈ) மாங்க் என்ற சூத்திர வகுப்பு

.................................................................

**சென்ற போட்டிக்கான விடைகள் :**

1. 1927 2. டி.டி. கிருஷ்ணமாச்சாரி 3. சிலப்பதிகாரம், மணிமேகலை 4. பாலி 5. சாமுவேல் ஜான்சன் 6. அசோகர் 7. தந்தை பெரியார் 8. சார்லஸ் டார்வின் 9. சரோஜினி நாயுடு 10. கணிதம்

- டிசம்பர் மாத சமூக நீதிப் போட்டியில் எவரும் வெற்றி பெறவில்லை *(ஆ-ர்)*



படிப்பகம்

www.padippakam.com

## KNOWLEDGE IS POWER

# IAS 2002

**Personal Coaching and Specialized Guidance for IAS Preliminaries 2002 begins immediately**

### Subjects Offered

- General studies
- History
- Geography
- Sociology
- Public Administration
- Tamil Literature

**Spot Admission from 1 January 2002**

*Contact*

The Director
**Jeevanjyothi Institute of Administrative Services (JIAS)**
2nd Floor, Catholic Centre,
64, Armenian Street, Chennai - 1
Ph : 536 66 61
email : jias2002@eth.net

படிப்பகம்

www.padippakam.com

## தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவைத் தொடக்க விழா



தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவையின் தொடக்க விழா, மதுராந்தகம் - நடராஜபுரம் கிராமத்தில், 20.12.2001 அன்று நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டப் பேரவையின் செயலாளர் பி. துரை வரவேற்புரையாற்றினார். பேரவைத் தொடக்க விழா கல்வெட்டினை பி.பி. மார்ட்டின் திறந்து வைத்தார். பேரவை குறித்து மாவட்ட பேரவைத் தலைவர் எஸ். தயாளன், மாநில அமைப்புச் செயலாளர் ஜி. கருணாகரன், மாநிலப் பொதுச் செயலாளர் ஏபி. வள்ளிநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

'தலித் முரசு' ஆசிரியரும் தலித் சேனா மாநிலத் தலைவருமான பெ. சந்திரசேகசன் சிறப்புரை ஆற்றினார். பேரவைக் கொடியினை ஏற்றி வைத்து, பேரவையின் மாநிலத் தலைவர் எஸ். நடராஜன் நிறைவுரையாற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் தங்கவேல் நன்றி கூறினார்.

- நம் செய்தியாளர்

## அம்பேத்கர் காலண்டர் - 2002




நடைமுறையிலிருக்கும் தின சரி நாட்காட்டிகள் அனைத்தும், இந்துத்துவக் கருத்தியல்களை வலியுறுத்தி, மக்களை மூட நம்பிக்கையில் மூழ்கடிக்கும் வேலையை திட்டமிட்டு செய்து கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு முற்றிலும் மாற்றாக - 'அம்பேத்கர் காலண்டர்' என்ற பெயரில் தினசரி நாட்காட்டிகள் வெளிவந்திருக்கின்றன.

தலித் மக்களின் விடுதலைக்காகப் போராடி மறைந்த தலித் தலைவர்களின் வரலாற்றுக் குறிப்புகள், புகைப்படங்கள், சாதி ஒழிப்புப் போரில் வீரமரணம் அடைந்த போராளிகளின் நினைவு நாட்கள், தலித் விடுதலையை முன் வைக்கும் புரட்சியாளர் அம்பேத்கர், பெரியார் ஆகியோரது பொன் மொழிகளுடன், நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. விலை : ரூ. 20

தலித் மக்கள் அனைவரின் வீடுகளிலும் அவசியம் இருக்க வேண்டிய இந்நாட்காட்டிகளைப் பெற தொடர்பு கொள்ளவும்:

*முல்லை காலண்டர்ஸ்*
*188, பெரியார் தெரு, தில்லையாடி வள்ளியம்மை நகர்*
*திருமங்கலம், சென்னை - 40*
*தொலைபேசி : 622 15 82*

### புத்தகக் கண்காட்சியில்

## தமிழ் முழக்கம்



2002 சனவரி 5 முதல் 19ஆம் தேதி வரை, சென்னை, காயிதே மில்லத் அரசுக் கல்லூரியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில், தமிழ் முழக்கம் விற்பனை நிலையமும் இடம் பெற்றுள்ளது.

- பழ.நெடுமாறன்
- பெ. மணியரசன்
- சுப. வீரபாண்டியன்
- எஸ்.வி. ராஜதுரை

ஆகியோர் எழுதியுள்ள நூல்களும் அனைத்துத் தமிழ்த் தேசிய நூல்களும் தலித்திய, பெண்ணிய நூல்களும், தமிழின உணர்வாளர்களின் உரைகள் அடங்கிய ஒலிநாடாக்களும் அங்கு கிடைக்கும்.

வாருங்கள் தமிழர்களே!

*தமிழ் முழக்கம் விற்பனையகம்*
*2/66 நூறடிச் சாலை, வடபழனி*
*சென்னை - 26 தொலைபேசி : 372 16 59*

(வி-ம்)

## தமிழர் திருவிழா

உழைக்க மறுத்து நம் உழைப்பை சுரண்டிக் கொழுக்கும் கூட்டத்தை வீழ்த்திட, உழைக்கும் மக்களின் வாழ்வியல் திருநாளாம் 'பொங்கல் விழா' வினை மதவேறுபாடுகளின்றி 'தமிழர் தேசியத் திருநாளாக' - உழைக்கும் தமிழ் மக்கள் அனைவரும் எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் கொண்டாடுவோம்.

ஆதிக்க சாதிவெறியை வேரறுக்கவும், தேசிய, இன, மொழி, வர்க்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் களத்தில் போர்க்குரல் எழுப்புகின்ற விழாவாக - இத்தமிழர் திருநாளில் ஆர்ப்பரிப்போம், சூளுரைப்போம்.. வாரீர்... ஆதரவு தாரீர்...

ஆதிக்க சாதித் திமிரை வேரறுப்போம் - உழைக்கும் தமிழ் மக்களை ஒன்றிணைப்போம்.

- *நாள் : 15.1.2002* ■ *மாலை 5.00 மணி*
- இடம் : சண்முகபுரம், அம்பேத்கர் பாலம் சென்னை - *600 004*

■

ஒருங்கிணைப்பு
**அயோத்தி தாசர் பேரவை**
*30, காந்தி நகர், சண்முகபுரம்*
*மயிலாப்பூர், சென்னை - 4*



படிப்பகம்

மடல்கள்

# தமிழர்களைக் குறைக்க ஒரு திட்டம்



◇ 'நிறைவேறியது அம்பேத்கர் கனவு' செய்திக் கட்டுரையில், 'தேர்தல் நேரங்களில் போதை தரும் மதுபான வகைகளைப் பயன்படுத்தக் கூடாது' என்று தலித் மக்கள் எடுத்த உறுதிமொழி - அனைவருக்குமான பாடமாகும். இதன் மூலமே தலித் மக்கள் தங்களின் எதிரிகளை அடையாளம் காணும் அறிவு கிடைக்கும். தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்க மத்திய அரசு போட்டிருக்கும் திட்டமே கூடங்குளம் அணுமின் நிலையம்.

ஜே.டி. மூர்த்தி, *வேலூர்*

■ கொடியன்குளம், குண்டுப்பட்டி கொடுமைகளை விஞ்சும் சங்கரலிங்கபுரத்தின் கொடுமைகளைச் சுட்டிக்காட்டிய அட்டைப் படத்தையும் செய்திகளையும் பார்க்கும்போது, காட்டுமிராண்டி காக்கிச் சட்டைகளுக்கும் ஆண்டை முதலைகளுக்கும் எதிராக - ஆயுதப் படையை நாம் கட்டியாக வேண்டும் என்ற உணர்வு கொப்பளிக்கிறது. தலித் முரசுக்கு நன்றி சொல்வதைவிட, தோள் கொடுக்கத் தயாராகி விட்டோம்.

எம். ரமேஷ், *அவினாசி*

■ மருக்காலம்பட்டியை எழவு வீடாய் ஆக்கிய சாதி வெறியர்களை அடையாளம் காட்டிய தலித் முரசுக்கு நன்றி.

பொ. விஜயகுமார், *பொய்கை*

■ முனைவர் தொ. பரமசிவன் பேட்டி கண்டேன். சிறுதெய்வ வழிபாட்டு முறையினை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே பகுத்தறிவு அனுமதிக்க முடியும். ஏனெனில், வழிபாடு என்பது எந்த வகையில் வெளிப்பட்டாலும், அங்கே மூடநம்பிக்கை தானாகவே தளம் அமைத்துவிடும்.

ருத்ரன், *காவேரிப்பட்டிணம்*

■ சங்கரலிங்கபுர தலித் மக்கள் மீதான தாக்குதல் - மீண்டும் ஆயுதங்களைக் கையிலெடுக்க வேண்டியதன் அவசியத்தையே உணர்த்துகிறது.

மே.கா. கிட்டு, *மேட்டூர் அணை*

■ நமது குழந்தைகளின் கல்வியைத் திருடியது யார்? - இன்றைய குழந்தைகளைக் காப்பாற்ற உதவும். சட்டம் போட்ட அரசே அதை மீறும்போது அதைக் கண்டிக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

வெ. சீனிவாசன், *வடசென்னிமலை*

■ தலித் முரசில் சிறப்பான முறையில் சமூகக் கண்ணோட்டத்துடன் போட்டி அறிவித்திருப்பது மிகுந்த வரவேற்புக்குரியது.

மு. முனிராசு, *மூக்கம்பட்டி*

■ 'அம்பேத்கர் பெயரில் வெப்சைட் வாஜ்பேயி துவக்கினார்' என்று தலைப்பிட்டு 7.12.2001 அன்று 'தினமலர்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. அதில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு....' என்று எழுதியுள்ளது. டிசம்பர் 6- புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவு நாளைப் பிறந்த நாள் என்று இவ்வேடு வெளியிட்டிருப்பது வெட்கக் கேடானது.

மு.வ. பர்குணன், *பூண்டி நீர்த்தேக்கம்*

■ 'தலித் முரசு' டிசம்பர் இதழ் தலையங்கம் வழமைக்கு மாறாக இருந்தது. பல பிரச்சினைகளில் ஆணித்தரமாக கருத்துகளை முன்வைத்த தலித் முரசு, கல்வி - காவிமயமாக்கப்படும் முக்கிய பிரச்சினையில் - இந்துத்துவவாதிகளிடம் வேண்டுகோள் விண்ணப்பமிடுவது வியப்பை அளிக்கிறது. தலித் முரசிடம் மக்கள் எதிர்பார்ப்பது வேண்டுகோளை அல்ல; எச்சரிக்கைகளை. நாம், குழந்தைகளை விட்டுவிடுங்கள் என்று ஒருபோதும் கெஞ்சக் கூடாது. அக்குழந்தைகளின் காவலர்கள் நாம்; அதைக் காப்பாற்ற வழி சொல்லுங்கள்.

குடியரசன், *கூளைமேடு*

■ தலித் முரசின் லட்சியம், கொள்கை கண்டு பூரிப்படைந்தேன். இன்றைய சூழ்நிலையில் மார்க்சியவாதிகளே தலித்தை மறந்து கொண்டிருக்கும் வேளையில், தங்களின் பணி போற்றுதலுக்குரியது.

ஜி. மாஜினி, *செங்குன்றம்*

■ சங்கரலிங்கபுரம் கிராமத்தில் தலித்துகள் மீது காவல் துறையினர் நடத்திய தாக்குதலைப் பற்றி எந்த ஒரு அரசியல் கட்சித் தலைவரும் அறிக்கை கூட விடவில்லை என்று குறிப்பிட்டுள்ளீர்கள். நான், சங்கரலிங்கபுரம் கிராமத்தைச் சுற்றியுள்ள தலித் இளைஞர்களுடன் 21.11.2001 அன்று சங்கரலிங்கபுரத்திற்குச் சென்ற போதும், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜேந்திரன் தலைமையில் குழுவாக பார்வையிடச் சென்ற போதும், காவல் துறையினர் எங்களை ஊருக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. இச்செய்தி 'ஜனசக்தி' யில் வெளிவந்துள்ளது.

எம். அப்பாத்துரை
*மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தூத்துக்குடி*

## எந்த 'இசமும்' காப்பாற்றாது

'பேரழிவிற்கு சிவப்புக் கம்பளம்' - அசுரன் எழுதிய கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்த கட்டுரை படித்தேன். இந்துத்துவ வெறியர்களின் அணுக்கனவுகளை செருப்பால் அடிப்பதுபோல இருந்தது இக்கட்டுரை. மனித இனத்தை நிர்மூலமாக்கும் அணுஉலைகளை காங்கிரசும் பா.ஜ.க.வும் - தங்கள் வல்லரசு தினவுகளை சொறிந்து கொள்வதற்காகவே ஆதரிக்கின்றன. ஆனால்,வேதனையும் வெட்கமுமான விஷயம் என்னவெனில், உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி - அணுஉலைகளுக்கு எதிராக பொது மக்களைத் திரட்ட வேண்டிய கம்யூனிஸ்ட் கட்சியோ, கூடங்குளம் அணுமின் நிலையம் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவை என்கிறது.

மேலும், அணுஉலையைக் கடுமையாக எதிர்க்கும் கூடங்குளப்பகுதி மீனவர் போராட்டத்தை - 'அந்நிய நாட்டு சதி' என்று கொச்சைப்படுத்துகிறது. தங்கள் நண்பன் ரஷ்யாவின் தொழில் நுட்பத்தோடு கூடங்குளம் அணுமின் நிலையம் தயாராவது, கம்யூனிஸ்ட்டுகளுக்கு இன்று வேண்டுமானால் புல்லரிக்கலாம். ஆனால், எதிர்கால கொடூர நிகழ்வுகளுக்கு அவர்கள் பதில் சொல்லியே தீரவேண்டும். மக்களை நாசமாக்கும் அணுஉலையில் சோஷலிசம் என்ன? முதலாளித்துவம் என்ன?

- அசோக், *ராமேஸ்வரம்*

www.padippakam.com



# நாகம்மாள் மறைவு நன்மையைத் தருவதாகுக!

என்னதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11.5.1933 ஆம் தேதி மாலை 7.45 மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு லாபமா, நஷ்டமா என்பது இது சமயம் முடிவு கட்ட முடியாத காரியமாய் இருக்கிறது.

எப்படியிருந்தாலும், நாகம்மாளை 'மணந்து' வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருட காலம் வாழ்ந்து விட்டேன். நாகம்மாளை நான் தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல், நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை.

நான் சுயலநல வாழ்வில் 'மைனராய்', 'காலியாய்', 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் - எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறுக்க முடியாத காரியம்.

பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ - போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால், நாகம்மாளோ பெண் அடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு கொடுமையாகவும் மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்து கொண்டிருந்தார் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நான் காங்கிரசிலிருக்கும் போது, நாகம்மாள், மறியல் விஷயங்களிலும் வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.



ஆகவே, நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே! எது எப்படியிருந்த போதிலும், நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கையை எய்தினார். இதிலொன்றும் அதிசயமில்லை.

ஆதலால், நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் 'குடும்பத் தொல்லை' ஒழிந்தது என்கின்ற ஓர் உயர் பதவியையும் அடைய இடமேற்பட்டது.

இது நிற்க. நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும் லாபமான காரியத்திற்கும் பயன்படுத்திக் கொள்கின்றேனோ, அந்த மாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்திக் கொள்ள மாட்டார். அதற்கு நேரெதிரியடையாக்குவதற்கே உபயோகித்துக் கொள்வார். ஆதலால், நாகம்மாள் நலத்தைக் கோரியும், நாகம்மாள் எனக்குமுன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

2,3 வருடங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சங்கராச்சாரிகள் போல - (அவ்வளவு ஆடம்பரத்துடனல்ல - பண வசூலுக்காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பிரயாணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நமக்கென்று ஒரு தனி வீடோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசமோ என்பது கூடாதென்றும் கருதி இருந்தது உண்டு.

ஆனால், அதற்கு வேறு எவ்வித் தடையும் இருந்திருக்கவில்லையென்றாலும், நாகம்மாள் பெரிய தடையாய் இருந்தார். இப்போது அந்தத் தடை இல்லாமல் போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆதலால், நாகம்மாள் முடிவு நமக்கு நன்மையைத் தருவதாகுக!

*'குடிஅரசு' - 14.5.1933*

> “ 'செத்தால் அழ வேண்டும்; பிறந்தால் சிரிக்க வேண்டும்' என்ற ஞானமொழிப் படி, நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும், ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல், அதை ஒரு மகிழ்ச்சியாகவும் லாபமாகவும் கருத வேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல், அதை உண்மை என்றும் கருதுகிறேன். ”

படிப்பகம்

ZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG-151 / 2001 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
gistered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47


















இலங்கையில் தமிழர்களுக்கு பாதிப்பு என்றவுடன், ஈழத் தமிழர் மாநாடு நடத்துபவர்கள், டெல்லியில் பெரியார் மய்யம் தகர்க்கப்பட்டதற்காக, மனிதச் சங்கிலி போராட்டம் நடத்துபவர்கள், ஒரு சிலை அகற்றப் பட்டதற்காக உயிரையேவிடத் தயாரா கின்றவர்கள், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டவுடன் பதறிப் போகின்ற வர்கள், மனித நேயம் பேசும் இலக்கி யவாதிகள், சேரித் தமிழர்களின் வாழ் வியல் உரிமைகள் நசுக்கப்படுகின்ற போது, அவர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப் படுகின்றபோது மட்டும் – கைகட்டி வாய் பொத்தி நிற் கிறார்கள் என்றால், இவர்கள் சாதியத் தின் – தீண்டாமையின் காவலர்க ளேயன்றி வேறென்ன?

Owned and Published by P. Chandragesan from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan